கம்பனும்

நாடகக் கலையும்

அ.கு.ஆதித்தர்



வானதி
பதிப்பகம்

கம்பரும்
நாடகக் கலையும்

8/6

அ. கு. ஆதித்தர்

வானதி பதிப்பகம்

கம்பரும்
நாடகக் கலையும்

மகாகவி அ. கு. ஆதித்தர்

வானதி பதிப்பகம்
தி.நகர் - சென்னை-17

முதற்பதிப்பு : மே 1981
8.5.81. புதுவைக் கம்பன் விழாவில் வெளியிடப் பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

இந்நூல் 10 சுவைகளும் நடிப்புப் பயிற்சிக்கு
ஏற்ற பாடங்களும் நிறைந்தது.

விலை ரூ. 9—00

அச்சிட்டோர்
நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
137, ஜானி ஜான் கான் ரோடு
சென்னை—14, தொலைபேசி 82731

பதிப்புரை

மகாகவி அ.கு. ஆதித்தர் அவர்கள் கம்பரில் ஊறித் திளைத்தவர்கள். அவர்கள் எழுதிய "கம்பர் கவிநயம்" முதன்முதல் என்னால் வெளியிடப் பெற்றது. அதன் நுட்பங் கண்டு பலர் அதனைப் பாராட்டினார்கள். பின்னர் அவர்கள் எழுதிய "கம்பர் கவித்திறன்" என்னால் வெளியிடப் பெற்றது. முந்திய நூலைப் போலவே, "கவித்திறனும்" சிறந்த பாராட்டுப் பெற்றது.

இப்போது அவர்கள் எழுதிய "கம்பரும் நாடகக் கலையும்" என்ற நூலை வெளியிடுகின்றேன். இதனை வாசிப்பார் நம் மகாகவி கம்பனில் எத்துணை ஈடுபாடு உடையார்; எத்துணை நுட்பமாக ஆராய்கிறார்; எத்துணை அறிவு புகட்டுகிறார் என்பதை நன்கு உணர்வர்.

யான் அவர்கள் நூலை வெளியிட்டது போலவே டாக்டர் ரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்களும் மகாகவி தொகுத்த "கம்பர் 1000" என்னும் நூலை வெளியிட்டார்கள். இப்பொழுதும் "கம்பர் 1000" உரையுடன் வெளிவருவதாக அறிகிறேன். கம்பரை உண்மையாக உணர்ந்து துய்க்க வேண்டுமானால், திரு ஆதித்தர் அவர்களின் நூலைக் கட்டாயம் படிக்கவேண்டும்.

பிறர் எல்லாம் பக்திக்காகக் கம்பர் காவியத்தைப் படிப்பார்கள்; பாராட்டுவார்கள். மகாகவி ஆதித்தர் அவர்கள் தமிழ் வளம், ஒழுக்கம், பண்பாடு, அறிவு இவற்றை விளக்க ஒரு பெருஞ் சாதனமாகக் கம்பரைக் கையாளுகிறார்கள். இந்த நூலில் பக்தி பற்றியும் மிக விரிவாக நாடகம் நடத்துகிறார்கள். அவர்கள் நீடு வாழவேண்டுமென்று ஆண்டவனை வேண்டுகிறேன்; அவ்வாறே யாவரும் ஆண்டவனை வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்நூல் புதுவையில் நடைபெறுகிற கம்பன் விழாவில் வெளியாகிறது. மிகச்சிறந்த கம்பன் ரசிகர்கள் கூடுமிடத்தில் வெளியாவதை மிகப்பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

தமிழ்மக்கள் இந்நூலைப் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

ஆசிரியர் முன்னுரை

கற்பக விநாயகர் தம் கழலிணை போற்றி போற்றி
பெற்றவர் பாதம் போற்றி, பெருந்தமிழ் அறிவு தந்த
சற்குணச் சான்றோர் போற்றி, முத்துமா ஞானி போற்றி
கற்றயாவரினும் மீக்க கம்பர் தாள் போற்றி போற்றி

தெய்வம் ஒப்பக் கம்பரைப் போற்றி வரும் யான் இன்று "கம்பரும் நாடகக் கலையும்" என்ற நூலை எழுதுகிறேன். கம்பர் பற்றிப் பேசவைத்து, என்னைப் பலர் அறியச் செய்த சென்னை Y.M.C.A. பட்டி மன்றச் செயலாளர் திரு பக்தவத்சலம், அதன் தலைவர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம் இவர்கட்கு யான் மிகக் கடமைப் பட்டுள்ளேன். எனக்குத் தம் வாக்கினால் நல்ல ஊக்கந் தந்த திரு செயராமன், திரு கிருஷ்ணசாமி பாரதி M.A.B.L. இருவருக்கும் என் நன்றி உரித்து.

கம்பன் கவி மதுவில் மயக்குற்று நிற்கும் எனக்கு மேலும் மேலும் புதுப்புது விருந்தளித்து வருபவர் திரு S. நல்லபெருமாள் அவர்கள். அவர்கள் நீடு வாழ்க! யான் அறிந்தவற்றை எழுத, அவற்றை நூலாக வெளியிட்டு வருபவர் வானதி. திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கள். கம்பர் பற்றி எழுதுவோரில் சிறந்த ஒருவராக என்னைத் தமிழுலகம் அறியச் செய்த அன்னார்க்கு மிக மிக நன்றி.

இந்நூல் 10 சுவைகளோடு நடிப்புக்குரிய பாடங்களையும் சேர்த்து எழுதியுள்ளேன். இவற்றைப் பொருள் உணர்ந்து நடித்துப் பயில்வோர் சிறந்த நடிகராவது மட்டுமன்றி, ஒழுக்கம் என்பது யாது, பண்பாடு என்பது யாது என நன்குஉணர்வர். *இக்குறியிட்ட பாடல்கள், கற்பார் எளிதில் பொருள் உணருமாறு சில எம்மால் எழுதப்பட்டவை, சில மூல பாடம் எளிதாக்கப் பெற்றவை. இதுவரைக் கம்பர் பற்றி 5 நூல்கள் எம்மால் வெளிவந்துள்ளன "கம்பர் 4000" என ஒன்று கைப்பிரதியாக உளது. அது என்று, எவரால் வெளிவருமோ, அறியேன். தெய்வம் அது வெளிவரத் துணை செய்யுமாறு வேண்டுகிறேன்.

கம்பர் வளாகம் — அ. கு. ஆதித்தர்
சீனிவாசராவ் தெரு — 5-5-81
மயிலாப்பூர், சென்னை-4

உள்ளடக்கம்

கம்பரும் நாடகக் கலையும்

கம்பரும் நாடகமும்

1—1 கம்பர்

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்,
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வன போல் மாயா; புகழ்கொண்டு
மற்றிவள் செய்யும் உடம்பு.

பிரமன் படைப்பு அழியும் தன்மைத்து; கலைமகள் படைப்பு அழியா—நிலையாய தன்மைத்து என்பது பொருள். கல்வியிற் சிறந்த பெரும் புலவர்கள் தம் படைப்புகளால் புகழ்நிறுவி அழியா வாழ்வு பெறுகிறார்கள்.

உலகின் ஒவ்வொரு மொழியிலும் பெரும் புலவர்கள் தோன்றிப் பெருநூல்கள் தந்துள்ளார்கள். கிரேக்க ஓமர் எழுதிய இலியட் உலகின் ஆதிகாவியம்; அது மொழி பெயர்த்தற் கரியது எனப் பாராட்டப் பெறுவது. சூரியன் மறையா ஆங்கிலப் பேராட்சியில் சேக்சுபியர் உலகப் பெரும் புலவராகப் போற்றப் பட்டார். அவர் எழுதிய நாடகங்கள் பல. இவர்களை ஒத்த பெரும் புலவர்கள் பலர் மேல் நாட்டிலும் வட நாட்டிலும் வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் நூல்களில் எல்லாம் நூற்றுக்கு 5 வரி, அல்லது பத்து வரிகள் பாராட்டுடன் விளக்கமாக எடுத்துப் பேசப்படும். ஆயின்

நம் தமிழ் நாட்டுக் கம்பன் எழுதிய இராமாயணம் 12000 பாடல்களில் நூற்றுக்கு 8 வரியேனும் சுவையற்றதாகத் தோன்றவில்லை; தொட்ட இடமெல்லாம் மணக்கிறது கம்பன் காவியம். பன்மொழிக் காவியங்களையும் கற்றுணர்ந்த பெரியோர்கள் கம்பரே எப்புலவரினும் ஏற்றம் உடையவர் என்று கூறுகின்றனர். தமிழ் நாடு சமயத் துறையில் சமச்கிருதத்துக்கும், ஆட்சித்துறையில் ஆங்கிலத் துக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த நிலையில் அது தமிழின் பெருமையையும் தமிழ்ப் புலவர்களின் அருமையையும் அறிந்து பாராட்டும் திறனற்றுத் தொழும்பர் நிலைஎய்தியது. தெய்வம் பெரியது, அரசு அதிகாரமுடையது: ஆதலின் அந்நெறி நிற்பது தமிழர் இயல்பாயிற்று.

இற்றை நாள் தமிழர் தூக்கம் விட்டு எழுவாராய்த் தோன்றுகிறார்கள்; எழுந்து நிமிர்ந்து நிற்பது எந்நாளோ? எழுந்து நிமிர்ந்து அறிவு அடக்கத்துடன் அறந்தழுவி நிற்பின் நன்று! நன்று!

யாம் பிறரால் பெற்ற கேள்விச் செல்வம் ஒன்று. காலஞ் சென்ற வ. வெ. சு. ஐயர் அவர்கள் சென்னைக் கடற்கரைக்கு உலாவச் சென்று ஒரு பெஞ்சில் உட்கார்ந்திருந்தார். உலாவச் சென்ற கல்லூரி மாணவர் சிலர் அவர் ஓரமாகத் தம் பள்ளிப் பாடம் பற்றிப் பேசிக்கொண்டே போயினர். ''மில்டன் மாலை இருளைப் பற்றி என்ன அழகாகப் பாடியிருக்கிறான்! கண்முன் இருட்டைப் பார்ப்பதுபோல் இருக்கிறதே! தமிழில் இப்படி உண்டோ? யார் இப்படிப் பாட முடியும்?'' இம் மொழிகள் ஐயர் காதில் விழ, அவர் உடனே தம்மையும் அடக்க முடியாதவராய் ''ஏ தம்பிமாரே, இங்கே வாருங்கள்; நான் ஒன்று சொல்லுகிறேன். கேளுங்கள்'' என்று கூறிப் பேசத் தொடங்கினார்.

"அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" இதுபடித்திருப்பீர்கள். இராமன் அப்பால் அகன்றான்: சீதை அறையுள் இருந்தாள், மாலைப்பொழுது முடிந்து, இருள் வந்தது. எப்படி?

கடலோ, மலையோ, முழுநீலக் கல்லோ,
காயா நறும்போதோ,
படர்பூங் குவளை நாள்மலரோ,
நீலோற்பலமோ, பானலோ,
இடர்சேர் மடவார் உயிர்உண்பது
யாதோ,என்று தளர்வாள்முன்
மடல்சேர் தாரான் நிறம்போலும்
அந்திமாலை வந்ததுவே

(மாணவர் ஆர்வத்துடன் கூர்ந்து கவனிக்கின்றனர், அவர்களின் ஆர்வத்தைக் கண்ட ஐயர்)

ஆலம் உலகில் பரந்ததுவோ,
ஆழிகிளர்ந்ததோ, அவர்தம் (இராமன்)
நீலநிறத்தை எல்லோரும் நினைக்க
அதுவாய் நிரம்பியதோ,
காலன் நிறத்தை அஞ்சனத்தில்
கலந்து குழைத்து, ஆகாயத்தின்
மேலும் கீழும் மெழுகியதோ,
வினையே இருளாய் விளைந்ததுவோ?

ஒவ்வொரு அடியையும் திரும்பத் திரும்பச் சொல்லிப் பொருட்சுவை மாணவர் மனத்திற் படியுமாறு செய்ய—மாணவர் மனம் உருகி "ஐயா, கம்பன் மிகமிகப் பெரியவன்; மண்ணுலகிலிருந்த எங்களை மேலே தூக்கி விண்ணில் நிறுத்திவிட்டான். இவற்றை யெல்லாம் எங்களுக்கு அறிவிப் பாரில்லை. தங்களுக்கு மிகமிக நன்றி; இதனை நாங்கள்

என்றும் மறக்கமாட்டோம், போய் வருகிறோம், வணக்கம்" என்று கூற: ஐயர் "தம்பியரே, கம்பரைப் படியுங்கள், தினம் ஒரு பாட்டுப் படியுங்கள், அவரை ஒத்த புலவர் உலகில் எவரும் இலர். நீங்கள் அவரைப் படிப்பது தேசத் தொண்டு, மொழித் தொண்டு; நல்ல அறிவு பெற்று உள்ளம் இன்புறலாம், போய் வாருங்கள்'' — என்றாராம்.

திரு. T. K. C. அவர்கள் நீதிபதி மகாராசபிள்ளையவர் களிடம் தம் கடைசி நாளில் ஒரு வேண்டுகோள் விடுத் தார்கள். "ஐயா, T. K. C. என ஒருவன் இருந்தான்; அவன் உலகிற் சிறந்த மொழி தமிழ், புலவரிற் சிறந்தவன் கம்பன் என்று எந்நாளும், இறக்கும் நாளினும் கூறிக் கொண் டிருந்தான் என்று நீங்கள் உலகுக்கு அறிவிக்க வேண்டும்'' — இஃதே அவர்கள் வேண்டுகோள்.

இத்தகைய முறையில் கம்பன் மொழிவளம் உடையவன், கருத்துவளம் உடையவன். கற்பனைவளம் உடையவன், பெருமிதநெறி நிற்பவன், உவமைகளில் உயர்ந்து நிற்பவன். உயர்வன்றித் தாழ்வு அறியாதவன்; ஆதலின் உயர்வைநாடும் நாம் ஒவ்வொருவரும் கம்பனைக் கற்பது நம் கடமையாகக், கருதல் வேண்டும்.

இந்திய தேசியப் புள் மயில், ஏன்? அது அழகு மிக்கது. அழகு எதனால் வந்தது? அதன் நீண்ட தோகை களாலும், அது கொண்டுள்ள வண்ணங்களாலும். அதே போல் கம்பன் பாக்கள் தோகை பெற்று மிளிர்கின்றன, பல வண்ணங்கள் கொண்டுள்ளன. (11. பக்திச் சுவை viii, அனுமான் சுக்கிரீவன் வாலி கும்பகர்ணன் வாக்கு 'மஞ்செனத் திரண்ட—"கண்டனன் என்ப —"கண்டனன் வதனம்—"மும்மைசால்—இவற்றைப் பாடி உணர்க.) மேலும் சில சான்றுகள் தருகிறேன்.

இராவணன் அனுமான்வாலில் தீக்கொளுவி விட்டான். இதனை யறிந்த சானகி அங்கியங் கடவுளை வேண்டு கிறாள்.

எரியே, இவனே இராமற்கும்
எனக்கும் உற்ற பெருந்துணைவன்,
எரியேல் இவனை எனவேண்டி
நின்றாள்—சனகன் திருப்பாவை*

என்று பாடினால் தெளிவாக எளிதாகப் பொருள் விளக்கமாக இருக்கும். ஆனால் கம்பர் பெருங்கவிஞர்; அவர் கவி தோகை பெற்றுப் பறக்கிறது. எவ்வாறு?

தாயே அனைய கருணையினான்
துணையை, ஏதும்தகவில்லா
நாயே அனைய வல்லரக்கர்
நலியக் கண்டால் நல்காயோ?
நீயே உலகுக்கொரு சான்று,
நினக்கே தெரியும், யான்கற்பின்
தூயேன் என்னில், தொழுதுரைத்தேன்
தீயே, அவனைச் சுடேல் என்றாள்.

"யான் கற்புடைய ஒருத்தியாயின், அவனைச் சுடாதே" என்று, அவள் மாண்பு காக்க எரிஅடங்கும்படி ஆணித்தரமாக உரைத்ததாகப் பாட்டு. மற்றொன்று. இந்திரசித்து வித்தையில் வல்லவன். இலக்குவனுடன் பொருது நிற்கிறான். தன்மாயங்களால் பகைவர்கண்ணியில் அகப்படாமல் தப்பும் ஆற்றல் படைத்த அவனை மாய்க்க வேண்டும். வகை என்ன?

"மறைகளே தேறத் தக்க—
வேதியர் வணங்கற்பால—

816

இறையவன் இராமன் என்னும்
நல்அற மூர்த்தியாயின்
பிறைஎயிற்று இவனைக் கோறி''
என்றுஒரு பிறைவாய் வாளி
நிறைவுற வாங்கி விட்டான்,
உலகெலாம் நிலைக்க வைப்பான்

''இராமன் அறத்தின் மூர்த்தியாயின், அம்பே, அவனை அழி'' என்று கூறி—இராமன் மாண்பு பழுதுறா வகைக்கு அம்பு அடங்கி நிற்கும் வண்ணம் கவிபாடி, ஏற்ற முறுகின்றார் கம்பர்.

எம் ஆசிரியர் ச. த. சற்குணர் அவர்கள் எமது ''கற்புக் கனலு"க்கு அளித்த முகவுரையில் Prose is walk, Poetry is dance என எழுதியிருக்கிறார்கள். இதனைத் தமிழில் தரின்

உரையொடு செய்யுட் கொப்புயாம் உரைப்பின்
நடையொடு நாட்டியமாம் இவற்றியல்பே.

கம்பன் சிறந்த நாட்டியம் ஆடுகின்றான்: அலாரிப்பு, சதிசுரம், வருணம், பதம், தில்லானா—இன்னும் என்னென்ன ஆடலாமோ அத்தனையும் பாடலிற் காட்டுகின்றான். இடங்கண்டு அவன் வண்ணங்களை மாற்றுகிறான், இதனால் எழுச்சியூட்டுகிறான்: ''வண்ணமும் தொண்ணூற்றாறே''.

கன்னி—மழை—காளை—மணம்—போர்வீரர்
குரங்கு—அன்னம்—அழுகை—ஆடல்
எந்நடையில் நடக்கும், அவ்வியல் நடையில்
கவிபாடி ஏற்றம் ஆனான்.

(கற்புக்கனல்)

நாம் எடுத்துக் கொண்ட பொருள் ''நாடகக் கலை". அதுபற்றி யாம் கூறும் ஒவ்வொரு இடமும் கம்பன் பெரு

மையை விளக்கிநிற்கும்: ஆதலின் கம்பர் பற்றிக் கட்டுரையை நீட்டாமல், இனி நாடகக் கலை பற்றிக் கூறுவோம்.

1—2 நாடகம்

வாயின் சுவையை ஆறே வகையாய் வகுத்தாலும்
ஆயின் அதுதான் அவ்வள வுள்ளே அடங்காதால்:
தேயத் துறைவார் வாழ்வின் சுவைஒன் பான்என்பர்,
ஆயப் புகுங்கால் அதற்கும் ஆங்கோ ரளவின்றே.*

நாடகம்

'நாடகமே உலகம், நாளை நடப்பதை யார் அறிவார் என்று ஒரு பாட்டு அண்மையில் யாவர் வாயிலும் உலாவியது' ஆங்கிலத்திலும் The world is but a stage என ஒரு கவி உண்டு. முந்திய செந்தமிழ் ஞானி ஒருவர் ''தந்தை தாய் தமர் தாரம் இவையெல்லாம் சந்தையிற் கூட்டம் இலையோ? என்று பாடியுள்ளார். உலகெலாம் ஒப்ப நிற்கும் நம் முப்பாலார்'' ''கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே'' என ஒரு செய்யுள் நிறுவியுள்ளார். இவற்றின் கருத்து என்னை?

முப்பால் தந்த வள்ளுவர் இன்று யாண்டு உள்ளார்? முடிபுனைந்து ஆண்ட மூவேந்தர் யாண்டுளார்? இறவா வாழ்வு தருவதா யுரைத்த வள்ளலார் யாண்டுளார்? யோக முறைகளைத் தெளிவாகக் கூறலானார் என்னும் திருமூலர் யாண்டுளார்? சித்தர்கள் யாண்டுளார்? சிரஞ்சீவி எனக் கூறப் பட்ட வீடணர் அனுமார் யாண்டுளார்? என்றும் பதினாறு வயது இளமையோடிருக்கிறார் என்று புராணிகர் கூறும் மார்க்கண்டேயர் யாண்டுளார்? யாவரும் இருந்த இடம் தெரியாது கரந்துளார். எதனை ஒப்ப?

சந்தைநாளில் கத்திரிக்காய் வாழைக்காய் தேங்காய் பழம் உப்பு புளிவற்றல் அரிசி பருப்பு உழுந்து பாசி பவளம்

சந்தனம் குங்குமம் பலவகைப்பட்ட பொருள்களையும் கொண்டுவந்து குறித்த இடத்தில் அமர்ந்து கூவி விற்றுப்பின் அந்திப் பொழுது ஆனதும் யாவரும் கலைந்து கரந்து நிற்பது போல—கூத்துப் பார்க்க, —நாடகம் பார்க்க,— திரைப்படம் பார்க்க,-சருக்கசுபார்க்கஆடவர் மகளிர்,சிறுவர் இளைஞர்முதி யோர்யாவரும்வந்து கூடிக் கண்டுகளித்துக் கூத்துமுடிந்ததும் கலைந்து கரந்து நிற்பது போல; உலகம் ஒரு நாடகமேடை யாகும். உயிர் வாழ் மக்கள் நடிகரும் ஆவர், காண்பாரும் ஆவர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு உருத்தாங்கி நடித்துக் கொண்டே அடுத்தவரின் நடிப்பைப் அனுபவித்துக் கொண்டு மிருக்கிறார். அந்தணன் அரசன் வாணிகன் வேளாளன் அறிஞன் புலவன் மருத்தன் எழுத்தன் விஞ்ஞானி விஞ்சையன் ஓவியன் பாணன் கொல்லன் தச்சன் வண்ணத்தன் சுண்ணத்தன் ஆட்டன் பாடகன் புரோகிதன் புராணிகன் நெசவன் குசவன் திருடன் கொலைஞன் மீனவன் கானவன் இவ்வாறு பல வேடங்களிற் பலரும் நடித்து உருக்கரந்து போகின்றார். ஒருவருக்கொருவர் அன்பு அணைப்பு இணக்கம் பிணக்கு இரங்கல் இழித்தல் வெறுத்தல் வியத்தல் ஒறுத்தல் நகைத்தல் செருக்கு பணிவு ஆகிய பல்வேறு வகையான நடிப்பும் உலக மேடையில் நடைபெறு கின்றது. இந்த நடிப்பின் 'மெய்ப்பொருள்' காண்பார் சிலர், உணர்ந்தறியும் திறன் இலராய் இந்நடிப்பை மெய்ம்மையாகக் காண்பார் பலர். உண்மை என்பது என்றும் உள்ளது. அதற்கு ஒரு நடிப்புக் காட்டுவதே நாடகம். அது மக்களுக்கு அறிவு, இன்பம் ஊட்டுவதற்கு ஏற்பட்ட ஒரு ஆட்டம் ஆகும். இந்நடிப்பு நாடகத்தில் வரும் சுவைகளை 8 என உணர்த் தினார் ஆசிரியர் தொல்காப்பியர்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

இவ்வாறு 8 என்று 11 சூத்திரங்களில் விளக்கி, அதற்குமேல் ஒட்டு வைத்த முறையாக 15 சூத்திரங்கள் அமைத்து இறுதியில்"—தெரியின்....

நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"—

மெய்ப்பாட்டின் விளக்கத்தை எண்ணி அளவிட முடியாது எனப் பகர்ந்துள்ளார். மேற்கண்ட எட்டுச் சுவைகளுடன் 'சமனிலை' ஒன்று சேர்த்து ஒன்பான் சுவை—நவரசம் என்று கூறுவதே உலக வழக்கு. ஆயின் கம்ப நாடர் கருத்து ஒன்று கூறுகிறேன். அகப்பொருள் பற்றிய துறைகள் "காட்சி வேட்கை உள்ளல் மெலிதல் செப்பல் நாண்துறத்தல் உரு வெளி மறதி மயக்கம் சாக்காடு" எனப் 10 ஆக இலக்கண ஆசிரியர்கள் கூறுவர். கம்பர் இதனை,

பாயிரம் உணர்ந்து நூலோர் காமத்துப் பகுத்த பத்தி
ஆயிரம் அல்ல போன; ஐயிரண்டு என்பார் பொய்யே
(மாயா சனக 14)

அகப்பொருட் சுவை பத்துள் அடங்காது, ஆயிரத்துக்கும் அப்பால் போகும் என விளக்கி நின்றார். அதுபோன்றே சுவை 9 என்பதும் ஓராயிரத்துக்கும் மேலாகும்.

நடிகர்

பழந்தமிழ் நாட்டில்பாடி வாழ்வு நடத்தினோர் பாணர், கூத்தாடி வாழ்வு நடத்தினோர் கூத்தர், ஒப்பனை வேடம் புனைந்து நடித்து வாழ்வு நடத்தினோர் பொருநர். பாணர் கூத்தர் பொருநர் இவர்கள் வாழ்வு பிறர்பால் இரந்து உண்ட வாழ்வே. அத்தொழில்முறை வழிவழியாக வந்து அவர் களின் அறனாகக் கருதப்பட்டது. இழிவில்லா இயல் வாழ் வாக அது தழைத்து வந்தது. நாடகக் குழுக்கண்டு கட்டு திட்டங்களுடன் மேடையில் ஆடத் தொடங்கிய காலமு

வரைக் கூத்தரின் வாழ்வு சோற்றுக்குத் தாளம் போட்ட ஒரு சுவையற்ற வாழ்வே. நிலக்கிழார் தவிர ஏனைய யாவர் வாழ்வும் நிறைவற்ற வாழ்வே. மக்கள் தமக்குப் பொழுது போக்கு நல்கும் கூத்தர் பாணர் பொருநர்களை ஆதரித்து மகிழ்ந்தார்களாயினும், இவர்களின் வாழ்வு இழிவாகவே கருதப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இழிநிலையே எனக் கூறின் மிகையாகாது. அவர்களின் நடைமுறையும் அதற்கேற்பக் குறைபட்டிருந்தது. 1900 ஒப்ப வாழ்ந்த ஒரு பேராசிரியர் கலை இயல்பு பற்றி ஒருநூல் எழுதினார். அஃதில் நடனமாதர் பற்றி அவர் எழுதியுள்ள ஒரு செய்யுள்

''எத்தகை யோரையும் நித்தமும் தோய்தரும்
பரதம் பயிலுறு பாவைமார் போலச்
சுரத நிலையே விரதமாய்க் கொண்டவள்''

தினமும் பலவகைப் பட்டோருடன் கலவி உறவு கொள்ளும் நாடகக் கணிகையர்—என்பது இதில் அமைந்த கருத்து. இது இருபதாம் நூற்றாண்டு எழுத்து. 13ஆம் நூற்றாண்டு உரையாசிரியர்களின் கருத்து சில அறிவிக்கிறேன்.

மணிமேகலை— காதை 4, அடி 51 உரையில்:— "நாடகமடந்தையர் = நாடகக் கணிகையர்; இவரைப் பதியிலார் என்பர்." மேகலை. காதை 4, அடி29 உரையில்:— கலைகள் = பரத்தைலர்க்கு உரிய என்று நூல்களிற் கூறப் பட்ட யாழ் முதலிய..." சிந்தாமணி, கோவிந்தையர். இலம்பகம் 411 உரையில்-" இசைநாடகம் காமத்தை விளை வித்தலின் அவற்றால் பிறக்கும் காமத்தை வீணைச் செல்வம் என்றார்." அதே 9ஆம் நூற்றாண்டுச் சிந்தாமணி கூறுவது:- "கலைவல்லார் நெஞ்சிற் காமமே போல்." (மண்மகள் இலம்பகம் 6). கலைவலார் என்பதற்கு உரை பரத்தையர்,

இனி 2ஆம் நூற்றாண்டுப் பழங்காலத்துக்கு வருவோம்.

மணிமேகலை காதை 18: நாடகக் கணிகை மாதவி தாபதப்பள்ளி சேர்ந்ததைத்தடுக்கத்தாய்க்கிழவி சித்திராபதி கூறும்முறை:-*

மாதவி தன்னைச் சேர்ந்த கோவலன் மாண்டான் என்று
மாதுயர் எய்திக், கொண்ட வாழ்க்கையில் மாற்றம் காண
மாதவப் பள்ளி சேர்ந்தாள் எனின், அது மாநிலத்து
மாதர்க்கும் மைந்தரார்க்கும் நகைப்புக்காம் ஒன்றாம்
அன்றே

உற்றவன் இறக்க ஆங்கு உடன்விழுந் துயிரைநீக்கும்
பத்தினிப் பெண்டிர் அல்லேம், பலருடன் உறவுகொண்டு
வித்தகம் பேசி ஆடி வளம்எலாம் கவர்ந்து வாழ்ந்து
மற்றவர் நலிந்த காலை நாமும்மற் றொருவர்க் காண்பம்

எடுத்துநேர் இசைத்த யாழும் இறந்தனன் பாணன்
என்றால்
அடுத்த ஓர் பாணன் கையாம், அம்சிறை வண்டைப்
பார் நீ
மடுத்த நற் பூவிலுற்ற தேனது வறளு மாயின்
அடுத்துள நறும்பூ நாடிச் செல்லுமால்: நாம்அவ்
வாழ்வேம்.

புண்ணியம் இல்லை யானால், திருவிட்டுப் போதல்
போலக்
கண்ணியம் பணம்இல் லாரைக் கணிகையர் ஒழித்தல்
சாலும்
ஒண்ணிதி படைத்தாரோடு ஒன்றுதலின்றிக் கொன்னே
நண்ணுத லாமோ பள்ளி? நகைப்புக்கே இடமாம்இஃதே

இதனால் அன்று தொட்டு இன்றுவரைக் கலைக்கும் காமத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறிகிறோம்,

6 முறை திருமணம் செய்து தமது அனுபவங்களைக் கூறு கிறார் பெரு நடிகை எலிஸபத் டெயிலர்: கூறாது செயலிற் காட்டுகிறார் நம் நடிகையரிற் பலர்: அயர்லாந்து கலைமாது (television) தொலைக்காட்சியில் ஆடையின்றி நிர்வாண உருக்காட்டிப் பலருக்கு விருந்தாக நின்றார். (மாலைமுரசு 25.2.`8) வேண்டுவது பணம் ஒன்றே.

கலை வளர்ச்சி விலையைச் சார்ந்து நிற்கிறது. அந் நெறியில் விலை அதிகம் ஏறுமாயின்கலை நிலைகெட நேரிடு கின்றது.

உள்ளத்தைக் கலை கட்டறுத்து விடுகிறது, மது ஒப்ப மாயையில் ஆழ்த்துகிறது. கோவலன் இல்லறம் இழுக் குற்றதன் காரணம் என்னை? மணிமேகலை ஏன் துறவு பூண்டாள்? நிற்க—

அகப்பொருள்-இல்லறவியல் பற்றி அழகழகாக-நுட்பமாக விரித்து 27 அதிகாரங்கள் எழுதினார் வள்ளுவர்: பிற அதிகாரங்கள் 106. அவர் ஏன் "இசைநயம், கலைநயம்" என ஒரு அதிகாரம் நிறுவவில்லை? அதுதரும் பெரு விளைவை உன்னியே. கலை விலை கருதுகிறது; கலைமகள் விலைமகள் ஆகின்றாள். இதனால் அது தனிப்பட்ட வர்க்கே ஒதுக்கப்பட்டது; அவர்கள் ஒரு தனியினம் ஆயினர். அஃதும் நன்றே.

காலம் மாறிவிட்டது. காலச் சுழற்சியில் இருள் பகலா கிறது, பகல் இருளாகிறது: பள்ளம் மேடாகிறது, மேடு பள்ளமாகிறது; உறங்குகிறவன் விழிக்கிறான், விழித்திருக் கிறவன் உறக்கங் கொள்கிறான். காய் கனியாவது போலக் கலை களையாகத்தலைதூக்கி நிமிர்ந்து நிற்கின்றது;இன்றும் அது பொன்முலாம் பூசப் பெற்ற விலை மதிப்பில்லாச் சிலை யாக மிளிர்கிறது: நாடகக் குழுக்கள், நடனக் குழுக்கள்,

நடிகர் பாடகர் குழுக்கள், முழவு குழல் வீணை பிடில் பல்லி யங்களின் வல்லவர்கள் இன்று அரசியல் ஆதரவு பெறு கிறார்கள், பொதுமக்களால் போற்றப்படுகின்றார்கள். ஒரு காலத்தில் தனிப்பட்ட ஒரு இனத்தவரின் தொழிலாக இருந்த நடனம் நடிப்பு பண் இயம் எல்லாம் இன்று யாவர்க்கும் பொது ஆயின; யாவரும் பொன்மானாக விளங்குகின்றனர்.

தோற்றம்

நாடகக் கலையின் தோற்றம் யாது? வளர்ச்சி யாது அதற்கு இலக்கிய இலக்கணங்கள் யாவை என ஆராய்வோ மாயின், நாம் அதற்கு ஒருவரம்பு காண்டல் அரிது. உலகம் என்று தோன்றியதோ அன்று முதல் நாடகக் கலையும் தோன்றியதாகும். ஆதாம் ஏவாளை மக்கள் இனத்தின் முதல் படைப்பாக வைத்துக் கொள்வோம். இவர்களை வஞ்சிக்க எண்ணிய சாத்தான் பாம்பு வேடங்கொண்டு வந்தான் என்பது முந்திய வரலாற்றுக் கதை. நம் முருகன் வேடனாகவும் முதுகிழவனாகவும் வேடந் தாங்கிய கதை நாம் யாவரும் அறிந்ததே. துரியோதனன் வரும் போது கண்ணன் உறங்குகிறவனாக நடித்தான்; அர்ச்சுனன் தன் மகனுக்காக வருந்திய இடத்தில் இந்திரன் பிராமணனாக நடித்தான்; அவ்வாறே கர்ணன் முன் கண்ணன் வேதிய வேடத்தில் நடித்துநின்று சுவக்குண்டலங்களை வாங் கினான். இராவணனும் சந்நியாசியாக நடித்தான், மாலும் சிறு குள்ளனாக நடித்தான். தொந்தி பெருத்த. பேய் உருவச் சூர்ப்பநகை ஒரு இளமங்கையாக வேடங்கொண்டே இராமனை அண்மினாள். இத்தகைய நடிப்புகளைக் காணும்போது, இது ஒரு பிறப்பு இறப்பு இல்லாக் கலைஎனத் தெரிகிறது. நாய் குரைப்பது போல் சிறுவர் குரைக்கிறார்; கழுதை போல் கத்துகிறார்; கோழி போல் கூவுகிறார்; ரயில் வண்டிபோல் ஊ உடஉட ஊதுகிறார்கள். சிறுவர் தம் கையில் யாதும் இல்லாமல் காற்றாடி விடுவதுபோல் பாவனை செய்

வதும்—மிதிவண்டியில்லாமல் வண்டி ஓட்டுவது போல் காட்டுவதும்; மீசையை முறுக்குவதாகக் காட்டி அடுத்த சிறு வனைக் கடிவதும் நடிப்புக் கலையே. இவ்வாறாயின் இதன் தொன்மையை எவ்வாறு கணக்கிட்டறிவது.

அது உலகம் தோன்றிய நாள் முதல் உள்ளதாகும். ஒன்று மற்றொன்றாக உருக்காட்டும் நிலையில் நாடகம் பிறக்கிறது. மெய்ம்மை நாடகம் அன்று, அது உண்மை. அவ்வுண்மைபோல் நடிக்கும் பொய்ம்மை நாடகம் ஆகும்.

ஒரு அரங்கத்தில் கடல் காட்ட வேண்டும். அங்கு நீரைத் தேக்குவது நாடகம் அன்று; திரையைப் பரப்பிவிட்டு மேலும் கீழுமாக நெகிழவைத்து எழுப்பி இறக்கி, ஒரு பொய்ம்மைப்படகு உலாவ வைப்பதே நாடகம். அட்டை, துணிகளில் மரஞ்செடி கொடிகள் வரைந்து முறையே அடுக்கிக் காடுபோல் பொலிவுறக் காட்டுவதே நாடகம். புலியைக் கொண்டு மேடையில் நிறுத்துவதன்று, புலிபோல் மேடையில் தோன்றி நிற்பதே நாடகம். ஒரு தந்தை தலைப்பாகை கண்ணாடி பிரம்பு செருப்புகளுடன் வெளிச் செல்லும் இயல்பினர்; அவர் இல்லத்துச் சிறுவன் ஒரு சிறுதுணித் தலைப்பாகை பிளாச்டிக் கண்ணாடி ஒரு சிறு கோல் ஒரு பழஞ்செருப்பு ஒரு பொய்க் கடிகாரத்துடன் தந்தையார் போல் நடந்து காட்டுகிறான். இஃதே நாடகம். புகை உறிஞ்சும் தந்தையின் மகன் பென்சிலை வாயில் வைத்து, அசைத்துப் புகை விடுகின்றான். இட்லர் மீசை வைப்பது, சுபாசுசந்திரபோசு சட்டை அணிவது, நேரு தொப்பி போடுவது எல்லாம் நாடக முறையில் வந்தவையே. மேலோர் போல் கீழோர் ஒப்பனை செய்கின்றனர்! நாடகமாக வரும் அது நாளடைவில் நிரந்தரமாக மெய்ம்மையாக நிலை பெறுகின்றது; அப்போது நாடகம் மறைகின்றது.

இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்குமிடத்து, உலகம் பிறந்த அன்றே நாடகமும் பிறந்தது, அதுயாண்டும் நிலவிய ஒரு கலை என்று கூறுவதே உண்மையாகும்.

தமிழில் இக்கலை பற்றிப் பரதம் அகத்தியம் முறுவல் சயந்தம் குண நூல் செயிற்றியம் முதலிய பல நூல்கள் இருந்தன; இறந்து பட்டன என்பர். கூத்தநூல் என்னும் பழைய ஏடு ஒன்று புத்தக வடிவில் வந்துளதாக அறிகிறோம். அடியார்க்கு நல்லார் தமது உரையில் விளக்கும் மெய்ப்பாட்டு இலக்கணங்களே நடிப்புக் கலைக்கு நமக்கு வாய்த்த பெரு நிதியாகும். இலக்கிய அளவில் இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்தை முத்தமிழ்க் காப்பியம் என்பர். அஃது ஓரளவு ஒக்கும். நாடகக் கலைக்கு உரிய உருவம், உடை, நடை, உரை, ஒப்பனை, மெய்ப்பாடு, புறக்காட்சி, வண்ணங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் ஒரு பெரிய நாடக இலக்கியம் கம்ப ராமாயணம்; இதனாற்றான் அது கம்ப நாடகம் என்று கூறப்படுகிறது. அதற்கு ஒரு குறிப்பு மட்டும் காட்டுகிறேன். அதன் உண்மையை நன்கு உணர்வார் கம்பநாடர் எத்துணை நாடகக் கலையில் மூழ்கியிருந்தார் என்பதை நன்கு உணரலாகும்.

''நவ்விவீழ்ந்தென, நாடகமயில்துயின் றென்ன
தவ்வையாம்எனக் கிடந்தனள் கேகயன் தனயை

(மந்தரை சூழ்ச்சி ௪8)

நவ்வி துயின்றென, நலங்கிளர் மயில்துயின்றென்ன— என மயிலின் அழகை விளக்கக் கூடிய ''நலங்கிளர்'' என்ற சொற்றொடரை அடைமொழியாகச் சேர்த்தால், அழகிய மயில்—பொலிவுறு மயில் என எத்துணைச் சிறப்பு ஆகும்! அஃதன்றோ ஏற்ற அடைமொழி, கம்பன் கடந்து நிற்கின்றான். நம்மால் அவனைக் கணிக்க முடியாது; கலை

மகள் அவன் நாவிலிருந்து ஒவ்வொரு சொல்லும் உறு பொருளுடன் அமையுமாறு உதவுகிறாள். கைகேசி இங்கு தன் அழகைக் காட்ட வரவில்லை, வருந்தியவளாகக் கிடக்க வேண்டும்; அந்த நடிப்பு நிறைவுற்று நிற்க வேண்டும். உண்மை மயிலைக் கிடக்க வைத்தால் அது இடம் காலம் அறியாமல் அகவும், ஆடும், பறக்கும், அசையும், ஓடும், சிறகை ஆட்டும். நாடகப் பொய்ம்மை மயிலாக இருப்பின் நாம் அமைத்தபடி ஒழுங்காக அசையாமல் கிடக்கும்; அழகும் இருக்கும்; காரியமும் முறையே நிறைவேறும்; இக்கருத்துப் பற்றியே அங்கு ''நாடக மயில்'' என அடைமொழி அமைத்தார். கூனி கூறிய முறையில் குறையில்லாமல் நன்கு நடித்தாள் கைகேசி: நடிப்பில் வெற்றி பெற்றாள். கம்பரும் தமது காப்பியத்தின் ஒவ்வொரு பாத்திரமும் நன்கு நடிக்க வைத்து, நாடகக் கலையை முற்றும் விளக்கித் தம் நூலைக் 'கம்ப நாடகம்'' என்று உலகம் போற்ற வைத்தார்.

கம்பர் காட்டிய நாடக அரங்கு

இன்று இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில்—சந்திரன் செவ்வாய் சுக்கிரனில் குடியிருப்பு அமைக்கலாம் எனத் துணியும் காலத்தில்—மின்சாரத்தின் உதவியினால் பற்பல புதிய வசதிகளுடன் நாடக மேடை மிளிரக் காண்கிறோம். இடம் காலம் அறிந்து வண்ண வெளிச்சம் மாறி மாறி ஒளிர்கின்றது; எங்கு நின்று பேசினும் பேசுவார் ஒலி யாவர்க்கும் தெளிவாகக் கேட்கும்படியான கருவிகள் உள்ளன; ஒலிஒளி நாடகங்களும் உள; கண் மூடித் திறப்பதற்குள் காட்சி ஒப்பனைகள் மாறுகின்றன; பக்கவாத்தியக்காரரின் இருப்பு, திரைகளின் எழுச்சி வீழ்ச்சிகள் காண்பார்க்கு இடையூறு இல்லா முறையில் சீர்பெற அமைக்கப்பட்டுள்ளன; பெருங்கடல், மலை, இருள், திங்கள், வெங்கதிர் இவை யெல்லாம் உண்மை உருவில் ஒளிர்கின்றன. கம்பர்

வாழ்ந்த காலம் 'சுகாப்த எண் l + 107'. கி. பி. 1185. 12 ஆம் நூற்றாண்டின் இறுதி. அக்காலத்தில் அவர் ஒரு நாடக மேடை கண்டார். எவ்வாறு?

தண்டலை மயில்கள் ஆட, தாமரைவிளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண்விளித்து நோக்க,
தெண்திரை எழினிகாட்ட, தேம்பிழிமகர யாழின்
வண்டுகள் இனிதுபாட—மருதம்வீற்றிருக்கும் மாதோ.

நாடக மேடையில் ஆட்டக்காரர், வண்ணவிளக்குகள், மத்தள ஒலி, காண்பாரின் ஆர்வ நோக்கு, சுருளும் திரைகள், யாழின் இசை, இனிய பாடல், தலைவர் வீற்றிருப்பு இத்தனையும் சிறக்கும் காட்சிகளாம். கம்பர் கண்ட நாடக மேடை எத்தகையது?

மேடை—தண்டலை(சோலை): திரைகள்—பொய்கையின் நீர் அலைகள்
ஆடுவார்—மயில்கள்: யாழ்இசை—சுரும்புகளின் ரீங்காரம்
விளக்குகள்—செந்தாமரை மலர்கள் : பாடல்—வண்டு ஒலி.
மத்தள முழங்கு — கொண்டல் (மேகம்).
ரசிகர் நோக்கு — குவளை மலர் (நீலம்) தலைமை—மருத நாச்சியார்.

சோலையைக் கண்டு மகிழ்ந்து, உணர்ச்சியால் உந்தப் பெற்று, ஒப்பனை முறையில் கம்பர் தற்செயலாக இவ்வாறு பாடியுள்ளார் என்று கூறுதற்கில்லை; அவர் நாடக மேடை, நடிகர், விளக்கு, பார்ப்பவர் நோக்கு, திரைகளின் நெகிழ்ச்சி இசை, தலைவரின் வீறு இவற்றை எல்லாம் 'உள்ளத்தில்'

நனிதுய்த்த ஒரு தனிப் பெருங் கலைஞர்; அவரின் கலை உணர்வுதான் மீண்டும் கலையரங்கு பற்றிப் பாட வைத்தது

கிளைத்துணை மழலைவண்டு கின்னரம் நிகர்த்த; மின்னும்
துளிக்குரல் மேகம்வள்வார்த் தூரியம்துவைப்ப போன்ற
வளைக்கையர் போன்றமஞ்ஞை, தோன்றிகள் அரங்கின் மாடே
விளக்கினம் ஒத்த; காண்போர் விழிஒத்த கருவிளங்கள்
(கார் காலப்படலம் 32)

நாடகக் கலை அவர் உள்ளத்தில் எத்துணை ஊறி நின்றுள்ளது. இவ்வரங்கில் நாடகம் நடக்கின்றது. கதை—கம்ப நாடகம். அதில் நவரசங்களும் சிறந்து மிளிர்கின்றன. அவற்றை முறையே காண்போம். முதன் முதல் நகை.

நகைச்சுவை

Laugh and live long என்பது ஆங்கில முதுமொழி. சிரி சிரித்து நீடுவாழ் என்பது மொழிபெயர்ப்பு. இதற்கு இலக்கணம்:

> எள்ளல் இளமை பேதைமை மடன்என்று
> உள்ளப்பட்ட நகைநான்கு என்ப (தொல்காப்பியம்)

ஆசிரியர் நகைச்சுவைக்கு 4 இடங்கள் காட்டுகிறார்; ஆயின் அது அந்நான்கினுள் அடங்காது. அடியார்க்கு நல்லார் நகைப்புக்கு உரிய மெய்ப்பாடாகக் ''கோட்டிய முகம், விட்டு முரிபுருவம், விலா விறுப்பு, செய்வது பிறிதாய் வேறு சேதிப்பது'' என்று கூறினார். இதற்கு விளக்கங் காண்பதை விடுத்து, நாம் கம்ப நாடகத்தில் நகைச் சுவை சில கண்டு, நடித்து மெய்ப்பாட்டையும் சுவையையும் நனிஉணர்ந்து இன்புறுவோமாக!

நிறைந்த நடமாட்டமுள்ள ஒரு பெரும்பாதையில் ஒருவர் தம் காரில் வந்தார். காரை ஓரத்தில் நிறுத்திவிட்டு, அயலில் உள்ள கடைக்குச் சென்றார். அவ்வழியே பலர் வந்தனர். அவர்களில் பருவ எழில் பூத்த நல்லுருவ மங்கை ஒருத்தி மிக எடுப்பாகத் திண்ணைக் குறட்டின் வழியே நடந்துவர, அவளைப் பார்த்த வண்ணமே கட்டிளங்காளை ஒருவன் பாதை ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவள் விழியும் மூக்கும் இருண்ட கூந்தலும் திரண்ட முலை

களும் இவனை ஈர்த்து நின்றன. அயல் ஒன்றையும் கவனியாமல் அவளை நோக்கிய வண்ணமாய் வழிநடந்த அவன் தன் முன்நின்ற காரில் முட்டி விதிர்விதிர்த்தான். இதனைக் கண்ணுறும் அயலவர் நகைப்பர் அன்றோ? அவளும் நகைப்பாள். நகைத்து மெய்ப்பாட்டை உணருங்கள். 'காமத்துக்குக் கண் மூக்கு தெரியாது' என்பர். அவன் பேதைமை கண்டு நாம் எள்ளி நகைப்போம்.

வார்குலாம்முலை வைத்தகண் வாங்கிடப்
பேர்கிலாது, பிறங்கு முகத்தினான்
தேர்கிலான் நெறி; அந்தரிற் சென்று ஒரு
மூரிமாமத யானையை முட்டினான்.

(எழுச்சிப் படலம் 31)

2—(2)

இராமன் வில்லை வளைத்து விட்டான் சீதைக்குத் திருமணம். மதிலை மக்கள் மகிழ்ச்சியில் உண்டு களித்துக் கும்மாளம் இடுகின்றனர். ஒருத்தி நன்கு குடித்து வெறித்திருந்தாள்; தான் வைத்திருந்த தட்டினை மீண்டும் பருகு வான் நோக்கினாள்; அங்கு தன் நிழலைக் கண்டு, வேறொரு மாது அங்கு உள்வந்து அமர்ந்து தன் எச்சில் மதுவை அருந்துவதாக எண்ணினாள். எள்ளி நகைத்தாள்

அச்சநுண் மருங்குலாள், ஒரணங்கு அன்னாள்
நச்சுவேல் கருங்கண் நளிர்முகம் மதுவுள்தோன்ற;
பிச்சிநீஎன் செய்தாய்! பெருநறவுஇருக்க; உண்ட
எச்சிலைநுகர்தியோ? என்று எயிற்றரும்பு இலங்க
நக்காள்

(உண்டாட்டு)

அடி பைத்தியக்காரி! என்ன வேலை இது? குடம் குடமாய் அங்கு இருக்கிறதே; அதை எல்லாம் விட்டு, நான் குடித்து வைத்த எச்சிலை வந்து மாந்துகிறாயே, என்னடி

இது! என்று தன் நிழலுக்குக் கூறினாள். உணர்ந்து சொல்லிச் சிரித்துப் பாருங்கள். ஆ ஆ ஆ என்றுமுடித்துச் சிரியுங்கள். நிழலை உருவமாக நினைத்த மடன், எச்சிலை நுகர்வாரை இகழ்தல் இரண்டும் இங்கு காணலாம்.

2—(3)

இராமன் சித்திரக் கூடத்தருகில் தங்கி இருந்த காலத்தில் ''நீலமாமணி நிருதர் வேந்தனை மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள் ''சூர்ப்பநகை அங்கு வந்து இராமனை அணையும் வேட்கை மிக்கவளாய்'' ''அம்சொல் இளமஞ்ஞை என—அன்னம் என—மின்னும் வஞ்சி என—நஞ்சம் என"ப் பருவ மங்கை உருக்கொண்டு அருகில் நெருங்கினாள். இராமன் ''யாரோ? எந்த ஊரோ? என்ன பேரோ? வந்த காரணம் யாதோ?" என உசாவ, அவளும் எல்லாம் விளக்கமாகக் கூறி, இறுதியில் தன் காதலை வெளியிட்டாள்; இராமன் மறுத்து உரைத்தவற்றுக் கெல்லாம் அவள் அறம் உரைத்தாள். இறுதியில் ''அண்ணலே தாங்கள் என்னை மணப்பதனால் முனிவர் அரக்கர்களிடையே உற்ற பகைமை நீங்கும்; தங்களின் தனிமை நீங்கும்; இல்லறத்து இனிமை ஓங்கும்; இம்மண்ணுலகும் மேலுற்ற விண்ணுலகும் தங்களின் ஆட்சிக்கு உள்ளாகும்; தேவர் அரக்கர் யாவரும் தங்கட்கு ஏவல் செய்து நிற்பர்; தாங்கள் பெருநலத்துடன் வாழலாம்'' எனப் பெரிய விளக்க உரை ஒன்று நிகழ்த்தினாள். இதனைக் கேட்டு நின்ற இராமன் அவளின் வஞ்ச வேட இளமை, வளம்படப் பேசும் திறமை, ஆங்குற்ற மடமை, பேதைமை இவற்றை எல்லாம் எண்ணித் தன் உள்ளத்து உணர்ச்சியை அடக்க முடியாதவனாகி வாய் விட்டுச் சிரித்தான். ''ஆ கா கா கா! இனி எனக்கு என்ன குறை! அம்மாள் உறவு! அதனால் அரக்கரின் ஆதரவு! இலங்காபுரிச் செல்வத்துள் உறைவு!

ஒன்றோ, இரண்டோ! நாட்டை விட்டுக் காட்டுக்கு வந்தபின் டான் பெற்ற பயன் பல! இதற்கு யான் என்ன தவம் செய்திருக்க வேண்டும்! ஆகா கா கா!

நிருதர்தம் அருளும்பெற்றேன்! நின் நலம் பெற்றேன்!
ஒருவருஞ் செல்வத்துயாண்டும் உறையவும் பெற்றேன்!
ஒன்றோ!
திருநகர் தீர்ந்தபின்னர் செய்தவம் பயந்தது? என்னா
வரிசிலைபிடித்த தோளான் வாள்எயிறு இலங்கநக்கான்
(சூர்ப்பநகை 56)

2—(4)

நாடகங்களிலும் சர்க்கசுகளிலும் கோமாளிகள் இடையிடையே வந்து வேடிக்கை காட்டி யாவரையும் சிரிக்க வைப்பார்கள்; அவர்கள் வித்தையில் வல்லவர்களாக இருப்பார்கள். அவர்கள் தம் திறமையால் எல்லாரையும் சிரிக்க வைப்பதனால்தான், மக்கள் சலிப்பின்றித் தொடர்ந்து ஆட்டத்தைக் கவனிக்கிறார்கள். கம்பரும் தம் நாடகத்தைக் கவனிப்பார் சலிப்படையாது சிரிக்க, இடையிடையே சில வேடிக்கைகள் காட்டுகிறார். கும்பகர்ணன் மலை போல் பெரியவன், ''மண்ணினை அளந்து நின்ற மால்'' போன்ற உருவத்தன், குடங் குடமாகக் குடிப்பவன், வண்டி வண்டியாக உண்பவன், மாதக் கணக்கில் கிடந்து உறங்குகிறவன். அவன் ஒரு மாடத்துள், தூக்கத்தில் கிடக்கிறான். அவன் மூச்சு விடுவது மோட்டார் டயர் மூக்கைத் திறந்து காற்று வெளி வருவதுபோல் இருக்கிறது; மூச்சு உறிஞ்சுவது டயருக்குக் காற்று அடைப்பதுபோல் ஒலிக்கிறது. அநுமான் சீதையைத் தேடி ஊரைச் சுற்றித் தெருவைச் சுற்றி இறுதியில் அரக்கர் மாளிகைகளை ஒவ்வொன்றாய்க் கவனித்து வருகிறான். கும்பகர்ணன் மாளிகைக் கதவம் திறந்திருந்தது. இதனைக் கவனிப்போம் என்று அநுமான் உள் அடி எடுத்துவைத்தான். அங்கு நேர்ந்தது என்னை?

நெட்டுயிர்ப்பு உறிஞ்சவும் அநுமனை இழுத்தது
ஓட்டும்மேல் மூக்கினில்; உழல்வான்; அதன் பின்னர்
விட்டநீள் மூச்சிது வெளியில் தள்ளவே;
பட்டது போதுமால்! பதறி ஓடுவான்.*

(ஊர் தேடு படலம்)

உள்மூச்சு இழுக்க, அநுமானை இழுத்து மூக்கோடு கொண்டு ஒட்டுகிறது. வெளி மூச்சு விடும்போது அவனைப் புறத்தே தள்ளுகிறது இப்படித் திரும்பத் திரும்ப நடப்பின், இக்காட் எத்துணை சிரிப்பை உண்டாக்கும்?

2 —(5)

மிதிலையில் இராமன் உலா வருகிறான். தம் மன்னனுக்கு வாய்த்த மருமகனைப் பார்க்க ஆர்வம் மேலிட்டு நகரத்துச் சிறுவர் பெரியோர், ஆண் பெண், யாவரும் வந்து வீதியின் இருமருங்கும் திரண்டு குழுமிச் செறிந்து நிற் கின்றனர். பெண்கள் கூடி நின்ற இடத்தில், பெதும்பை பருவத்துப் பெண் ஒருத்தி சற்று பிந்தி வந்து சேர்ந்தாள்; அங்கு வரிசையில் முந்தி நிற்க இடம் கிடைக்கவில்லை. அவ் வேளையில் "அதோ வருகிறான். அதோ—அதோ" என்னும் ஆர்ப்பு மிகுந்தது; அவளுக்கு ஆத்திரம் மிக்கது உள்ளம் துடிக்கிறது. உடனே தலையைத் தூக்கிப் பார்த் தாள். மாதரின் கூந்தல், கொண்டை, பூக்கொத்துகள் விரிந்து நிறைந்துநிற்றலின், அவள் யாதும் பார்ப்பதற் கில்லை. தலையைச் சற்றுத் தாழ்த்திப் பார்த்தாள்; புடைத்த தனங்களும் சேலைக்கட்டும் விரிந்து நிற்றலின், அங்கும் அவள் இராமனைக் காண வழியில்லை. முழந்தாள் இட்டுப் பார்க்கலாம் என்று தாழ்ந்தாள். முன்வரிசை மாதரின் புட்டவிரிவு, அல்குற் பரப்பினால் அவள் யாதுங் காண முடியவில்லை. அவள் துடித்தாள் ஏங்கினாள் சற்றே தலை நிமிர்ந்தாள். அங்கு ஒரு வெளி கண்டாள். குடுகுடுப்பை

மேலும் கீழும் விரிந்து, இடையில் நனி ஒடுங்கியிருப்பது போல—வரிசையில் நின்ற மாதரின் மேல்புறமும் கீழ்ப்புறமும் விரிந்து நெருங்கி, இடைப்பாகம் உட்குடைந்து அமைந்திருத்தலின் அங்கு ஒரு வெளி தோன்றியது. குனிந்து அதன் வழியாகத் தன் தலையை நுழைத்துக் கண்ணை விழித்து இராமனைக் கண்டாள், மகிழ்ந்தாள். அவள் செயலைக் கண்ட அயல் மாதர் சிரித்தார்கள், அவளும் சிரித்தாள், இதனைப் பலருக்கும் சொல்லி நகைத்தாள்.

> கருங்குழற் பாரம் வார்கொள்கனமுலை, கலைசூழ்
> அல்குல்
> நெருங்கின மறைப்ப; ஆண்டுஓர் நீக்கிடம் பெறாது,
> விம்மி.
> கருந்தடங்கண்ணி காணும் பேரெழில் ஆசை தூண்ட
> மருங்குலின் வெளிகளூடே வள்ளலை நோக்குகின்றாள்
> (உலாவியல் 17)

மாதர் இடை சிற்றிடை; இதற்கு உவமையாக உடுக்கை நூல் கான்ஆறு சிங்கத்து இடை ஒருபிடி அளவு எனப் பலவாறு கூறுவர் புலவர். கம்பர் அதற்கு ஒரு நாடகம் காட்டி நகைக்க வைத்தார்: உலகின் எப்புலவரும் கண்டறியாத யுக்தி இது. கம்பன் கற்பனை ஒரு தனி நயம் உடையது.

2—(6)

இராமன் நிறைகுணத்தினன், நேர்மை மிக்கவன், அறந்திறம்பாத பெருமகன் என்று நம்பியிருந்தவன் வாலி: இக்கருத்தையே தன் மனைவி தாரைக்கும் அறிவித்துப் போருக்குச் சென்றான். இறுதியில் போரில் சாய்ந்து கிடந்து தன் மார்பில் தைத்த அம்பைப் பிடுங்கிப் பார்த்தான்: அதில் 'இராமன்' என்ற பெயரைக் கண்டான். தன் எண்ணம் எல்லாம் மண்ணானதாக உணர்ந்தான்: புருட்டசு தன்னைக் குத்தக் கண்ட ஜூலியசீசர் போல் அதிர்ச்சி அடைந்தான்

"களங்கமற்ற சூரிய மரபுக்கு ஒரு களங்கம் உண்டாக்கி விட்டானே! வாக்குத் தவறாது வாய்மை நிறுவிய தசரத மன்னர் புதல்வனோ இவன்! தந்தை தந்த நாட்டை மறுத்து முந்தையோரின் முறையைப் பேணும் விரதம் பூண்ட பரதனுக்கு இப்படியும் ஒரு அண்ணனோ! ஆயுதம் இல்லா ஒருவன் மீது அம்பு செலுத்தி அறம் அழிக்கும் முறைகேடன் ஆயினனே! மறைந்து நின்று அம்பு எறிந்து, வஞ்சகக் கிராதன் போல் இழிஞன் ஆயினனே! ஆஆஆ! கெட்டான்! இந் நயவஞ்சகன் முகத்தில் விழிப்பதும்பாவம்!" என்று எண்ணி நகைத்தான் வெகுண்டான், நாணுற்றான் வாலி.

சொல்அறந் துறந்திலாத சூரியன் மரபும்—தொல்லை
நல்லறம் துறந்ததென்னா நகைவர நாணுட்
கொண்டான்
(வாலிவதை 72)

2— (7, 8)

அசோக வனத்தை அழித்த அனுமானை இந்திரசித்து பாசத்தாற் பிணித்து இராவணன் கொலுவிற் கொண்டு நிறுத்தினான். இராவணன்,

"யாரை நீ? என்னை இங்கு எய்து காரணம்?
யார் உன்னை விடுத்தவர்? சோர்விலை சொல்லுதி"

என்று அதிகார முழக்கத்துடன் கேட்டான். அனுமான் அதற்கு மறுமொழியாக இராமன் பெருமைகளைக் கூறி, அவனுக்காகச் சீதையைக் தேடி வானர சேனைகள் பல இடத்துக்கும் சென்றுள்ளதை அறிவித்து, இறுதியில்

"தென்பால்வந்த தானைக்கு மன்னவன்—வாலி
தன்மகன்: அவன்றன் தூதன் வந்தனென் தனியே
என்றான்."
(பிணி வீட்டு 82)

தன்னை இராமதூதன், சுக்கிரீவன் தொண்டன், அங்கதன் அடிமை, வாயுகுமாரன் என அனுமான் அறிவித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு கூறாமல்—ஒரு உட்கருத்து கொண்டே "வாலிதன் மகன் தூதன்" என்று, வாலியின் பெயரை வலிய நுழைத்தான்: அவன் எண்ணமும் நிறைவேறிற்று. வாலி என்ற பெயரைக் கேட்டவுடன் இராவணனுக்கு முன்னர் தான் பட்ட பாடெல்லாம் நினைவுக்கு வர; அவற்றை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்

> இலங்கை வேந்தன் எயிற்றினம், எழிலிநாப்பண்
> மின்திரிந்தனைய நக்கு, 'வாலிசேய் விடுத்த தூத,
> வன்றிறல்ஆய வாலி வலியன் கொல்? அரசின் வாழ்க்கை
> நன்றுகொல்?' என்னலோடும்

இராவணன் யாதும் அறியாதவன் போல் ஒரு நாடகம் நடித்துச் சிரித்தான். வாலி நலமோ? அவன் அரசு நலமோ? என்று வினாவினான். அனுமானுக்கு இங்கு இராவணனை எள்ளி நிற்க எண்ணம். ஆதலின் அனுமான் தான் முந்திய நடப்பெல்லாம் அறிந்தவனாகக் காட்டிக்கொள்ள-முதற் பீடிகையாக ஒரு ஏளனச் சிரிப்புச் செய்தான். "நாயகன் தூதன் நக்கான்". இனி அவன் "சோர் விலை" என்று கூறியதற்குப் பதிற்பாட்டுப் பாட எண்ணி "அஞ்சலை அரக்க" என்று தொடங்கி "வாலி பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே" என முடித்தான். இராவணன் வறிதே இருக்க, இன்னும் அவனை எள்ள எண்ணி "வாலி அந்தரஞ் சேர்ந்தவன் மீண்டு வந்தால் ஏன் செய்ய? என்று எண்ணுகிறாயோ; அவன் இனி மீளான். அங்கிருந்து வாலை வீசிப் பிணிப்பான் என எண்ணுகின்றாயோ? அவன் வாலும் முடிந்து போயிற்று. உனக்கு அவனைப் பற்றிய அச்சமே இனி வேண்டாம்; நிலவண்ணனின் ஒரே கணையினால் அவன் மாண்டான். இனி நீ அஞ்ச வேண்டியது உன்னை அடக்கிய வாலியை அழித்த இராமன் ஒருவனுக்கே என்று குறிப்பாக அறிவித்து எள்ளி நகைத்துக் நின்றான்.

அஞ்சலை அரக்க, பார்விட்டு அந்தரம் அடைந்தான்
அன்றே
வெஞ்சின வாலி மீளான், வாலும் போய் விளிந்த தன்றே
வெஞ்சின வாலி மீளான், வாலும் போய் விளிந்த தன்றே.
அஞ்சன வேனியான் றன் அடுகணை ஒன்றால் மாழ்கித்
துஞ்சினன்... (பிணிவீட்டு 84)

இராவணன் ஏளனச் சிரிப்பும் அதற்குப்பதில் அனுமான் சிரிப்பும்; அவன் "சோர்விலை" என்றதும், இவன் அதற்குப் பதில் "அஞ்சலை" என்றதும், உள்ளத்திற் குத்துப்படி உரையாடலும் பெருநகைப்புக் குரியனவாம். குறிப்புச் சொற்களால் நாடகத்தின் சுவை மிகும்.

2–(9)

இராவணன் ஒரு கோபுரத்தின் மேல் நின்று இராமன் பரிவாரங்களைப் பார்வையிடுகிறான். படைத்தலைவன் இராவணனுக்கு இலக்குவன் அங்கதன் நீலன் சாம்பன் குமுதாக்கன் கவயன் கவையாக்கன் கேசரி முரபன் கரபன் சரபன் பனசன் இடபன் சுடேணன் ததிமுகன் சங்கன் சுக்ரீவன் அனுமான் ஒவ்வொருவரையும் இனங்காட்டி, அவர்கள் விண்ணை இடிப்பர், மண்ணைத் தூக்குவர், கடலைக் கலக்குவர், மலையைக் குலுக்குவர் என அவர்கள் ஆற்றல் பற்றி வியந்து கூறினான். இதைக் கேட்ட இராவணன் சிறிதும் சகியானாய்" என் முன் நின்று நீ குரங்குகளைப் புகழ்ந்து பேசுகின்றாய்! காட்டில் உள்ள குறுமுயல்கள் மான்கள் மற்ற விலங்குகள் கோடி கூடினும் சிங்கத்தை என்ன செய்ய முடியும்? ஆ! ஆ! ஆ!" எனச் சிரித்து நின்றான்.

சினங்கொள் திண்டிறல் அரக்கனும் சிறுநகை செய்தான்
புனங்கொள் புன்தலைக் குரங்கினைப் புகழுதிபோலும்!
வனங்களும் படர்வரை தொறும் திரிதரும் மானின்
இனங்களும்பல; என்செய்யும் அரியினை?! என்றான்.

2—(10)

அங்கதன் இராமனால் தூதுவனாக அனுப்பப் பெற்று, இராவணன் முன் வந்து நின்றான்.

நின்றவன் தன்னை அன்னான் நெருப்பெழ நிமிரப்
பார்த்து
"இன்றிவண் வந்த நீயார்? எய்திய கருமம் என்னை?
கொன்றுஇவர் தின்னாமுன்னம் கூறுதி தெரிய"
என்றான்!
வன்றிறல் வாலி சேயும் வாள் எயிறு இலங்க நக்கான்
(அங்கதன் தூது 20)

நக்கான்" என்ற குறிட்பினால், பெரிய நாடகம் நடக்கப் போகிறது என நாம் யூகிக்க வேண்டும். "நீ யார?" என்ற கேள்விக்கு அங்கதன் சிரித்துப்

பூத நாயகன், புவிக்கு நாயகன்
சீதை நாயகன் தெய்வ நாயகன்
வேத நாயகன் விதிக்கு நாயகன்
தூதன் யான் செய்தி சொல்லிய வந்தேன் என்றான்.

அரன் அரி அயனைத் துணைகொள்ளாமல்,"குரங்குகளைத் துணையாய்க் கொண்டு, கடலைக் கடக்க ஒரு சேது கட்டி, என் கருத்தை அறியுமாறு உன்னை அனுப்பி மனம நொந்து இருக்கிற "நான்கொலாம உலகநாதன்! என்று கொண்டரக் கன் நக்கான்."

அங்கதன் பின்னர் "உன்னை ஒரு காலத்தில் தன் வாலிற் கட்டித் திசைதொறம் உலாவி வந்த வாலியின் மகன் யான்" என்றனன். இதனைக் கேட்டதும் இராவணன் 'உன் தந்தை எமக்கு மிக மிக வேண்டியவர். அவரைக்

கொன்றவனுக்கு நீ தொண்டன் ஆகலாமோ? இது ஒரு பெரிய வசை. நீ ஈண்டு எம்மிடம் வா, உனக்கு யாமே மகுடம் சூட்டி மன்னவன் ஆக்குதும்'' என்றான்.

அங்கதன் அதனைக் கேளா, அங்கையோ டங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்
நீதரக் கொள்வேன் யானே! இதற்கினி வேறு எண்ண
நாய்தரக் கொள்ளும் சீயம் நல்லரசு! என்று நக்கான்

நகைச் சுவைக்குச் சில சான்றுகள் காட்டினோம் இவற்றை உன்னி உணர்ந்து நடித்துப் பார்த்தல் வேண்டும். நகைச்சுவை மகிழ்ச்சி இகழ்ச்சி போன்ற இடங்களில் பெரிதும் பயிலப் பெறினும், நாடகத்தில் அறிவுடைய மேன்மக்கள் நகைப்பது முறையன்று; வெறியர், கீழ்மக்களின் இயல்பே வாய்விட்டுச் சிரித்தல். கம்பரின் 12000 பாடல்களில் இராமன் நகைத்ததாக 5 இடங்களே உள: இராவணாதி அரக்கர், குரக்கர் நகைத்ததாக அமைந்த இடங்கள் அளவில் அடங்கா. ஆதலின் பெருமிதம் பற்றிய நடிப்பில் நல்லார் நகைத்தல் ஆகாது; வில்லன் என்னும் பொல்லானுக்கே உரியது நகைப்பு. அவ்வாறே தலைவி நகைத்தலும் சிறப்புடைத்தன்று; செவிலியரே நகைத்துக் களித்தற்கு உரியவர்.

இவற்றை மீண்டும் ஒருமுறை படித்து உணர்ச்சியுடன் நடித்துத் திளைக்க.

3. உவகை

நகை என்பது வாய்விட்டுச் சிரிப்பது; உவகை என்பது உள்ளத்து மகிழ்ச்சி; இது அகத்தினும் முகத்தினும் தோன்று வதாகும்.

செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே. (தொல்காப்பியம்)

இதற்கு உரிய மெய்ப்பாடு "தூஉள்ளுறுத்த வடிவும் தொழிலும், காரிகை கலந்த கடைக்கணும், கவின்பெறு முரல் முறுவல் சிறுநிலா அரும்பலும், மலர்ந்த முகனும் இரந்த. மென்கிளவியும்—" எனக் கூறினார் அடியார்க்கு நல்லார். இவ்விருவர் குறித்த எல்லையுள் அடங்காது ஒவ்வொரு சுவையும் ஓராயிரமாக விரிந்து நிற்பதாகும். அச் சுவைகளில் உவகை கம்ப நாடகத்தில் எவ்வாறு இன்பூட்டுகிறது எனக் காண்போம்: வாசிக்கும் அன்பர்கள் அவற்றை அபிநயம் செய்தால் நன்கு உவகை காண்பர்.

இராம லக்குவர் முனிவருடன் மிதிலையின் வீதி வழி யாகச் செல்கின்றனர். இளமங்கையர் "தளிர்க்கை நோவ-மாடகம் பற்றி—கள் என நரம்பு வீக்கிக் கண்ணொடு மனமும் கூட்டி— வெள்ளிய முறுவல் தோன்ற, விருந்து என" இனிய கீதம் பாடுகிறார்கள்; இதனை "இருவரும் செவி மடுத்து இனிது சென்றார்" அகங்குளிர்ந்து மாதர்பாட, வீதியிற் செல்வாரும் கேட்டு அகங்குளிர்ந்து செல்கிறார்கள். இஃது

ஒரு உவகை. அங்கு மாடியில் "கல்லும் புல்லும் கண்டுருகப் பெண் கனி நின்றாள்." "அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்." உவகைக்கு மேல் உவகை? உண்மையாகவே உவகைதானா? அதற்கு மேல் ஒரு உவகை: சீதை பின்னர் யாது கூறினாள்?

இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்
சந்திரவதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தமணிவரைத் தோளுமே அல;
முந்திஎன் உயிரை அம்முறுவல் உண்டதே
(மிதிலை 56)

சீதை இராமனுடைய கூந்தல் வதனம் கைகள் தோள் சிரித்த முகம் இவற்றைக் கண்டு உள்மகிழ்ந்தாள்: இராமன் சீதையைக் கண்டு முறுவல் பூத்தான். "கண்ணோடு கண் இணை எதிர் நோக்க" அங்கு முறுவல் பிறக்கின்றது.

3—(2)

இராமன் சனகர் அரண்மனையை அடைந்து வில்லை வளைத்துவிட்டான். இதனைக் கண்ணுற்ற சீதையின் தோழி நீலமாலை அடங்கா உவகை எய்தினாள், சீதைபால் ஓடினாள், முறைமைகளை மறந்தாள், உவகை பொங்கி நின்று, தலைவிக்குச் செய்திபை அறிவித்தாள்:

வந்தடி வணங்கிலள், வழங்கும் ஓதையாள்,
அந்தமில் உவகையள், ஆடிப் பாடினாள்,
"சிந்தையுள் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரி, சொல்" எனத் தொழுது சொல்லுவாள்

3— (3)

சீதை நன்கு ஒப்பனை செய்யப்பட்டு மணப்பெண்ணாகப் பந்தலுள் அமர்ந்திருக்கிறாள். ஆங்கு ஒருசார் இராமன் ஒப்பனைகளுடன் மணமகனாக அமர்ந்திருக்கிறான். மாடியில் நின்று, இராமன் வீதி வழியாக வரும்போதும்

அவனைப் பார்த்தாள். பின்னரும் சேடியர் வந்து அடையாளங்கள் கூறி, அவனே வில்லை வளைத்தான் என்று அறிவித்திருக்கிறார்கள்; ஆயினும் சீதைக்கு இப்பொழுதும் இராமனைப் பார்க்க வேண்டும் என ஆசை எழுகிறது ஆனால் நாணம் தடுக்கிறது. ''ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்காது'' என்பது பழமொழி. அவள் யாது செய்தாள்? தன் கைகளின் வளையலைத் திருத்தும் பாவனை காட்டிக் கடைக் கண்ணால் இராமனைக் கண்டு நுகர்ந்தாள்.

ஐயனை அகத்துவடிவே அல்ல, புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கண்ணின் நுகர்ந்தாள்
(கோலங்காண்)

உவமையின் உச்சநிலை இது. சீதைக்கும் உவகை, அதைக் கவனிப்பாருக்கும் உவகை. நடித்துப் பாருங்கள், உவகை கூருங்கள். திருமணம் நிறைவேறியது. மணமக்கள் நின்று காட்சி அளிக்கின்றார்கள். அதனைக் கண்ணுறும் சுற்றத்தவரும் மற்றவர்களும்.

சங்கவளைக் குயிலைத் தழுவுகின்றார்
அம்கண்ணனுக்கு வேறுயார் தகுதியாவர்?
பெண்கள் இனிப்பிறர் எங்குளர்!? என்றார்!
கண்கள் களிப்ப மனங்கள் களிப்பார்.
(கடிமணம் 79)

3—(4)

இராமன் கங்கைக் கரையை அடைந்தான். சீதையுடன் உலாவி அங்குற்ற இயற்கைக் காட்சிகளை உல்லாசமாக நுகர்ந்தான். எவ்வாறு?

மாகந்தமும் மகரந்தமும் அளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு, பவளந்தரும் இதழான்
மேகம்தனி வருகின்றது மின்னோடென—மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென—நடவா

அருப்பேந்திய கலசத்துணை அமுதேந்திய மதமா
மருப்பேந்திய எனலாம்முலை மழையேந்திய குழலாள்
கருப்பேந்திரம் முதலாயின கண்டாள்,இடர் காணாள்
பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள் போ
னாள்

(கங்கைப் படலம் 5)

3—(4)

மற்றொன்று

கோதாவரிக் கரையில் நின்று இராமனும் சீதையும் இயற்கை அழகில் இன்பந் துய்க்கிறார்கள். செந்தாமரை மலர் நன்கு விரிந்து செழுமைக் காட்சி தருகின்றது' அதன் மேல் சக்கரவாளப்புள் அமர்ந்திருக்கின்றது. அதன் திரட்சியைக் கண்ட இராமன் சீதையை விளித்து, அவள் கொங்கைகளைச் சுட்டிக் கண்களால் பேசுகிறான்; (உன்னி நடித்துப் பார்மின், உவகை கூர்வீர்) சீதை இராமனுடைய தோள்களை நோக்கி, ஆங்குற்ற மணற் குன்றங்களைச் சுட்டிக் காண்பிக்கிறாள். ஒரு அன்னம் ஒயிலாக நடந்து செல்கிறது. இராமன் ''சீதை, உன் நடை'' என்று நோக்கினால் சொல்லி மகிழ்கிறான். யானைக் கன்று ஒன்று நீருண்டு பெருமிதத்துடன் செல்கிறது; அதன் சாயலைச் சீதை இராமனுக்குக் காட்டி உள்ளத்தில் உவகை பூக்கிறாள்;

செய்யதா மரையின்மீது சக்கர வாளங்கண்டு*
ஐயனும் நங்கைகொங்கை நோக்கினான் மகிழ்வித்
தானால்

துய்யநீள் மணற்குன்றங்கள் இராமனின் தோளை ஏய்ப்ப
தையலாள் அதனைச்சுட்டித் தனிஒரு முறுவல்பூத்தாள்
அன்னம் ஒன்றுலாவக்கண்டு அதன்நடை சீதைநல்லாள்
மென்னடை ஆகும் என்று நோக்கினால் இராமன்கூற;
நன்குநீர் அருந்தி மீளும் போதகப் பெருமிதத்தை
அன்னவ னுக்குக் காட்டிஅவள் ஒருமுறுவல் பூத்தாள்.

(சூர்ப்பநகைப் படலம். 4, 5) கம்பரப்பர்)

3 – (5)

சூர்ப்பநகை நல்ல இளம் பெண் உருவத்துடன் இராமனை அண்மி வருகிறாள். ஆரக்கி— நாணம் மடம் அச்சம் பயிர்ப்புத் தாங்கி மிக அடக்கமாக—மான்போல் மருண்ட நோக்குடன், பணிந்தவளாக வந்து இராமனைக் கடைக் கண்ணால் ஒரு பார்வை பார்த்து; இலேசாக வணங்கி, வெட்கி அயல் சென்று ஒதுங்கி—அயல் நோக்கியவளாய் நிற்கிறாள்.

அவ்வயின் அவ்ஆசைதனது அகத்துடைய அன்னாள்
செவ்விமுகம் உன்னி, அடி செங்கையின் இறைஞ்சா
வெவ்விய நெடுங்கண் அயில்வீசி, அயல்பாரா
நவ்வியின் ஒதுங்கிஇறை நாணிஅயல் நின்றாள்.

(சூர்ப்பநகை. 37)

வேட்கையின் விழுமிய நடிப்பு இது. பெண்மை இங்கு சுடர் விட்டு ஒளிர்கின்றது. நடித்து நடித்துப் பண்பட வேண்டிய கலை இது. தமிழ் நடிகையரில் இதனை மெய்ப்பிக்கக் கூடியவர் எத்தனை பேர்? எண்ணின், 5 விரல்களையும் மடக்குவதற்கும் அரிவையர் இவர் என்பதே எம் கருத்து.

3—(6)

கிட்கிந்தைச் சாரலில் இராமனைக்கண்ட அனுமான் உள்ளம்உருகி உவகை மேலிட்டு நின்றான்.

"என்புஎனக்கு உருகுகின்றது, இவர்கின்றது அளவில் காதல்
அன்பினுக்கு அவதி இல்லை, அடைவு என்கொல் அறிதல்தேற்றேன்"

(மராமரம் 15)

இவ்வாறு உவகை பூத்துநின்ற அனுமன் பின்னர் இராம சுக்கிரீவர் நட்புக்கு வகைசெய்தான்; மராமரங்களை இராமன் துளைத்தபின் அவன் ஆற்றல் பற்றிய ஐயுறவுகளை எல்லாம் சுக்ரீவன் அகற்றினான். அதன் பின்னர் பிராட்டியின் கலன்களைக் கொண்டு வந்து இராமன் முன்வைத்தான், கலன்களைக் கண்டதும் இராமன் கனிந்து உருகி நின்றான்; ஒப்பிலா உவகையன் ஆனான்.

கொங்கையின் அணிகளும் கொங்கை ஆயின*
செங்கையின் அணிகளும் செங்கை ஆயின
அல்குலின் அணிகளும் அல்குல் ஆயின
பல்கலன் களும்உறு படிவம் ஆயின
மோந்திட நறுமலர் ஆயின, மொய்ம்பினில்
ஏந்திட உத்தரி யத்தை ஏய்ந்தன,
சாந்தமு மாய், ஒளி தழுவப் போர்த்தலால்
பூந்துகில் ஆய அப்பூவை பூண்களே.

(கலன்காண் 8,

அனுமான் கையிலிருந்து கணையாழி பெற்ற சீதை "குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை"யாக நின்றதும், சூடாமணியைப் பெற்ற இராமன் "அங்கி முன்னர் அங்கையால் பற்றும் நங்கை கை என" உணர்ந்து நின்றதும் உவகைச் சுவைக்கு நல்ல எடுத்துக் காட்டுகளாம். நடப்பை உன்னுவார் உவகை உறுவார்.

3—(7)

சீதையைத் தேடி அனுமார் இலங்கைக்குள் சென்றார். இக்கரையில் வானரவீரர்கள் அவர் வரவை எதிர்பார்த்திருந்தனர்; திடீர் என அனுமார் வரக் கண்டனர். ஒரே உற்சாகம், ஒரே ஆர்ப்பு, ஒரே துள்ளல், "வந்து விட்டார்." என வாய் விள்ளல்.

போய்வருங் கருமம் முற்றிற் றென்பதோர் பொம்மல்* பொங்க
வாய்வெரீஇநின்ற குரக்க வீரர்கள்—பறவைப் பார்ப்பு
தாய்வரக் கண்டதன்ன உவகையின் தளிர்த்தார் அம்மா!
(திருவடி தொழுத 3)

அழுதனர் சிலர், ஆர்த்தனர் சிலர்.*
தொழுதனர் சிலர், துள்ளினர் சிலர்,
விழுங்கு வார்என மொய்த்தனர் சிலர்
தழுவினர் சிலர், சுமந்தனர் சிலர்.

தேன் கிழங்கு காய் தேடிக்கொணர்ந்தனர்
மேன் முறைவிருந்து உண்ண வைத்தனர்
'போன காரியம் வெற்றி கண்டுளீர்,
போனகம் நனி அருந்தும், என்றனர்.

இவ்வாறு வானரக் குழுவுள் உவகையின் அலை பரவி நின்றது.

3—(8)

கும்பகர்ணனுக்கும் இராமனுக்கும் பெரும் போர் நடைபெற்றது. கும்பகர்ணன் தன் மீது மோதிய சுக்கிரீவனை மார்போடு இறுகப் பிடித்து நெருக்கிச் சிக்க வைத்து இராமனை நோக்கி: "உனக்கு ஒன்று கூறுகிறேன்; இதோ என் கைக்குள் சிக்கியிருக்கிற இக் குரக்கினை நீ விடுவித்தா

யாயின், சீதையைச் சிறையினின்று விடுவித்தவன் ஆவாய்'' எனச் சூள் உரைத்தான். இச்சூளுரை கேட்ட இராமன் சினந்தான் அல்லன்: அவன் இராவணன் மீது அம்பு எய்யும் போதும்—கூனி முதுகில் கல் எறிந்த நிலையில் நின்றவன் அல்லவா? சூளுரை கேட்ட இராமன் முறுவல் பூத்தான்.

என்றலும் முறுவலித்து இராமன் ''யானுடை
இன்துணை ஒருவனை எடுத்த தோளினைக்
குன்றினை அரிந்துயான் குறைக்கிலேன் எனின்,
பின்றினென், உனக்குவில் பிடிக்கிலேன் என்றான்.

நடித்து உவகை காண்க.

(கும்பகருணன். 285)

3—(9)

மாயா சீதை ஒன்று படைத்து அவளைக் கொல்வோமாயின், இராம இலக்குவர் போரை வெறுத்துத் தம் இடத்தை நாடி மீண்டு செல்வார் எனக்கருதி, அவ்வாறே நிறைவேற்றத் துணிந்தார்கள்; மாயா சீதை படைத்து அவளைக் கொலைக் களத்துக்கும் கொண்டு வந்து விட்டார்கள். சீதையைக் கண்ட இராமன் உள்ளம் கலக்கம் அடைந்தது. இனிப் பொருது பயனில்லை, வாழ்ந்து பயனில்லை என்று எல்லாம் வெறுத்த நிலையுற்றான் இராமன். இதனைக் கண்ட வீடணன் இது அரக்கர் மாயமாக இருக்கும் என்று எண்ணித், தான் ஒரு வண்டு உருவங் கொண்டு இலங்கையை அடைந்தான். அங்கு அசோக வனத்தில் சீதையைக் கண்டு மகிழ்ந்து மீண்டு வந்து, நடப்பை எல்லாம் இராமனுக்கு அறிவித்தான். இராமன் உற்ற உவகைக்கு ஓரெல்லை இல்லை. கலன்களைக் கண்டும் சூடாமணியைக் கண்டும் மகிழ்ந்த இராமன், இறக்கும் சீதை இருப்பதாய் அறிந்தால் அவன் உள்ளத்தில் உவகை பொங்கி வழியும் அன்றோ?

வீரனும் ஐயந்தீர்ந்தான்;வீடணன் தன்னை மெய்யோடு
ஆர்வமும்உயிரும் ஒன்ற அழுந்துறத்தழுவி, ஐய
தீர்வது பொருளோ துன்பம்! நீஉண்டு! தெய்வம்உண்டு
மாருதிஉண்டு! நாம்செய் தவம்உண்டு! மறையும் உண்டால்!

(மாயா சீதை. 98)

என்று உவகை வெள்ளத்தில் மூழ்கி நின்றான்.

3—(10)

நிகும்பலை யாகம் செய்யச் சென்ற இந்திரசித்து, இராமனுக்கு இளவலான இலக்குவன்—இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்தனர். இருவரும் கட்டிளங்காளைகள், துடுக்கர்கள், வித்தையில் வல்லவர்கள், இருவரும் பொருது நின்ற காட்சி ஒரு பெரு விருந்தாக இருந்தது. இவன் இன்னான் என்று குறிப்பிட முடியாநிலையில் இருவரும் சாரி வந்து வேகமாகப் பொருதனர். பந்தாட்டம் நடக்கும் இடத்தில் ஆட்டத்தைப் பார்ப்பார்கள் ஆர்ப்பரித்து அகம் மகிழ்வது போல் தேவரும் யாவரும் உவந்து கவனிக்கும்படியாக இருந்தது அவர்கள் செய்த போர்.

இருவீரரும் இவன்இன்னவன் இவன்இன்னவன் என்னச்
செருவீரரும் அறியாவகை திரிந்தார் கணைசொரிந்தார்.
"ஒருவீரரும் இவர்ஒக்கிலர்!" எனவானவர் உவந்தார்
பொருவீரையும் பொருவீரையும் பொருதால் எனப்பொருதார்

மற்போர் நடக்கும் இடத்திலும், குத்துச் சண்டைகளிலும் இவ்வுவகையை நனிகண்டு துய்க்கலாம். ஆடுவோரினும் ஆட்டைத்தைப் பார்த்துத் துய்ப்பவர்களிடமே துடிப்பும் உவகையும் வெளிப்படையாகக் காட்சி தரும்.

3—(11)

இராவணனை வதை செய்து, இராமன், சீதையுடன் அயோத்திக்கு மீண்டு வருகிறான். இச் செய்தியை அனுமான் பரதனுக்கு—முன்னதாக வந்து அறிவித்தான். பரதன் பரவசமாயினான். யாது செய்வது என்று அறியாதவனாய் "அண்ணன் வருகிறான் அண்ணன் வருகிறான்;" என்று ஆனந்தக் கூத்தாடுகிறான்; எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கும்பிட்டுநின்று "இராமன் வருகிறான்" என்று கூத்தாடிப் பணிந்து அறிவிக்கின்றான்.

வேதியர் தம்மைத் தொழும், வேந்தரைத் தொழும்
தாதியர் தம்மைத் தொழும், தன்னைத்தான் தொழும்
ஏதும் ஒன்றுணர்வுறாது இருக்கும், நிற்குமால்
காதல் என்றதும் ஓர் கள்ளில் தோன்றிற்றே.

(மீட்சி 253)

கள்குடித்தவன் தன்னை மறந்து களித்து நிற்பதுபோலப் பரதன் வேதியரையும் தன்னையும் தொழுது மெய்மறந்து நிற்கிறான். இதனை நடிக்க வல்லவர் சிறந்த நடிகர் என ஐயமின்றிக் கூறலாம்.

பயிற்சி

I கைவளை திருத்துபு கடைக்கணின் நுகர்ந்தாள்.
(பக்கம்—40)

II செய்யதாமரையின்மீது சக்கர வாளங்கண்டு
ஐயனும் நங்கை கொங்கை, நோக்கினால் மகிழ்வித்
தானால் (பக்கம்—41)

III வெவ்விய நெடுங்கண் அயில்வீசி அயல்பாரா
நவ்வியின் ஒதுங்கி இறை நாணி அயல் நின்றாள்
(பக்கம்—47)

IV வேதியர் தம்மைத் தொழும் வேந்தரைத் தொழும்
தாதியர் தம்மைத் தொழும் தன்னையே தொழும்
(பக்கம் –47)

இந்நான்கு இடங்களையும் உச்ச நிலையில் நடிக்கக் கூடிய வர் நம்மில் உளரோ? நடித்துப் பாருங்கள். நடிப்புத்திறனுக்கு ஒரு தேர்வு இது.

"எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என் இதயமோ ஒடுங்கவில்லை"

என்ற பாட்டைத் தாயார் பாட—நடன மாது திரு பாலசரசுவதி தன் உள்ளமும் உடலும் அடங்கி ஒடுங்கிநின்று, தன்முன் உற்ற பல்லாயிரவரும் அசைவின்றி அடங்கி ஒடுங்கி அமரவைக்கிறார். அது மெய்ப்பாடு. இம் மெய்ப்பாடு மேற் காட்டிய நான்கு கவிகட்கும் மிளிரச் செய்தல் வேண்டும். செய்யக் கூடியவர் யாவர்?

திரையுலக நடிகையர் துணியைச் சோர விடுவதும் உட லில் ஒட்டுவதும் தழுவி விழுவதும் கால் அரை முக்கால் முழு நிர்வாணமாக நிற்பதுமே தங்கள் கலைவளர்ச்சியாகக் கருதி நடிக்கின்றனர்—அவர்களை ஆட்டிவைக்கும் இயக்கர்களின் அறிவுத் திறன் அது எனினும் குற்றம் அன்று. திரு. பானுமதி தம் கருத்தை இடம் அறிந்து நடிப்பால் அறிவிக்கக்கூடிய வராக யாம் அறிந்த அளவில் சிறந்து விளங்கினார். திரு. சாவித்திரியும் பத்மினியும் சொல்லாலும் ஆட்டத்தாலும் நன்கு திகழ்ந்தனர். பலர் மின்சார உதவியால் ஆடும் பொம்மலாட்டம்போல் நடிக்கிறார்கள், நாட்டியம் ஆடு கிறார்கள். உள்ளத்தில் உணர்ச்சி உண்டாயின் அங்கு ஒளி பிறக்கும்.

4. அழுகை

நகைத்தோம், உவந்தோம்; இனிச் சற்று அழுதுபார்ப்போம். அழுகை தனித்து வருவதில்லை; அதனுடன் ஏக்கம் சீற்றம் சோர்வு இவை கலப்பதும் உண்டு. ஆசிரியர் தொல்காப்பியர்

''இழிவே இழவே அசைவே வறுமைஎன
விளிவில் கொள்கை அழுகை நான்கே''

என்றார். இகழ்வு இழப்பு தளர்வு வறுமை என்னும் 4 காரணங்களால் அவலச் சுவை ஏற்படும் என்பது அவர் கருத்து. இச்சுவைக்கு உரிய மெய்ப்பாடாக அடியார்க்கு நல்லார்—''கண்ணீர் மாரி, வாடிய நீர்மை, வருந்திய செலவு பீடழிஇடும்பை, பிதற்றிய சொல், நிறைகையழிதல், நீர்மையில் கிளவி, பொறையின்மை'' இவற்றைக் கூறுகிறார். நாம் கம்பநாடகத்தில் பதின்மர் அழுத முறைகளைக் கண்டு அழுகையின் இயல்புகளை அறிவோம்.

வைதிக முதியோர் அழுகை

சுரோசனன் சிறுவாய் கொண்ட பாத்திரத்தில் நீர் மொள்ள, ஆங்கு எழுந்த ஓசையை யானை நீர்குடிப்பதாய் எண்ணித் தசரதன் அம்புஎய்தான். அதனால் புரோசனன் இறந்தான். இறந்த உடலைத் தசரதர் எடுத்துவந்து விழியற்ற—முதிய—பெற்றோர் முன்வைத்து நடந்ததை எல்லாம் கூறினார். கண்அற்ற தமக்குக் கைக்கோல்போல் இருந்த மைந்தன் இறந்தான் என்ற சொல்கேட்டதும் பெற்றோர் புலம்பினர்.

வீழ்ந்தார் அயர்ந்தார், புரண்டார்,' விழிபோயிற்றே
என்றார்
……ஐயோ ஐயோ என்றார்
போழ்ந்தாய் நெஞ்சை என்றார்…
வாழ்ந்தே இருப்பத்தரியேம்,வந்தோம்வந்தேம் என்றார்
கண்ணின் மணியை இழந்தேம் காதல் மகவை
இழந்தேம்
மண்ணில் வாழ்வை இழந்தேம்; மாளும் அதையே
விழைந்தேம்
உண்ணும் நீரும் வேண்டாம், உலகோர் பழிப்பும்
வேண்டாம்
விண்ணை நீயும் அடைக, எம்போல் மைந்தற் பிரிவால்
(நகர் நீங்கு)

இது, உடல் உரம்அற்ற முதியோர் அழுகை. சிறுசிறு வாக்கியம்—நிறைந்த பொருள் உடையது—பீடு அழிந்து வருத்தத்தால் எரிச்சலுடன் கூறுவது.

4—(2) தசரதர் அழுகை

தசரதர் முதியவர், ஆயின்ஆற்றல் மிக்கவர், அரசர். அவர் இளமையில் கைகேசிக்கு வாக்களித்து, அதன் பயனாக முதுமையில் இடருள் ஆழ்ந்தார். வரங்கள் இரண்டில் ஒன்றினால் பரதன் அரசாள, மற்றொன்றினால் இராமன் காடாள்வது என்று கைகேசி சொல்ல, "இராமன் காடாள்வது" என்ற சொல்லைக் கேட்டதும் அவர் பாம்பு கடித்து விடம் ஏறிய யானை சாய்வதுபோல் சாய்ந்தார். "கொல்லன் ஊது உலையில் கனல் என்ன வெய்து உயிர்த்தார்."

உலர்ந்ததுநா, உயிர் ஓடலுற்றது, உள்ளம்
புலர்ந்தது, கண்கள் பொடித்த, பொங்குசோரி
சலம்தலை மிக்கது…
அலந்து அலையுற்ற அரும்புலன்கள் ஐந்தும்
(கைகேசி சூழ்வினை)

நிலத்தில் இருப்பான், எழுவான், விழுவான், நெட்டுயிர்ப்புக் கொள்வான், உயிர்ப்பு அடங்கி ஓய்வான், உலாவுவான்,

உதைக்க எண்ணுவான், பழிக்கு நாணுவான், ஒன்றும் தோன்றாது நிற்பான்.

உள்ளம் நீ திகைத் தனையோ? பிறர்*
சொல்லால் கள்ளம் உற்றனையோ?
கொள்ளான் பரதன் இவ்வரசு—உலகம்
எள்ளும் உன்னை பெரும் மாசு!

ஆ! மண்ணையும் விண்ணையும் கட்டி ஆண்ட எனக்கு மனையில் உற்ற பெண்ணாலோ இக்கேடு வரவேண்டும். உலகத்திற் பெண்ணினமே இல்லாவண்ணம் இனி அழித்து நிற்பேன்: பாவி இவளை ஒறுத்து ஒழிப்பேன்? பெண்ணை ஒறுத்தான் என உலகம் பழிக்குமே என நாணுகின்றேன். ஐயோ, என்ன செய்வேன்? நலம் பிறக்குமாயின் காலில் வீழ்ந்து வணங்கியும் அதனைப் பெறலாமே! அவ்வாறு செய்யட்டுமோ? (காலடியில் வீழ்தல்) அடீ, யான் வேண்டியதனால் இராமன் இசைந்தான்; இப்போது நீ விரும்பினால் அவன் உடனே கொடுப்பான். மண்ணை எல்லாம் மகனுக்காகப் பெற்று நில், மற்றதை மறந்துவிடு (ஏங்குகிறான்) கெஞ்சிக் கெஞ்சிக் கேட்கிறேனே! உன் நெஞ்சம் இரும்போ, கல்லோ? மீள மீளக் கேட்பின் பேயும் இரங்கும் என்பார்கள். உனக்கு ஏன் இரக்கம் பிறப்பதில்லை. அடீ, என் உயிர் என் கண், எல்லா உயிர்கட்கும் நன்மகன் இராமனை நாட்டில் இருத்த மாட்டாயா? அடிபாதகி, இதுகாறும் வாழ்ந்த மாதர் பலரும் கணவனுக்கு முன்னராகத் தாம் இறக்க வேண்டினர். நீ கணவனைக் கொன்று, தான் இருக்க நினைக்கின்றாயோ? அடீ, உன்னால் நான் உயிரைவிட வேண்டுமா? ஆம்! நான் உன்னை மனைவியாகக் கொண்டேன் அல்லேன், யமனாகக் கொண்டேன். பாவி, உன் கழுத்தின் தாலிக் கயிறு உன்மகன் முடிசூட்டுவிழாவில் கையின் காப்புக் கயிறு ஆகுக! இன்று மங்கல நீராட்டுக்கு வந்த நீரை இப்பாவியின் வாயின் நீராய் ஊற்றி சமம் ஏற்றுக!

ஏ இராமா, நீ காடு ஏகவோ? சனகமகாராசன் மகள் கையைப் பற்றி நீ மணவறை சுற்றிவர மணக்கோலங்கண்ட

யான், இன்று சீதையுடன் நீ வனம்புகும் காட்சி காணவோ? சகியேன். என் மனம் சகியாது, அது நேயங்கண்டு உருகி நிற்பது, என் உடலும் உருகிநிற்பது. உன்னைப்போல் கல்மனம் எனக்கு இல்லை; என்னால் உன்னைப் பிரிந்து வாழமுடியாது!

"நெகுதற்கு ஒத்த நெஞ்சும், நேயத்தாலே ஆவி
உகுதற்கு ஒத்த உடலும் உடையேன், உன்போல்
அல்லேன்
தகுதற்கு ஒத்த சனகன் தையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணால் போகக் காணேன் என்றான்"

தசரத மன்னரின் சோகம் பல சுவைகள் கொண்டது. ஏக்கம், விக்கம், தளர்ச்சி, வெகுளி, அழுகை, சீற்றம் பலவுங் கொண்ட அரச அவலம் அது! இவை தோன்ற நடிப்பவரே நடிகர் திலகம் ஆவர்.

சுமந்திரர் அழுகை

சுமந்திரர் தசரதரைப் போன்று மூத்தவர், அமைச்சர், அறிஞர். அவர் இராமனைக் காட்டில்விட்டு மீளும்போது தன்னை மிக மிக நொந்துகொள்கிறார்.

எங்கள் கோமகற்கு இனி என்னின் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால்!
(தைலமாட்டு—25)
தென்புலக் கோமான் தூதிற் செல்வனோ! (23)
கூற்றுறழ் சொல்லினால் கொலைசெய்வேன்கொலோ?(24)
தேவியும் இளவலும் தொடரச் செல்வனைப்
பூவியல் கானகம் புக உய்ததேன் என்கோ,
யாவது கூறுவேன்? இரும்பின் நெஞ்சினேன் (21)

ஐயோ, யானோ இராமனைக் காட்டில் கொண்டுவிட வேண்டும்! கைகேசி சொல்லளவில் நின்றாள், யான் செயலில் ஆற்றி மிகமிகக் கொடியன் ஆகிறேன்! யான்போய் மன்னரிடத்தில் "இராமன் போயினான்" என்றுகூற, அவர்

அதுகேட்டு உயிர்விட, யான் அல்லவா மன்னருக்கு யமன் ஆகிறேன். நாட்டுக்கு எவ்வாறு செல்வது? என்ன உரைப் பது? ஐயோ! ஐயோ!—இது அறிவுடைய முதியவர் அழு முறை.

4—(3) இளங்குமரர் அழுகை

இராமன் காளைப்பருவத்துப் பேரறிஞன்; ஆதலின் அவ னிடம் ஒப்பாரி வெகுளி கதறல்களை நாம் எதிர்பார்க்க முடியாது. அவன் காட்டிற்குச் சென்றதும், பரதன் அவனை அழைக்க வந்தான். தன் முன் நின்ற தம்பியை நோக்கி இராமன் ''ஐயன் மல்லுயர் தோளினான் வலியனோ?" என்றான். பரதன் அதற்கு மறுமொழியாக'' ஐய, உன்பிரிவு ஒரு நோய் ஆக, என்னையீன்ற வெய்யவள் வேண்டிய வரமே காலனாக, மன்னன் மெய் நிறுவி மேல்உலகு உற்றான்'' என்று கூறவும் இராமன் சிந்தை கலங்கி வருந்த லானான்:

நந்தா விளக்கனைய நாயகனே...
தந்தாய், தனி அறத்தின் தாயே, தயாநிலையே,
எந்தாய், இகல்வேந்தர் ஏறே, இறந்தனையே!
அந்தோ! இனிவாய்மைக்கு ஆர்உளரே (கிளைகண்டு)
கான் அடைந்தேன் யான் என்ன—
வான் அடைந்தாய் நீ மன்ன·—
யான் இருந்தேன் வாழ்வுகந்தே—

இவ்வாறு தன் ஆற்றாமையை அறிவித்து நின்றான். பின்னர் தன்வழியில்...சடாயு சீதைக்காகப் போராடிக் குற்று யிராகக் கிடக்கக் கண்டு, தன்னை அடக்க முடியாதவனாக வாய்விண்டான்:

எந்தாயே, எற்காக நீயும் இறந்தனையால்
அந்தோ, வினையேன் அருங்கூற்றம் ஆனேனே...
நீண்டேன் மரம்போல, நிற்கின்றேன் புன்தொழிலேன்

வேண்டேன் இம்மாயப் புன்பிறவி வேண்டேனே...
வன்தாள் சிலைஏந்தி வாளிக்கடல் சுமந்து
நின்றேனும் நின்றேன், நெடுமரம்போல் நின்றேனே

இவ்வாறு தான்நொந்து இரங்கிச் சோக முற்றான். மாரீச மானை வேட்டையாடித் திரும்பிவந்து இருப்பிடத்தை நோக்க, ஆங்கு சீதை இல்லாமை கண்டு

கைத்த சிந்தையன், கனங்குழை அணங்கினைக்
காணான்;
துய்த்து வாழ்தர வேறொரு பொருளிலான் உதவ—
வைத்த மாநிதி மண்ணொடு மறைந்தன ஆங்குப்
பொய்த்துளார் கொளத், திகைத்து நின்றானையும்
போன்றான் (சடாயு உயிர் 159)

இந்திரசித்தின் நாகபாசத்தால் இலக்குவன் கட்டுண்டு கிடக்கிறான்; அப்போது 'வாசத்தார் மாலை மார்பன் வாய் திறந்து அரற்றலுற்றான்'' என்று குறிப்பிடுகின்றார் கம்பர். ஆயினும் ஆங்கு உற்ற நடப்பாக

உரைத்திலன் ஒன்றும், தன்னை உணர்ந்திலன் உயிரும்
ஓடக்
கரைத்திலன், கண்ணின் நீரைக்; கணடிலன் யாதும்
கண்ணால்,
அரைத்திலன் உலகம் எல்லாம் அங்கையால், பொங்கிப்
பொங்கி
இரைத்திலன், உளன் என்றெண்ணி இருந்தனன் விம்மி
(நாகபாச 215) ஏங்கி

தாமரைக் கையால் தாளைத் தைவரும், குறங்கைத்
தட்டும்,
தூமலர்க் கண்ணை நோக்கும், மார்பிடைத் துடிப்புண்டு
என்னா

ஏமுறும், விசும்பை நோக்கும், எடுக்கும், தன்மார்பில்
ஏற்றும்,
பூமியில் வளர்த்தும், 'கள்வன்போய் அகன்றானோ
என்னும் (நாகபாச 223)

இதனை நடித்துப் பயில்தல் வேண்டும். -'அசைவு'' உள்ளத் தளர்ச்சியின் நடிப்பு இங்கு முற்றி நிற்கின்றது· இவ்வாறே இலக்குவன் பிரமாத்திரத்தால் கட்டுண்டு கிடக்கும் போதும்

எந்தை இறந்தான்—யான் இருந்தேன் நீ
உய்ந்தே இருந்தாய் என இருந்தேன். உரைகாணேன்,
வந்தேன் தம்பி, வந்தேன்;யானே இனிவாழேன்

தாயோ நீயே, தந்தையும் நீயே, தவம் நீயே
சேயோ நீயே, தம்பியும் நீயே, திரு நீயே
போயோ நின்றாய், என்னை இகந்தாய், புகழ்பாராய்
நீயோ, யானோ நின்னினும் நெஞ்சம் வலியேனோ?

''துயில்கின்றாயோ? நீயே உறக்கந் துறவாயோ?''
''மாண்டாய் நீயோ? யான் ஒருபொழுதும் உயிர்வாழேன்'
''பொன்றும் என்று தம்பியை ஆர்வத்தொடுபுல்லி
ஒன்றும் தோன்றான் தன்னைமறந்தான் துயில்
உற்றான்''

இலக்குவனுக்காக இரங்கினான் அழுதான் ஏக்கமுற்றான் மெய்மறந்தான் இராமன்.

பரதன்

கேகயநாட்டிலிருந்து வந்த பரதன் தந்தை இறந்ததையும் தமையன் காடு சென்றதையும் அறிந்து துடித்தான்; தாயைப் பேய் என்றும் நோய் என்றும் கடிந்தான்; காடு சென்று அண்ணனை அழைத்துவரப் புறப்பட்டான். ''அன்புடையார் போல யானும் அழுகின்றேன்'' என்று தன்னை நொந்து

தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்
(குகப் படலம்.)

இராமனுடைய பாதுகையைப் பெற்று

அடித்தலம் இரண்டையும், அழுதகண்ணினன்
முடித்தலம் இவைஎன முறையிற் சூடினன்
படித்தலத்து இறைஞ்சினான் பரதன்போயினான்.

சத்துருக்கன்

''சுமித்திரைச் சிங்கம்'' ஆகிய இலக்குவனோ அச்சம் அழுகை அறியா உச்ச நிலையன், அவனுக்கு இளைய சத்துருக்கன் அண்ணனுக்கு ஏற்ற தம்பி; ஆண்மை மிக்கவன், அடக்கமானவன்; ஆயினும் உள்ளக்கிடக்கையை ஒளியாது வெளி விடுபவன், இராமன் நாட்டுக்கு வரக் காலந் தாழ்த்தியதால் எரிபுகத் துணிந்த பரதன் தம்பியை நோக்கி ''நீ இரு, ஆட்சி செய்; யான் எரி புகுவல்'' என்று கூற, இதனைச் செவியுற்ற தம்பி சத்துருக்கன்:

ஒருவன்தன் நாட்டைவிட்டுக்: காடாள்வான்: அவன் துணையாய்
ஒருவன்நல் லுடன்பிறப்பாய் உடன்செல்வான்.ஒழுக்கத் தால்
ஒருவன் செந்தீப்புகுவான் உயிர்வாழ்தல் இழிவெனவே.
ஒருவன்யான் இளையவன்யான் அரசாள்வோன்! நன்று! நன்றே!

ஒருமூவர் மூத்தவர்கள் ஒழியும்வகை இளையவன்றான்
இருப்பதுவும், அரசமுறை செய்வதுவும் ஏற்கும் ஏற்கும்!
திருநகரின் உள்உறைதல் தீதென்றே வெளியுறைந்தான்
எரிப்புகுவான், அதுபார்த்து எவன்வாழ்வான் அவனே ஆள்வன்*
(மீட்சி 223.) கம்பரப்பர்)

உள்ளம் உருகிய அழுகை.

4—(4) இராவணன் அழுகை

இராவணன் சுத்தவீரன், தேவர்களும் மூவர்களும் அஞ்ச வாழ்பவன், கலங்காத நெஞ்சத்தினன். "குன்றின் அனையாரும் குன்றுவர்" என்றது போல் மலை போல் திண்ணிய இராவணனும் உள்ளம் உருகி ஓலமிட்டு அழ வேண்டிய நேரமும் வந்தது. கும்பகருணன் அண்ணனினும் பெரிய உருவத்தான்; தாள் உடை மலை, எனத் தோன்று பவன்; "தோளொடு தோள்வரைத் தொடர்ந்து நோக்குற நாள் பல கழியும்". "கடலினும் பெரிய கண்கள்" உடையவன். அவனைக் காண்பார் துணுக்கம் எய்துவர். இராவணனுக்கும் அரக்கர் குலத்துக்கும் அவன் முதுகெலும்பு போன்றவன். அவன் இராமன் கை அம்பால் இறந்தான் என்ற செய்தி இராவணனுக்கு எட்டியது. சகிக்க முடியுமா? உடன்பிறப்பு அல்லவா? உருவத்தில் சிறந்த—உரத்தில் மிக்க உடன்பிறப்பு அல்லவா? அது அழிந்தால் யாவரே அடங்கியிருக்க முடியும்? இராவணன் வாய்விட்டுக் கதறினான்; எவ்வாறு? யானை பிளிறுவது போல இராவணன் அலறினான்:

> செந்தேன் பருகித், திசைதிசையும் நீவாழ
> உய்ந்தேன். இனிஇன்று நானும் உனக்குஆவி
> நொந்தேன். பிரிந்திரேன், தனிவாழத் தாழகில்லேன்,
> வந்தேன்தொடர; மதகளிறே, வந்தேனால்

நோக்கறவும், எம்பியர்கள்மாளவும், இனி இலங்கைப் போக்கறவும், மாதுலனார் பொன்றவும், பின்பிறந்தாள் மூக்கறவும், வாழ்ந்தேன். ஒருத்தி முலைக்கிடந்த ஏக்கறவால், இன்னும் இருப்பேனோ உனை இழந்தும்.

ஏ தம்பி, மதயானை! இறந்தனையோ? யான்இனி இரேன், வருகிறேன் என்று இரைச்சலிட்டான் இராவணன்.

கண்டார் கலங்கத் தக்க காட்சி இது. அண்ணன் தம்பியர் உறவு எத்துணை உறுதியானது! இராவணன் புலம்பல் ஒருவரின் பிரிவு மற்றவருக்குத் தரும் வருத்தத்தின் எல்லைக்கு ஒரு அளவுகோல். இராமன் இலக்குவனுக்காகப் புலம்பவில்லையா? என ஒரு கடா எழலாம். உள்ளக் கவலை சரிடத்தும் ஒன்றே. இராமன் அடக்கமாக அழுதான். அரக்கன் வாய்விட்டு அலறி அழுதான், அரற்றினான். அழுகையும் பிறப்பு குலம் கல்வி ஆசாரம் சார்ந்தே வெளிப்படுகிறது.

இளையமகன் அதிகாயன் இறந்து விட்டான் என்ற செய்தி எட்டியதும், இராவணன்—

திசையினை நோக்கும், நின்ற தேவரை நோக்கும் வந்த
வசையினை நோக்கும், கொற்ற வாளினை நோக்கும், பற்றிப்
பிசையுறும் கையை, மீசைசுறுக்கொள உயிர்க்கும், பேதை
நசையிடக் கண்டான் என்ன நகும் அழும் முனியும் நாணும்

(அதிகாயன் 244)

ஏங்கிய விம்மல் மானம் இரங்கிய இரக்கம் வீரம்
ஓங்கிய வெகுளி துன்பம் என்ற இவை ஒன்றுக்கொன்று
தாங்கிய தரங்கமாகக் கரையினைத் தள்ளித் தள்ளி
வாங்கிய கடல் போல் நின்றான், அருவிநீர் வழங்கு கண்ணான்

அலைகள் ஓங்கி அடித்து ஓய்ந்து கடல் உள்வாங்கும் நிலையில் நினறான் இராவணன். அன்பர்கள் படித்துப் பொருள் உணர்ந்து திளைக்க வேண்டிய மெய்ப்பாடு இஃது. இதனை எழுத்தில் வடிப்பதற்கில்லை. பின்னர் இந்திரசித்து இறந்தான் என்று அறிவிக்கப்பட்டதும்

மைந்தவோ என்னும், மாமகனே என்னும்
எந்தையோ என்னும், என் உயிரே என்னும்,
முந்தினேன் உன்னை, நான் உளனோ என்னும்
(இராவணன் சோகப் 10)

கட்டமானுடன் கொல்ல—என்காதலன்
பட்டழிந்தனனே என்னும் பன்முறை
விட்டழைக்கும் உழைக்கும் வெதும்புமால் (14)

எழும் இருக்கும் இரைக்கும், இரக்கமுற்று
அழும் அரற்றும் அயர்க்கும் வியர்க்கும், போய்
விழும் விழிக்கும் முகிழ்க்கும் தன்மேனியால்
உழும் நிலத்தை, உருளும் புரளுமால் (15)

அழுது அரற்றி இரைந்து நிலத்திற் புரண்டு உழுது ஆண் மக்கள் அழுகைக்கு ஒரு முடிவு கண்டாயிற்று. இனிப் பெண் மக்கள் அழுகை பற்றிச் சிறிது காண்பாம். இவற்றைநடித்துக் கம்பரின் நாடகத்திறனை உணர்தல் வேண்டும்.

4—(5) கோசலை அழுகை

கோசலை கோப்பெருந்தேவி; அறிவுமிக்கவள்; ஆசாரம் அறிந்தவள், ஆதலின் அவளிடத்திதில் அலறல் கதறுதல் களை எதிர்பார்க்க முடியாது. இராமன் அவளிடம் வந்து "அரசர் என்னைக் காட்டுக்குச் செல்ல ஆணையிட்டுள்ளார்" என்று கூறியபோதும் அவள் பதறாமல் அலறாமல் நிதானம் இழவாமல்

வஞ்சமோ? மகனே, உன்னை மாநிலம்
தஞ்சமாகநீ தாங்குஎன்ற வாசகம்
நஞ்சமோ? இனி நான் உயிர் வாழ்வனோ?
அஞ்சும், அஞ்சம், என் ஆருயிர் அஞ்சுமால்.

எனத் தழுதழுத்து உரைத்தாள். இராமன் புறப்பட்ட நேரத்திலும்" காத்து நல்குமின் தெய்வதங்காள் என
நாத்தழும்ப நவின்று நடுங்கினாள்."

தசரதர் குற்றுயிராய்க் கிடக்கும் போது

"போவாது ஒழியான்" என்றாள் புதல்வனை, கணவன்
சாவா தொழியான் என்றே உள்ளம் தள்ளுற்று
அயர்வாள்
"வாவா" என்றாள் மகனை; கணவன் புகழுக்கு
அழிவாள்.

தசரதர் உயிர் நீத்தார். கோசலை நிலை என்ன?

உயிர்ப்பிலன் துடிப்புமில்லன் என்றுணர்ந்து உருவம்
தீண்டி
மயில்குலம் அனைய நங்கை கோசலை மறுகி வீழ்ந்தாள்
வெயில்சுடு கோடை தன்னில் என்பிலா உயிரின்
வேவாள்
போனான் போனான் எங்களை நீத்து இப்பொழுது
என்ன!
மீனே என்ன மெய் தடுமாறி விழுகின்றாள்.
.... மன்னவன் மார்பில் துவள்கின்றாள்

இது ஆசாரம் மிக்க பெருமாட்டியின் அழுகை நிலை. இப்பெருமாட்டி—14 ஆண்டுகட்குப்பின் இராமன் குறித்த நாளில் வரப்பிந்தியதால் பரதன் தீவளர்த்து நிற்கிறான் என்று கேள்விப்பட்டதும் உற்றநிலை என்ன? ஆத்திரத்தால் அலறி அடித்து விரித்த கூந்தலுடன் யாவரும் தொடர ஓடிவருகின்றாள்:—

ஒப்பெழுத ஒண்ணாத கற்புடையாள் வயிறுபுடைத்து
அலமந்து ஏங்கி,

இப்பொழுது நீ இறந்தால் உலகிறக்கும்,
மகனே, என் செய்தாய்? என்றே
கடிதோடி விலக்க வந்தாள்

மந்திரியர் தந்திரியர் வளநகரத் தவர், மறையோர்
மாதர் பல்லோர்
சுந்தரியர் பலரும்கை தலைவைத்து உளம் இரங்கித்
தொடர்ந்து செல்ல...
பரதனைவந் தடைந்தாள் அன்றே.
விரிவான பெருங்கூந்தல் புறத்தசைந்து வீழ்ந்தொசிய
மேனி தள்ள
எரி அமைந்த மயானத்தை எய்துகின்ற மழைக்
கண்ணான் எதிரில் தோன்ற,
பரிவமைந்த திருமணத்தான் அடிதொழலும் அவள்
புகுந்து பற்றிக் கொண்டாள்

கோசலைக்கு இங்கு வாய்மொழி யில்லை, அழுகை, நடையில் இருக்கிறது. அதனைக் கம்பர் தம் செய்யுள் நடையில் வெளிக்காட்டுகிறார். அவள் ஓடி வருவது போலச் செய்யுளும் ஓடி உருள்கிறது. அழுகைக் கண்ணீர் போல் வார்ந்து ஓடுகிறது செய்யுள். ஆண்டில் மூத்த கோசலையின் அழுகை பற்றிக் கண்டோம். இனி இளமைச் சீதையின் அழுகைப் பற்றிக் காண்பாம்.

4—(6) சீதையின் அழுகை

சீதை திருமணம் புரிந்தும் இன்னும் மகப்பேறு கண்டறியாதவள்; ஆகவே உலகியல் அறியாத கன்னியர் போன்ற நிலையினாள். அழுகை பெண்கட்கான அணிகளில் ஒன்று என ஆங்கில மகாகவி சேக்சுப்பியர் கூறியிருக்கிறார். தம் காலக் கன்னியர் அழ அறியார்: அது கீழ்த்தர இழிசெயலாக ஒதுக்கிவிட்டனர். பள்ளிகளிற் கல்லூரிகளிற் படித்துவரும்

பெண்கள் வைகறையில் துயில் எழுதல், முன்றிலைப் பெருக்கிக் கோலம் இடல், ஆடை அணிந்து நீராடல், தாலாட்டுப் பாடல் பயில்தல், தலையிற் பூ வைத்தல் இவற்றைச் சிறிதுசிறிதாக ஒழித்து வருகின்றனர்: தாலாட்டுப் பாடுவார் எவரும் இலர். இந்நிலையில் அழுகை பற்றிக் கூறு வானேன்? தலைமயிரைக் குதிரைப்பிடரி மயிர்போல் பறக்க விடுகின்றனர். நாகரிகம் முற்ற முற்ற—தலைவாரிக் கொள் வதும் கைவிடப்பட்டுக் கட்டுப்பாடில்லாக் கம்பளிக்கடாக்கள் போல் ஆண்களும் பெண்களும் அலைகின்றனர். காலம் வரும், அன்று சீலம் பிறக்கும். சீதை திருமணம் புரிந்தபின் கணவனுடன் காட்டையடைந்தாள். உலகியல் அறியாச் சீதை நகரத்து வாயிலுக்கு வெளியில் வந்ததும் 'இது தானோ காடு?'' என்று கேட்டாள். அத்துணை மடம்! அவளை இராவணன் தூக்கிச் செல்கிறான். ஆதரவற்ற அவள்—சந்நியாசியாக எண்ணி ஏமாந்த அவள்—பொன் மானை விரும்பி இலக்குவனைத் திட்டி நின்ற பேதை அவள் இப்போது புலம்பும் முறை என்ன? இளம் பெண்கள் தந்தையை இழப்பின்; கணவனை இழப்பின் ஒப்பாரிவைக்க அறியாராய் ''ஐயோ ஐயோ; அப்பா அப்பா; என்செய்வேன் என்செய்வேன்'' எனச் சில சொற்களால் அழுகைபுரிவர்; அழுகை வார்ந்து ஓடாது. இந்த நிலையில் உள்ளவள் சீதை. இராவணன் அவளை இருந்த இடத்தோடு தூக்கும் நேரத்திலும்

''இறைவா, இளையோய், என ஏங்கினளால்.''

(சடாயு உயிர் 273)

இராவணன் அவளை ஆகாய வழியில் எடுத்துச் செல்லும் போதும் புலம்ப அறியாளாய்ச் சொற்களாகவே பகர்கிறாள்:—

மலையே மானே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே

நிலையா உயிரேன், நிலைதே றினர்போய்
உலையா வலியா ருழைநீர் புகல்வீர்

கோதா விரியே, குளிர்வாய், குழைவாய்
மாதா அனையாய் மனனே, தெளிவாய்
ஓதா துணர்வா ருழைஓ டினை போய்
நீதான் வினையேன் நிலைசொல் லுதியே.

இவ்வாறு இளம்பெண்ணின் அழுகையைக் காட்டி நின்றார் கம்பநாடர். இடம், காலம், பாத்திரம் அறிந்து அதற்கு ஏற்ற நடையிற் கவிதந்தவர் கம்பர் ஒருவரே. அசோக வனத்திற் தனித்திருக்கிறாள் சீதை. திடீர் என இராமன் எண்ணம் வருகிறது, வருந்திப் புலம்புகிறாள். எவ்வாறு?

கொடியேன் இவைகா ணகிலேன், உயிரை
முடியா நமனே, முறையோ முறையோ,
விடியா இருளில் எனைவீ சினையோ,
அடியேன் உயிரே, அருள்நா யகனே

அறமே, கொடியாய், இதுவோ அருள்தான்?
விதியே, கொடியாய் விளையா டுதியோ!
மெய்யாய் வினைஎண் ணிவிடுத் தகொடுங்
கைகேசி கருத் திதுவோ? களிறே

(உருக்காட்டு படலம்)

சீதையை வஞ்சிக்க எண்ணினான் இராவணன். மருத்தன் என்னும் அரக்கனைச் சனகன் போல் உருக்காட்டச் செய்து, அம்மாயா சனகனைச் சீதைமுன் கொண்டு நிறுத்தினான். வஞ்ச அரக்கனைத் தந்தையாகவே நினைத்து, அவன் கட்டுண்டு நிற்கும் நிலைகண்டு வருந்துகிறாள் சீதை. எவ்வாறு?

"கைகளை நெரித்தாள் கண்ணை மோதினாள்...........
நிலத்திடைப்
பதைத்தாள், நெஞ்சம் விம்மினாள், நடுங்கி வீழ்ந்தாள்"
(மாயா சனக 32)

எந்தையே, எந்தையே என்பொருட்டு உனக்கு
இக்கோள் வந்ததே!
தந்தையே, தாயே, செய்த தருமமே, தவமே - என்னும்
வெந்துயர் என்னும் தீவீழ் விறகென வெந்து வீழ்ந்தாள்

இன்னும் ஒன்று பார்ப்போம். பிரமாத்திரத்தால் யாவரையும் மயக்கிப் போட்டு, அக்காட்சியைச் சீதைக்குக் காட்டுகிறார்கள் அரக்கர். சீதை நிலை என்ன?

விழுந்தாள் புரண்டாள், உடல்முழுதும்
வியர்த்தாள் வெதும்பினாள்
எழுந்தாள் இருந்தாள், மலர்க்கரத்தை
நெரித்தாள் சிரித்தாள் ஏங்கினாள்;
கொழுந்தா என்றாள், அயோத்தியர் தம்
கோவே என்றாள். எவ்வுலகும்
தொழும்தாள் அரசேயோ என்றாள்.
சோர்ந்தாள் அரற்றத் தொடங்கினாள்
(பிராட்டி களன்காண் 9)

விராதன் இராமஇலக்குவரைத் தூக்கிப் பறக்கத் துணிந்தான். சீதை பதைத்து எவ்வாறு புலம்பினாள்:-

அன்பின் அறவோர்கள் தம்மைவிட்டு
என்னையே நுகருதி என்றனள் விழுந்தாள்.
கோதையொடும் ஒசி கொம்பென வீழ்ந்தாள்
(விராதன் வதை 40)

4—(7) தாரை புலம்பல்

கிட்கிந்தையில் வாழ்ந்த உத்தமி தாரை—வாலியின் மனைவி. தன் கணவன் இறந்துகிடக்கக் கண்டு அவ்வுத்தமி அழுத முறை:—

ஐயா, நீஎனது ஆவி என்பது
பொய்யோ? பொய் உரையாத புண்ணியா,
செருவார் தோளா, நின் சிந்தையுள்ளேன் எனில்
மருவார் வெஞ்சரம் எனையும் வௌவுமால்;
ஒருவேனுள் உளையாயின் உய்தியால்:
இருவேம்உள் இருவேமும் இருந்திலேம்

பண்புடைய தாரை நைந்து உருகினாள். புலம்பினாளல்லள்

இளம்பெண்கள் சிறு சொற்களால் அழுகிறார்கள்.. முதியோரும் கீழோரும் புலம்பி ஒப்பாரி வைக்கிறார்கள் எனக் கண்டு, அம்முறையில் கவி தந்துள்ளார் கம்பர். இந்த நுட்பத்தை உணர்ந்து துய்க்க வேண்டியது அன்பர்கள் கடன்

4—(8) மண்டோதரி அழுகை

இராவணனுக்கு இருமனைவியர்: 1. மண்டோதரி 2. தானைமாலை. மண்டோதரி மக்கள் இந்திரசித்து, அட்ச குமாரன்: தானைமாலை மகன் அதிகாயன். போரில் அதிகாயன் இறந்தான் என்று கேள்விப்பட்டதும் அவனைப் பெற்ற தானைமாலை "இரியலிட்டு அலறி ஓயாப் பூசலிட்டு ஓடிவந்தாள்." (266)

மலைக்குவட்டு இடிவீழ்ந்தென்ன, வளைகளோடு ஆரம் ஏங்க
முலைக்குவட்டு எற்றும் கையாள், முழைதிறந் தன்ன வாயாள் (267)

வீழ்ந்தனள் அரக்கன் தாள்மேல், மென்மைத்தோள்
நிலத்தை மேவப்
போழ்ந்தனள், பெரும்பாம்பென்னப் புரண்டனள்,
பொருமப் பொங்கி
ஆழ்ந்தனள் துயர வெள்ளத்து, அழுகை கண் டறிந்தி
லாதாள் (268)

மண்டோதரி முதியவள், அழகு மிக்கவள், அறிவு சிறந்தவள்; இராவணேசுரனுடைய மனைவி: தன்மகன் இந்திரசித்து இறந்தான் என்று அறிந்ததும் (பரதனை நாடி ஓடி வந்த கோசலை போல) அவள் ஓடி வந்தாள்.

குரும்பையைப் புடைக்கின்றாள் போல் கைகளால் முலை
மேல் கொட்டி
அருங்கலச் சும்மை தாங்க (44)

உயிர்த்திலள் உணர்வும்இல்லள் உயிரிலள் கொல்லோ
என்னப்
பெயர்த்திலள் யாக்கை; ஒன்றும் பேசலள்; விம்மியாதும்
வியர்த்திலள், நெடிதுபோது விம்மலள், மெல்லமெல்ல
அயர்த்தனள், அரிதின் தேறி வாய்திறந்து அரற்ற
லுற்றாள் (46)

வெஞ்சின மனிதர் கொல்ல வீழ்ந்தனை, மீண்டா
யல்லை
அஞ்சினேன் அஞ்சினேன். இச்சீதை என்று அமிழ்தால்
செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளைஇத் தகையன்
அன்றோ (53)

தலையிலா யாக்கை காணத் தவஞ்செய்தேன்! அந்தோ
அந்தோ!
நிலையிலா வாழ்வை இன்னும் நினைவனோ நினை
விலாதேன் (47)

இவ்வாறு நொந்து புலம்பிய மண்டோதரி கடைசியில் தன் கணவனையும் இழந்தாள். அவள்

அன்னேயோ, அன்னேயோ. ஆகொடியேன் விதிஇதுவோ!

பின்னேயோ இறப்பதுயான்! பிழைத்தனவே எண்ண
மெல்லாம்!
முன்னேயோ முடித்தலையின் முகம்மண்மேல் கிடப்
பதுவும்!
என்னேயோ! என்னேயோ! இராவணனார் பரிசிதுவோ!

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி
உள்ளிருக்கும் திருமகள்மேல் உறுகாதல் எனஎண்ணி
எள்ளிருக்க இடமின்றித் துருவிற்றோ கூர்வாளி!
உள்ளத்துள் ஒருசிறிதும் இல்லைஎனக் கிடப்பதுவோ!

தந்தைபணி மேற்கொண்டு வெங்கானம் சேர்ந்த
அஃதும்,
தங்கையின்மூக் கிழந்ததுவும், தசமுகனின் காதல்
பித்தும்
செங்கமலச் சானகியாள் பெருங்கற்பும், தேவர்கள்தம்
பங்கமிலாத் தவநெறியின் பயன்எய்த வைத்ததம்மா!

இந்த முறையில் ஆற்றிநின்று அறம் அறிவித்தாள். இதனை இங்கு நிறுத்தி, இனி இராவணன் தங்கை சூர்ப்பநகை அழுகை பற்றிக் காண்பாம்

4–(9) சூர்ப்பநகை அழுகை

கல்வியறிவு நாகரிகம் ஒழுக்கம் அடக்கம் இவை பட்டி களிடத்தில் கிடையா, வாய்வீச்சு அதிகம். துடுக்குச் சிறு

வர்கள் வாயாடும்போது ஒருவரை ஒருவர் விஞ்சி நிற்க எண்ணி, வார்த்தைகளை வளர்த்து நிற்பர்: உனக்கு 5 அடி தருவேன் என்று ஒருவன் கூறினால், அடுத்தவன் 'உனக்கு 10 அடி தருவேன், என்பான் பின்னர் 10, 100, 1000, 10000, 100000, 10000000 என மாற்றி மாற்றி மாற்றி வளர்த்துக் கொண்டே போவார்கள். அவ்வாறே தெருப் பெண்டிரும். ஒருத்தி ' நீ திருடி'' என்ன; அடுத்தவள் 'நீ திருடி, உன் அம்மா திருடி'' என்ன; பின்னர் ''உன் பாட்டி திருடி, உன்முற்பாடி திருடி'' இவ்வாறு வசை பேசித் தம்திறமையை விளக்குவர். இதனையே

'அகப்பட்டி ஆவாரைக்காணின், அவரின்.
''மிகப்பட்டுச் செம்மாக்கும்கீழ்''—என்று வள்ளுவர்

கயவர்கள் இயல்பாகக் கூறினார். இக்கயவர்கள் அழகாகப் பேசுவர், அழகாகத் திட்டுவர், அழகாக அழுவர். சூர்ப்பநகை ஒரு கயத்தி, வாய் கூசாமல் பேசுவாள், ஓலமிட்டு ஒப்பாரி வைப்பாள். அவள் அழுகை பற்றிக் காண்போம்.

சீதை அயலில் இருப்பதனால் இராமன் தன்னை விரும்பு கின்றானல்லன் என்று எண்ணிய சூர்ப்பநகை சீதையைப் பற்றத் துணிந்தாள். இதனைக் கண்ணுற்ற இலக்குவன் அவளின் மூக்கு காதுகளை அறுத்து ஒறுத்தான்: வேதனை தாங்காமல் அவள் அழுதாள் எவ்வாறு?

நிலையடுத்து நெடுநிலத்து நீஇருக்க—தாபதர்கள்
சிலைஎடுத்துத் திரியும்இது சிறிதன்றோ! தேவர்எதிர்
மலைஎடுத்த தனிமலையே! இவைகாண வாராயோ
ஓஓஓ

சலியாத மூவருக்கும் வானவர்க்கும் தானவர்க்கும்
வலியானே! யான்பட்ட வலிகாண வாராயோ! ஓஓஓ

அரனேயோ, அயனேயோ, அரியேயோ எனும் ஆற்றல்
கரனேயோ, யான்பட்ட கையறவு காணாயோ ஓஓஓ

அரனிருந்த மலைஎடுத்த அண்ணாவோஒ அண்ணா
வோஓஓஓ
இசையாலே நிறைந்தபுயத் திராவணவோ, இராவண
வோஓஓ
மருகாவோ, மானிடர்தம் வலிகாண வாராயோ ஓஓஓ

இஃதே அசல் அழுகை: அருமையான ஒப்பாரி, கிராமத்துப் பெண் தன் தந்தையை இழந்தால் "என்னைப் பெற்ற தங்கமே, நீ என்னை விட்டுப் போகிறாயே" என இழுத்து ஓலமிடுவாள்; அவ்வாறே புலம்பினாள் சூர்ப்பநகை. ஏன்? அவள் பட்டி, லண்டி கயத்தி. இவ்வாறு அழுது நின்ற சூர்ப்பநகை அவர்களை விட்டுப் பிரியும்போதும் அழுகையுடன் வஞ்சினம் உரைப்பவளாய்—

காற்றினிலும் கூற்றினிலும் கடியானை கொடியானை
கரனை—உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்
என்று சலங் கொண்டு போனாள்.

அன்பர்கள் இவற்றை வாயார ஓலமிட்டு உரைத்தல் வேண்டும்; அஃதே திளைக்கும் வழியாகும்.

4—(10) நாகரிக அழுகை

நாகரிக நாரியர் வாய்விட்டு அழமாட்டார், ஏங்குவர், தேம்புவர், கண்ணீர் வடிப்பர், நெட்டுயிர்ப்பர்; ஒப்பாரி வைத்தல் அவர்கள் பயிலாத வித்தை, ஒரு சோலையுள் இளந் தம்பதிகள் பலர் உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தனர்; பூக்களைப் பறித்து இளஞ் சிறுமியர்க்கு

அளித்து இன்புற்றனர். அங்கிருந்தவர்களில் இளநங்கை ஒருத்தி கண்ணைக் கவரும் கட்டழகு படைத்தவளாக இருந்தாள். ஒருவன் நல்ல பூ ஒன்றை எடுத்து அவள் தலையில்—தன் மனைவி அறியா முறையில் செருகிவிட வேண்டும் என்று உள்ளம் துடித்தான். அவன் அவள் அருகில் வருவதும் போவதுமாகப் பல முறை நடந்து, ஒருமுறை ஒரு பூவை அவள் தலையிற் செருகி அயல் சென்றான்; ஆனால் எப்போதும் கடைக்கண் பார்வையில் இருந்த அவன் மனைவி அதனைக் கவனித்து விட்டாள். என் செய்ய? திட்டினால் கூட்டத்தில் தன் கணவனை இழிவு படுத்தியதாகும்; அழுதால் பிறர் ''ஏன்'' என்று கேட்பர், இன்பப் பொழுதுபோக்கு துன்ப மாக முடியும்: ஆனால் அவளால் இதனைச்சகிக்கவும் முடியவில்லை: தாரை தாரையாகக் கண்ணீரை வடித்து அடங்கி நின்றாள்.

திங்கள்முகத்து ஒருதையல் தன்நாயகன்—அயல்ஆர்
மங்கைஒருத்திக்கு மலர்கள்சூடிடக் கண்டாள்;
பொங்கினாள்உளம்; பொறுக்கிலாள் நெடிதேங்கி
அங்கண்ஆலிநீர் உகுத்தனள் அமர்ந்தனள், சோர்ந்தாள்
(பூங்கொய் படலம்)

மற்றோரிடத்தில் இவ்வாறே ஒரு பெரு விருந்து நடந்தது. அங்கு சுந்தரி தன் கணவனுடன் அமர்ந்து விருந்தருந்தினாள். சுந்தரியின் தங்கை அந்தரி நல்ல அழகு வாய்ந்தவள். அவள் தன் கணவனுடன் அப்பால் ஓரிடத்தில் அமர்ந்திருந்தாள். சுந்தரி கணவனுக்கு அந்தரி ஒரு தெவிட்டாத காட்சியளித்து, உள்ளத்துக்கு இனிய ஒரு விருந்து ஆனாள்; ஆகையினால் எப்போதும் 'அந்தரி ஏன் உன்பக்கத்தில் வரவில்லை? அந்தரி ஏன் அப்பால் இருக்கிறாள்? அந்தரிக்கு உன்மீது வருத்தமா? அந்தரி இங்கிருந்தால் அது நமக்கெல்லாம் ஒரு பெருமையல்லவா? இவ்வாறு ''அந்தரி அந்தரி'' என்று சொல்லித் தன் ஆவலைத் தீர்க்க

முயன்றான்; அக்காள் சுந்தரிக்கு இது பிடிக்கவில்லை. என் செய்ய? "பெயக் கண்டும் நஞ்சு உண்டு அமையும்" பண்பு கண்டவள் அவள்.

வளைபயில்முன்கை ஓர்மயில் அன்னாள், தனக்கு
இளையவள் பெயரினைக் கொழுநன் இயம்பலும்—
முளைஎயிறு இலங்கிட முறுவல் வந்தது,
களகள உதிர்ந்தது கண்ணின் ஆலியே

(உண்டாட்டுப் படலம்)

ஒரு கணவன் தன் நாற்காலியில் ஆழ்ந்த சிந்தனையோடிருந்தான். மனைவி அங்கு வந்து கொண்டிருந்ததையும் அவன் கவனிக்கவில்லை. அருகில் வந்த அவள் பின்னால் நின்று சிறு வேடிக்கையாக அவன் கண்களைப் பொத்தினாள். அவன் உடனே "யார் இது" என்று கூறினான். இதில் தவறு யாது? பெருந்தவறு கண்டாள் மனைவி; இவர் கண்ணைப் பொத்தி விளையாடும் பிறர் இருக்கிறார்கள் போலும், கற்புடையாரல்லர்; என்று நெட்டுயிர்த்துக் கண்ணீர் வடிக்கலானாள்.

போர்என்ன வீங்கும் பெரும்புயத்தான் ஒருவன்*
மாரன்அனையான் மெய்மறந்திருந்தானை
கார்அன்ன கூந்தலாள் கண்கள் புதைத்தலும்,
'யார்?" என்ன; உடன்அமர்ந்து உயிர்த்தனள் அழுதனள்

(பூக்கொய்)

இவ்வாறு பலதரப்பட்ட அழுகைகளை இடம் பருவம் இனம் நாகரிகம் கண்டு அழகு ஒளிரும் முறையில் அமைத்தார் கம்பநாடர்; அவற்றின் நுட்பங்களைக் கண்டறிவது கற்பார் கடன். கம்பர் கலைநயம், நாகரிகம் விளங்க எத்துணைச் சிறப்பாக நாடகம் அமைக்கிறார். 10வகை யாம் காட்டினோம்; கம்பநாடகத்தில் இன்னும் பல உள; விரிவு அஞ்சி விடுத்தனம். இனி 'மருட்கை' பற்றிப் படிப்பாம்.

5. மருட்கை

நகை உவகை அழுகை பற்றிப் பார்த்தோம். இனி மருட்கை பற்றிப் பார்ப்பாம். மருட்கை எனின் பொருள் என்னை?

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே—

என ஆசிரியர் தொல்காப்பியர் மருட்சிக்கு 4 காரணங்கள் கற்பிக்கிறார். அடியார்க்கு நல்லார் "சொற் சோர்வு—விழித்தல் மிகவாமை" என்று மெய்ப்பாடு கூறுகிறார்.

மருட்கை என்பது வியப்பின் முதிர்ச்சியாகும். பிஞ்சு முற்றிக் காயாகிக், காய் கனி ஆவது போல வியப்பு வளர்ந்து மருட்சி யாகிறது. யானையைக் காண்பார் வியந்து பார்த்துச் செல்கின்றார். முன்னர் யானை பார்த்தறியாதார் அதனைப் பார்த்த வண்ணமாக வாய் அங்காத்து நிற்கின்றார்: இஃதே மருட்கை, நடன மங்கை நாட்டிய மேடையுள் வந்து நிற்கிறாள், திரை விலகுகிறது, அவள் இடுப்பில் கையூன்றித் தலை தாழ்த்தி வணக்கஞ் செய்கிறாள். நட்டுவனார்க்கும் பக்கவாத்தியக்காரர்க்கும் வணக்கம் செய்து, ஒய்யாரமாக மேடை நடுவில் வந்து, இடுப்பில் ஊன்றிய கையுடன் பொற் பதுமை போல் நிற்கிறாள். நடனம் தொடங்குகிறது. நட்டுவனார் கைதூக்கித் தாளம் தட்டித் "தாஅஅ" என இசை எழுப்புகிறார்; இசை ஒலி கேட்டதும் மங்கையின்

கைகள் இருபக்கத்திலுமாகத் துள்ளி நீள்கின்றன: அவள் மார்பம் ஒரு எழுச்சி நெகிழ்ச்சி காட்டி, அதன் மேலுற்ற தானையின் பொன்வரிகள் அலை வீசுகின்றன. வண்டிக் காளையின் துடையில் தார் குத்தியதும் அதன் உடம்பில் ஏற்படும் புல்லரிப்பு போல்—மங்கையின் மார்பின் அலை நெகிழ்ச்சியைக் காண்பார் வியப்புறுகின்றனர்: இக்காட்சியை முதன் முதலாகத் துய்ப்பவர் மருட்சி அடைகின்றனர்: இஃதே புதுமை மருட்சி: யானையைக் கண்டு நிற்பது பெருமை மருட்சி: குள்ள மனிதரைக் கண்டு நிற்பது சிறுமை மருட்சி: செப்படி வித்தைக்காரன் வெறுங் கூடைக்குள் மாமரம் உண்டாக்குவது ஆக்க மருட்சி. இத்தகைய பல வகையான மருட்கைச் சுவைகளைக் கம்பர் தம் நாடகத்துள் அமைத்துள்ளார்: அவற்றுள் சில—

இராம இலக்குவரும் கௌசிக முனிவரும் தாடகை வதம் முடிந்து வழிநடந்து மிதிலையை நெருங்குகிறார்கள். வழி நடையில் ஒரு வெளியில் வந்தபோது, இராமன் கால் அடித் துகள்பட்டு ஒரு கல் பெண் உருக்கொண்டு தோன்றி நின்றது. இதுகாறும் கல், இப்பொழுது பெண்! இது இராமனுக்குப் பெருவியப்பாக இருந்தது: அவன் முனிவரைப் பார்த்து அதன் மர்மத்தை வினாவி அறிந்தான் உடனே.

என்னையே! என்னையே! இவ்வுலகியல் இருந்த
வண்ணம்!
முன்னைஊழ் வினையினாலோ, நடுஒன்று முடிந்த
துண்டோ?
அன்னையே அனையாட்கு இவ்வாறு அடுத்தது அருள்க
என்றான்.
(அகலிகை 72)

இது மருட்கைக்கு ஒரு நல்ல சான்று; ஆக்க மருட்கை. இராமன் வியந்தது ஒரு சிறப்பன்று; இதனைக் கண்ட முனிவர் வியந்த முறையே தனிப் பெருஞ் சிறப்புடைத்து,

மைவண்ணத்து 'அரக்கிபோரில் — மழைவண்ணத்து அண்ணலே, உன்
கைவண்ணம் அங்குகண்டேன்! கால்வண்ணம் இங்கு கண்டேன்!
உய்வண்ணமின்றி, மற்றோர் துயர்வண்ணம் இனியும் உண்டோ!;

என மருண்டு நின்று போற்றினார்.

5 — (2)

சிதைக்குத் திருமண அலங்காரம் செய்தார்கள். தலைக்கு மேல் சந்திரவட்டம், நெற்றியிற் சுட்டி, மயிர்மாட்டி, காதில் குழைகள், மார்பில் முத்தாரம், கையில் கடகம், இடையில் மேகலை காலிற் சிலம்பு, பாத சாலகம், மேலும் சின்னப்பூ கர்ணப்பூ புல்லாக்கு திலகம் எல்லாம் அணிந்து, சுண்ணம் ஒற்றி மலர்சூட்டி அவள் அழகை நோக்கி நின்றார்கள். நடந்ததென்ன?

தோழியரும் ஆடவரும் எல்லாம்
இமைத்திலர், உயிர்த்திலர் சித்திரம் எனத்தாம்.
(கோலங்காண் 29)

இவ்வாறே, முடிசூடற்குமுன் இராமன் தேர் ஏறிக் கோசலை மனைக்கு வருகிறான். அவன் அழகைக் கண்ட மக்கள் மகிழ்ந்து மருள்கின்றார்கள்.

செங்கணும் கரிய கோல மேனியும் தேரும் ஆகி
எங்கணும் தோன்றுகின்றான், எனைவரோ இராமன்!
என்பார் (கைகேசி சூழ்வினை 90)
காரணமின்றியேயும் கண்கள்நீர் கலுழ நிற்பார்
சித்திரம் எனத் தனிதிகைத்து உருகிநிற்பார் (,, 99)

5 – (3)

கண்ணில்லார் சிலர் யானை பார்க்க அவாவினார். ஒரு யானை அவர்கள் முன் கொண்டு நிறுத்தப்பட்டது. ஒருவன் காலைப் பற்றி "ஆ! ஆ! தூண் போல் இருக்கிறதே!" என்றான். மற்றவன் காதைப் பற்றித் தடவி "ஆ! ஆ! முறம் போல் இருக்கிறதே!" என்றான். அடுத்தவன் உடலை நீவி நின்று "ஏ! சுவர் போல் இருக்கிறது!" என்றான். வாலைப் பிடித்தவன் "தென்னை ஓலை போல் இருக்கிறது!" என்றான். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்று கூறினார்கள். காரணம்? இவர்கள் குருடர்கள், ஒவ்வொரு உறுப்பைக் கண்டு தாம் அறிந்ததற்கு ஒப்ப ஒவ்வொன்று கூறினார்கள். ஆனால் கண் படைத்த மிதிலை மக்கள் நிலை என்ன? இராமன் மணமண்டபத்துக்கு வரும்போது அவன் உருவத்தில் எந்த உறுப்பைப் பார்த்தனரோ அதனில் மயங்கி நின்றனர்.

தோள்கண்டார் தோளே கண்டார்......
தாள் கண்டார் தாளே கண்டார்; தடக்கை கண்டாரும் அஃதே.
வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்! (உலாவியல் 19)

5—(4)

வேட்டுவக் குகன் கொண்ட மருட்சி அறிவோடு கூடிய அரும்பெரு மருட்சி. இராமன் கங்கைக் கரைக்கு வந்திருக்கிறான் என அறிந்ததும், இராமனைக் காண விரைந்து வந்தான்; அவனைக் கண்டதும் ஒரு மருட்சி கொண்டான். வணங்கா முடியனாகிய அவன் தலைதாழ்த்தி நெஞ்சுருகி "மண்ணுறப் பணிந்து மேனி வளைத்து வாய் பொத்தி நின்றான்". 'இருத்தி' என்றான் இராமன்: குகன் இருந்திலன். "நீ உன் ஊர் சென்று படகுகளுடன் நாளைக் காலையில் வா"

என்றான் இராமன். இச்சொல் நச்சு ஏறியதுபோல் இருந்தது குகனுக்கு: அவன் திகைத்து நின்று "தேவா, உன்னைப் பார்த்த கண்ணை அப்புறம் இப்புறம் திருப்பாமல் உன் அழகைத் துய்த்துக் கொண்டிருக்கிறேன்; யான் விலகிப் போவதோ? இங்கிருந்து அகல என் உள்ளம் ஒருப்படாது. நான் இங்குதானே இருந்து, வேண்டிய உதவிகள் எல்லாம் செய்கிறேன்.

> கார்குலாம் செல்வ, உன்னை இங்ஙனம்
> பார்த்த கண்ணை
> ஈர்கிலாக் கள்வனேன் யான்; இன்னலின்
> இருக்கை எய்த ஓர்கிலாது உள்ளம்—

என்று நா தடுமாறிப் பேசி நின்றான். இராமன் திருமுகச் செவ்வியில் குகன் கொண்ட மருட்சிக்கு ஒரு எல்லை கிடையாது,

500 கோடி மக்களில் 50 பேரிடமேனும் கள்ளமில்லா உள்ளத்தால் மக்கள் யாவரின் உள்ளத்தையும் கவரக்கூடிய முகப்பொலிவு இருக்கிறதா? ஒரு காந்திஅடிகள் இறுதிவரை அப்பொலிவு பெற்றிருந்தார். பெருந் தத்துவ போதகர் J. கிருட்டிணமூர்த்தி தம் முதுமைக்குமுன் அம்முகப் பொலிவால் யாவரையும் கவர்ந்தார். இவ்வாறே இராமனும் தன் திருமுகப் பொலிவால் மக்களையும் மாக்களையும் புள் விலங்கு புல் யாவற்றையும் தவமுனிவர்களையும், எதிரியான இராவணனையும் கவர்ந்து நின்றான்.

வேட்டுவ வீரன் குகன் முதலில் பரதனை ஐயுற்று அடித்து அழிக்கத் துணிந்தவன்—பின்னர் உண்மைநிலை கண்டதும் மருட்சி அடைந்தான்.

"வில் கையின்று இடைவிழ விம்முற்று நின்றொழிந்தான்" அம்மட்டோ! "எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ

பிழைப்பு! என்றான்'' அம்மட்டோ! ''ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ? தெரியின் அம்மா!'' என்று வியப்பும், மருட்கையின் உருவமுமாக நின்றான்.

5 –(5)

சீதையின் அழகு பற்றிச் சூர்ப்பநகை விளக்கியமுறையில் இராவணன் காமப் பித்தன் ஆனான்.

வேதம் ஓதினும் தெய்வம் பராவினும் *
நாத கீதங்கள் நல்லறங் கேட்பினும்
சாதம் உண்ணினும் சார்ந்தவர் மேவினும்
சீதை எனும் எண்ணம் சிந்தையுள் ஒருமால்

எண்ணம் உருவம் பெறும் என்பது அறிஞர்கள் கண்ட முடிவு இராவணன் இரவும் பகலும் சீதையை நினைத்த வண்ணமாக இருக்க, அதனால் அவன் கண்ணுக்குச் சீதையின் உருவம் இரவிலும் பகலிலும் தோன்றலானது. ஒருநாள் அவன் சீதையின் உருவெளி கண்டு, உடனே தன் தங்கை சூர்ப்பநகையைப் பார்த்து

''மைந்நின்ற வாட்கண், மயில்நின்றென வந்து என் முன்னர்
இந்நின்றவளாம் கொல்? நீ இயம்பிய சீதை?
என்றான்'',

சீதைப்பித்தன் ''இவளோ நீ இயம்பிய சீதை?''
என்று வினாவ, அந்த இராமப் பித்தி

செந்தாமரைக் கண்ணொடும், செங்கனி வாயினோடும்
சந்தார் தடந் தோளொடும், தாழ்தடக்கைகளோடும்,
அம்தார் அகலத்தோடும், அஞ்சனக் குன்றம் அன்ன
வந்தான் இவனாகும், அவ் வல்வில் இராமன் என்றாள்
(மாரீசன் 148)

வெட்ட வெளி—யாது உருவமும் இல்லை—இராவணன் சீதையுருக் காண்கிறான், சூர்ப்பநகை இராமன் உருக் காண்கிறாள். காரணம்—அறிவின் மயக்கு! வியப்பு முற்றின் மருட்சி, மருட்சி முற்றின் மயக்கு. இந்த மயக்கினால், தான் நேரிற் சீதையைக் கண்ட போது "இவள் மேனி காண்டற்கு

ஏயுமோ இருபது! இமைப்பில் நயனங்கள்
ஆயிரம் இல்லை என்று அல்லல் எய்தினான்.

(சடாயு உயிர் 29)

பெண்களின் பேரழகு பெரும்பிடை ஆகும் போலும்! கேட்பினும் மருட்சி; பின்னர் பார்ப்பினும் மருட்சி!

5—(6)

கிட்கிந்தா மலையில் இராம இலக்குவரைச் சேய்மையிற் கண்டு "இவர்கள் வாலியால் அனுப்பப் பெற்றவர்" என்று அஞ்சி ஒடிய சுக்கிரீவன் பின்னர் அனுமானால் தேற்றப் பெற்று, அண்மையில் வருகின்றான். இராமன் திருமுகச் செவ்வி அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. அவன் தேவர்கள் உருவை நன்கு அறிவான்: 4 முகம், 8 கைகள்—6 முகம் 12 கைகள்—ஒருமுகம், 4 கைகள்—எருது கருடன் அன்னம் யானை மயில் எருமை ஆடு சிங்கம் நாய் கழுதை காக்கை முதலிய ஊர்திகள்—சூலம் வேல் மழு சங்கு சக்கரம் வில் பாசம் முதலிய படைகள் இவையெல்லாம் தேவர்களைச் சார்ந்து தோன்றும். இராவணன் 10 தலைகள் 20கைளுடன் தோன்றுவான். இக்கரங்களை நீட்டி நிற்பின் தேளின் கால் போலும் பட்டமரத்தின் கிளைகள் போலும் காட்சியாகும். ஆயின் இவன் முன் தோன்றிய வீரர் இருவரும் முகம் தோள் கை மார்பு கால் நடை வில் இவற்றால் பொலிவுற்று உள்ளத்தைக் கவர்கின்றனர். சுக்கிரீவன் பரவசமடைந்தான். யாது கூறினான்;—

"வேறுள்ள குழுவை எல்லாம் மானுடம் வென்றதன்றே!" என்று வியந்து உள்ளம் உருகி வணங்க வந்தான். உண்மை உயர்வடைகிறது, பிறர் உள்ளத்தைக் கவர்கிறது, பற்பலரும் வியந்து மருள நேர்கிறது.

5—(7)

ஆடு சிங்கத்தை எதிர்த்தால் அது பெருவியப்பே; கோழி பருந்தை எதிர்ப்பினும் அஃது பெருவியப்பாகும். உறையூர் சோழமன்னரின் தலைநகர் ஆனதும், பாஞ்சாலங்குறிச்சி கட்டப்பொம்மனுக்கு உறையுள் ஆனதும் இத்தகைய நிகழ்ச்சிகளால் என்பர். மெலியது வலியதை எதிர்ப்பது ஒருவியப்பு. அவ்வாறே சிறியது ஒரு பெரிய காரியத்தைச் செய்வதும் வியப்பாம். சீதையைத் தேடிச் சென்ற அனுமான் ஏழுகடல்களையும் கடந்து வலிய அரக்கர் காவலையும் கடந்து சீதை முன் வந்து நிற்கிறான். இஃது அவட்கு ஐயமும் வியப்பும் அளித்தது.

இத்துணைச் சிறியதோர் எண்ணில் யாக்கையால்
தத்திலை கடல்! அது தவத்தின் ஆயதோ?
சித்தியின் இயன்றதோ? செப்புவாய். என்றாள்
முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினாள்

இஃது "சிறுமை, ஆக்கம்" பற்றிவந்த மருட்கை ஆகும்.

5—(8)

கும்பகருணன் மேருபோல் பெரியவன். கால் உற்றமலை எனக் கருதத்தக்கவன். "விண்ணினை அளந்து நின்ற மால்" என விளங்கு தோற்றத்தன்.

"தேளொடு தோளுறத் தொடர்ந்து நோக்குற
நாள் பல கழியும்".

இத்தகைய ஒருபேருருவை யாண்டும் காண்டல் அரிது. சீதை ஒருநாள் அவனைக் காண நேர்ந்தது, உடனே மருண்டு நின்றாள். ஆ! எத்துணை பெரியன்! எத்துணை வலியன்! இவனை வெல்வது எவ்வாறு! என்று மருண்டு கலங்கினாள்

கண்டாள் கருணனை, கண் கடந்த தோளானை,
கொண்டாள் ஒரு துணுக்கம்!

(கும்ப கருணன் 98)

நகரங்களிற் சில சமயங்களில் மற்போர் நடப்பதுண்டு. பல நாட்டு வீரர்களும் போரிற் கலந்து கொள்வார்கள். கிங்காங் போன்ற மதயானைகள், கருஞ்சிலந்தி போன்ற வரிப்புலிகள், ஆர்பான்சிங்-அசீத்சிங்-தாராசிங் போன்ற இளஞ்சிங்கங்கள்—பலவீரர்கள் கோதாவில் ஏறுவார்கள். காணுங் குழுவினருக்கு அது கண் கொள்ளா விருந்து. யாவரும் வரத்தார் ஆயினும் தமிழ்நாட்டவர்க்குத் தாராசிங் மீது ஒரு தனிப்பற்று. அவன் உதைத்தால் ஆரவாரிப்பர், அவர் அயர்ந்தால் வாய் அடங்கி இரங்குவர். ஒரு பெரிய யானையை ஒரு சிங்கக்குட்டி வயிற்றடியில் முட்டிச் சாய்ந்து விழச் செய்வது போல் மாமல்லன் கிங்காங்கைத் தாராசிங் சமயம் பார்த்துத், தாம் கற்ற வித்தையின் திறத்தால் தூக்கி எறிந்து விடுவார். மலைபறந்து விழுவது போல் கிங்காங் கோதாவுக்கு வெளியில் விழுவார்; மக்களுக்கு இது பெருவியப்பாக இருக்கும்; ஒரே ஆர்ப்பு! ஒரே கைதட்டு! ஒரே பூரிப்பு!

இதனை ஒப்ப இராவணனுடன் ஒருநாள் அனுமான் போர் புரிந்தான். இராவணன் கயிலைமலையை அசைத்தவன், திக்கு யானைகளை அஞ்ச வைத்தவன். அப்பெரு வீரனோடு குரங்குருவ அனுமான் போர் செய்தான். கடும் போர் நெடுநேரம் நடந்தது. தேவர்களும் யாவர்களும் கவனித்திருக்கிறார்கள், வெற்றி தோல்வி எப்பக்கம் என

யாரும் சொல்வதற்கில்லை. இறுதியில், வாயுவின் வேகத்தால் பெரிய மேருவின் சிகரம் பறந்து போனது போலச் சிறிய அனுமானின் கைவரிசையால் பெரிய இராவணன் சோர்ந்து அயர்ந்தான். "தள்ளாடிய வடமேருவிற் சலித்தான் அறங் கெடுத்தான்." (முதற்போர் 177). வீரதீர இராவணன் வீழ்ச்சியடைந்தது தேவர்கட்குப் பெருவியப்பு! வியப்பு மட்டும் அன்று, பெரிய உவப்பு!

ஆர்த்தார் விசும்பு உறைவோர், நெடிது அனுமான்மிசை அதிகம்
தூர்த்தார் நறுமுழுமென்மலர்;இசை ஆசிகள் சொன்னார்
வேர்த்தார் நிருதர்கள்; வானவர் வியந்தார். "அவன் விசயம்
தீர்த்தான்" என உவந்தாடினர் முழுமெய்மயிர் சிலிர்த்தார்.

தேவர்களின் வியப்போடு இதனை முடித்து, இனி அடுத்தது பற்றிக் காண்போம்.

5 –(10)

இராவணனை வதைத்து இராமன் அயோத்திக்கு மீளுங் கால், வழியில் பரத்துவாசரின் ஆசிரமத்தில் தங்கியதால் குறித்த காலத்தில் அயோத்தியை அடைய முடியா நிலையா யிற்று. அண்ணன் வாரா நிலை கண்ட பரதன் தான் கொண்ட சூளின்படி எரிவளர்த்து உட்பாயத் துணிந்தான். அந்நேரத்தில் மாருதி பறந்து வந்து பாய்ந்து "கையினால் எரியைக் கரி ஆக்கினான்." இராமன் அளித்த மோதிரத்தைக் காட்டி நடந்தன எல்லாம் அறிவித்தான். இது பரதன் எதிர் பாராத ஒன்று. அவனுக்கு எல்லாம் ஒரு மாயமாகத் தோன்ற, அவன் மருண்டு திகைக்கிறான். மகிழ்கிறான்.

அழும் நகும், அனுமனை ஆழிக் கைகளால்
தொழும் எழும் துள்ளும் வெங்களி துளக்கலால்

ஆடுமின் ஆடுமின் என்னும், ஐயன்பால்
ஓடுமின் ஓடுமின் என்னும், ஓங்கிசை
பாடுமின் பாடுமின் என்னும்; பாவிகாள்!
சூடுமின் சூடுமின் தூதன் தாள் என்னும்

பரதன் ''இராமன் வருகை'' என்ற களிப்பால் மருண்டு பேசத் தகாதன பேசி; செய்யத் தகாதன செய்து தன்னை மறந்து நிற்கிறான்.

6. சினம்

உறுப்பறை, குடிகோள், அலை, கொலை — என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே. (தொல்காப்பியம்)

இதற்குப் பொருள் நூலாசிரியரும் உரையாசிரியர்களுமே விளக்கமாகச் சொல்லட்டும். இதற்கு உரிய மெய்ப்பாடாக அடியார்க்கு நல்லார் யாதும் கூறினாரல்லர். கைபிசைதல், வாய்மடிதல், கண் சிவத்தல், வெய்துயிர்தல், மெய்குலைதல், வேர்த்தல் இவை ''தண்டி'' காட்டும் மெய்ப்பாடு. வள்ளுவர் சினம் பற்றி ''வெகுளாமை'' என ஒருதனி அதிகாரம் அமைத்துள்ளார். ஔவையார் ''ஆறுவது சினம்'' என ஒரு சிறு தொடர் நிறுவியுள்ளார். ஆங்கிலத்தில் 'சினம் சிறு பைத்தியமாகும்' என ஒரு பழமொழி உளது. தொல். ஆசிரியர் கூறும் நான்கினை யாம்.

உயிர், உடல், பொருள், புகழ் நான்கில் ஊறு
எய்தும் இடத்துச் சினம்எய் தும்மே.

என்று திரித்துத் தெளிவாகக் கூறுகிறோம். இனிக் கம்ப நாடகத்தின் சினச்சுவை பற்றிக் காண்போம்.

6—(1)

கௌசிகர் தாம்புரியும் யாகத்துக்கு இடையூறு புரியும் அரக்கர்களை அழிப்பதற்காக இராமனை அழைத்துச் செல்ல

எண்ணித் தசரதமன்னரிடம் வந்து ''என் யாகத்துக்கு ஊறு புரியும் அரக்கர்களை அழிக்க, நின் மூத்தமகன் இராமனை என்னுடன் அனுப்பு'' எனக்கேட்டார். மக்கள் நால்வரில் இராமன் தசரதருக்கு உயிர்போன்றவன். அவனைப் பிரிந்து அவரால் வாழ முடியாது. ''அடிகாள், இராமன் சிறியன், வித்தையின் திறம் அறியான், அவற்குப் பதிலாக யானே வந்து தங்கட்கு வேண்டுவன எல்லாம் செய்து நிற்கின்றேன்' என்று மன்னர் கூறினார். தன் சொல்லுக்கு இணங்காமல் மன்னர் மறுத்துரைத்தது முனிவரின் சினத்தைக்கிளப்பிற்று. அவர் கண் சிவந்தது, புருவம் நெற்றிவரை ஏறிற்று. வெகுளிச் சிரிப்பு அதட்டியது, திசைகள் இருண்டன, கதிரவன் ஒளி கரந்தது, நிலையியல் மரம் செடி கொடிகள் மனைகள் யாவும் சுழன்றன; இத்தகைய ஒரு சூழ்நிலை முனிவரின் முனிவினால் உருவாயிற்று.

''—முனிவோடு எழுந்தனன் மண்படைத்த முனி. இறுதிக்காலம் என இமையோர் அயிர்த்தனர், மேல் வெயில் கரந்தது, நின்றனவும் திரிந்தன, நிவந்து கொழுங்கடைப் புருவம் நெற்றி முற்றச் சென்றன, வந்தது நகையும், சிவந்தன கண்கள், இருண்டன போய்த் திசைகள் எல்லாம்'' (கையடை 13)

இங்கு கம்பர் சினத்தின் மெய்ப்பாடாகக் கண் புருவம் நெற்றி நகை மற்றச் சூழ்நிலைகள் பற்றி நன்கு கூறியுள்ளார். அங்கு ஒருகலை நுட்பமும் அறிவித்துள்ளார், அது பெருவியப்புக்கு உரியது. வெயில் கரந்தது, திசை இருண்டது, கண் சிவந்தது எனக் கூறியது நுனித்து ஆராயத்தக்கது. நாடக மேடைகளிலும் நாட்டிய மேடைகளிலும் பச்சை மஞ்சள் நீலம் சிவப்பு கறுப்பு முதலிய வண்ணங்கள் மின்விளக்குகளைக் கொண்டு மாறி மாறிவரச் செய்கின்றனர். சோலை பச்சை நிறம், அரசர் கொலு சாதாரண வெயில் நிறம், மழை

பெய்யும்போது நீல நிறம், போர்நடப்பில் சிவப்பு, இளங் கறுப்பு ஒளி பரப்பப்படும்." சிவப்பும் கறுப்பும் வெகுளிப் பொருள' என்று தொல்காப்பியம் கூறும். கம்பர் வெயில் கரந்த நிலை, திசை இருண்ட நிலையால் கறுப்புவண்ணமும், 'கண்சிவந்த' முறையால் சிவப்பு வண்ணமும் காட்டி இலக் கணந்தழுவி நிற்கின்றார். வண்ண நுட்பந் தெரியாதார் 'வறுமையின் நிறம் சிவப்பு' என்பர். கலை நெறியில் வறுமை யின் நிறம் பழுப்பு ஆகும். மரஞ்செடிகளைச் சுழலவைத்து, வெகுளியின் கடுமையைக்காட்டும் திரைப்படக்காரர் போல் கம்பரும் காட்டுகிறார். கம்ப நாடகம் நிறைவுபெற்ற ஒரு தனிப்பெரு நாடகம்!

6—(2)

இராமன் மிதிலையில் சீதையை மணந்தபின், பெற்றோர் உடன் பிறந்தார் குருக்கள் பரிவாரங்களுடன் அயோத்திக்குத் திரும்புகிறான். வழியிற் சில தீய சகுனங்களைக் கண்டு தசரதர் கலக்கமுற்றார்: சிறிது நேரத்தில் பரசுராமன் சினக் கோலத்துடன் எதிர்வந்தான்: எவ்வாறு?

பொங்கும் படை இரிய; கிளர்புருவம் கடைநெரிய
வெங்கண்பொரி சிதற. கடிஉரும் ஏறென வந்தான்
(பரசுராம 16)

தசரதரின் படை அஞ்சிக் கலங்குகிறது, பரசுராமன் புருவம் மேலேறுகின்றது, கண்கள் தீப்பொறி கக்குகின்றன, வாய் இடிமுழக்கென இரைகின்றது. இவ்வாறு அவன்வந்து இராமன்முன் நின்று

இற்றோடிய சிலையின்திறம் அறிவேன், இனியான்உன்
பொற்றோள்வலி நிலைசோதனை புரியும்நசை
உடையேன்
— திரள்தோளுறு தினவும் சிறிதுடையேன்,
மற்றோர் பொருள்இல்லை, இது இங்கு என் வரவு?

சிலையைநீ சிறுத்த ஓசை செவியுறச் சேறி வந்தேன்:
மலைகுவன் வல்லையாகில், வாங்கிடு இத்தனுவை.(34)

வெகுளியின் உரு நடை உரை மெய்ப்பாடுகளைக் கம்பர் பரசுராமனைக் கொண்டு மிக அழகான—சீற்றந்தரு கவிகளால் விளக்கியுள்ளார். அன்பர்கள் அப்படலத்தின் 1—36 பாடல்களை உணர்வோடு உரக்க வாசித்துப் பயில்தல் வேண்டும்: அஃதே சிறந்த நாடகம் ஆகும்.

6—(3)

உறங்கிக் கொண்டிருந்த கைகேசியை எழுப்பிவைத்து "நாளைக்கு இராமனுக்கு முடிசூட்டுவிழா" என்று அறிவித்தாள் மந்தரை; சிந்தை மகிழ்ந்த கைகேசி அவளுக்கு விலை உயர்ந்த முத்தாரம் ஒன்றைப் பரிசாகக் கழுத்திலிட்டாள். கூனி மிகமிக வெகுண்டவளாக நடித்தாள்: முத்தாரத்தைக் கையில் எடுத்தாள் —

தெழித்தனள், உரப்பினள், சிறுகண் தீஉக
விழித்தனள், வைதனள், வெய்து உயிர்த்தனள்;
அழித்தனள், அழுதனள்—அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தை, அக்கொடிய கூனியே.

வெகுளியின் சிறந்த நாடகம். நிலம் குழிபறிக்கும்படி மாலையைச் சிர்ர்ர் என்று வீசவேண்டும். இஃது கிழக் கூனியின் சினம்.

பின்னர் "இராமனைக் காட்டுக்கு அனுப்ப வரங்கேள்" என்றபோது கைகேசிக்குத் தாங்கமுடியாத சினம் பிறந்தது. கம்பர் அதனை நன்கு விளக்குகிறார்.

கேகயற்கு இறை திருமகள் கிளர்இள வரிகள்
தோய்கயல்கண்கள் சிவப்புற நோக்கினள், சொல்லும்

''கண்கள் சிவப்புற'' என்ற குறிப்பால் வெகுளியின் நிறத்தை விடாது தொடர்ந்து குறிப்பிடுகின்றார்: ''நோக்கினள்'' என்பது சின நோக்கு. அவள் சொல்கிறாள்:— அடீ, நீ

எனக்கு நல்லையும் அல்லை; என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை; தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை—வந்து ஊழ்வினை
தூண்ட
மனக்கு நல்லன கூறினை: மதியிலா மனத்தோய்,

அடீ, என் எதிரில் நில்லாதே. அப்பால் போ. உன் நாவை அறுக்காமல் விட்டிருக்கிறேன்; ஓடிப்போ. நான் இதனைப் பொறுத்துக்கொண்டேன், வேறு சிலர் இதனை அறியின்—விபரீதமாக முடியும்! மதிகெட்டவளே, நீ நீதி நெறிமுறையின்றிப் பேசுகிறாய்; உன் வாயை அடக்கு-என்று அதிகாரத்துடன் அறைந்து சினந்தாள் கைகேசி.

போதி என் எதிர்நின்று, நின்புன் பொறிநாவைச்
சேதியாது, இது பொறுத்தனென், புறம்சிலர் அறியின்
நீதி அல்லவும் நெறிமுறை அல்லவும் நினைந்தனை
யாதி; ஆதலின்—அறிவிலி, அடங்குதி என்றாள்
(மந்தரை சூழ்ச்சி 75)

கூனியின் சினம், அதற்கு எதிராகக் கைகேசியின் சினம் —இரண்டும் ஒன்றை ஒன்று விஞ்சி நல்ல நாடகமாக நிற்கின்றன.

6—(4)

தசரதரின் சினம்—அழுகை ஆற்றாமை ஏக்கம் இரக்கம் கொண்டமையின் அதனை அழுகைச் சுவையிற் சேர்த்து கூறினோம்.

இங்கு, மேலும் கூறுவோம். இராமன் காடு ஏகவேண்டும் என்ற சொல்லைக் கேட்ட மன்னன் மயங்கினான், கலங்கினான், உயிர்த்தான், உருகினான், வெகுண்டான். வெகுண்ட நிலையில் இதனை வாசியுங்கள்:—

''ஆ! இப்பாவியை இப்பொழுதே கொன்று தீர்ப்பேன், பெண்! பெண்பாவம் பொல்லாதது! கைகேசி உனக்கு யார் கற்பித்த வஞ்சனை இது? கொடியாய், யான் இனிப் பழி பாவங்களுக்கு அஞ்சேன்: உலகிற் பெண் இனமே இல்லா வண்ணம் இக் கணமே கொன்று தீர்ப்பேன். அப்பாவம் என்னைச் சூழட்டும்!

ஐயோ, என் செய்வேன்! இவளை அழித்து ஒழிப்பதற்கும் இல்லை; அழியாதிருப்பினும் அமைதியில்லை, வாள் கொண்டு தொலைப்பதோ, இன்றேல் கால்பற்றி வேண்டுவதோ? வேண்டியே வினை ஆற்றுவல்—

அடீ—பரதன், உன் மகன் இந்நாட்டை ஏற்று நிற்பான என எண்ணமோ? அவன் ஏற்றாலும் நாடு அவனை ஏற்று நிற்குமோ? உலகம் எல்லாம் பழிக்கும் ஒரு கருமத்தை நீ ஏன் செய்யத் துணிகிறாய்? நல்லார் பலரும் உள்ளம் உவக்கும் ஒன்றைச் செய்து, நற்புகழ் நிறுவ உனக்கு மனம் இல்லையயா? உன் செயல் விண்ணவர் மண்ணவர் எவர் ஒருவர்க்கும் இயைந்ததன்று. நீ ஏன் தீது செய்யத் துணிகின்றாய்? யான் நல்க, இராமன் நாட்டை ஆள இசைந்தான்: உன் மகன் வேண்டினால், இராமன் நாட்டை அவனிடமே ஒப்படைத்து நிற்பான். இதற்கு ஏன் இக் கூத்து ஆடுகின்றாய்.

என் கண் வேண்டுமா? இப்பொழுதே தருகிறேன். என் உயிர் வேண்டுமா? இப்பொழுதே தருகிறேன்; இந்நாடு முற்றும் வேண்டுமா இதோ தருகிறேன்; காடு அனுப்புதல் என்ற ஒன்றைமட்டும் விட்டொழி.

அடி, பாதகி, "தன்னை இரந்தால் தழல் வெங்கண் பேயும் தந்து ஈயும்" எனப்பகர்வர். நீ இரங்கி நின்றால் யாது குற்றம் நேரும்? அடி, "என் மகன், என் கண், என் உயிர், எல்லா உயிர்கட்கும் நன்மகன்" இராமன் இந் நாடு நீங்காது தங்க நீ அருள்புரி. கணவன் இறக்க; கணவனுடன் மனைவியரும் ஆவி நீத்தார் என்றே வரலாறு இதுகாறும் உளது; உன்னைப்போல் கணவன் உயிரைக் கொன்று நின்றவர் யார் உளர்? எண்ணிப் பார்.

ஆ! மண்ணோரையும் விண்ணோரையும் வென்று வீர வாழ்வு நடாத்திய எனக்கு ஒரு பெண்ணாலோ அழிவு! பெண் உரு நச்சுரு! கைகேசி, நீ பழிக்கு நாணாய்; மாணாப் பாவி, இனி நடப்பது என்னை? உன் கழுத்தின் நாண் உன் மகனுக்குக் காப்பு நாண் ஆகும்; மண்ணும் நீராய் வந்த புனலை-மகனே, வினையேற்கு உண்ணும் நீராய் உதவி உயர் கான் அடைவாய்?

தசரத மன்னரின் வாக்கில் சினம், அழுகை, இரக்கம் யாவும் கலந்துள்ளன- "கைகேசி சூழ்வினை—நகர் நீங்கு படலங்களைப்" படித்துத் துய்த்தல் வேண்டும். சேக்சுப்பிய ரின் லிர் மன்னனைவிட அல்லற்பட்டு அழுது வெகுளும் காட்சியை உணரமுடியும். முதுமன்னர் வெகுளியை நீத்து, இளைய இலக்குவன் வெகுளிபற்றிப் பார்ப்போம்.

6—(5)

இலக்குவன் சுமித்திரை பெற்ற சிங்கம்—அச்சம் அறியா ஆண்மகன்—இராமனைத் தவிர பிற எவரையும் துச்சமாகக் கருதும் துடுக்கன்—இளங்காளை. இராமன் காடு செல்ல நிற்கிறான் என்ற செய்தி அவன் செவிக்கு எட்டியது.

கேட்டான் இளையோன், கிளர் ஞாலத்து யாவராலும்
மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெழுந்தான்
(நகர் நீங்கு 15)

கண்ணிற் கடைத்தீயுக, புருவக்கற்றை நாற,*
விண்ணிற் சுடர்காட்டி மெய்யில்நீர் விரிப்ப
உள்நிற்கும் உயிர்ப்பாம் ஊதை வீங்க
அண்ணற் பெரியோன் ஆதிசேடன் ஒத்தான்

சிங்கக் குருளைக்கிடும் தீஞ்சுவை ஊனை, நாயின்
வெங்கண் கடுங்குட்டிக்கு ஊட்ட விரும்பினாளே!
மங்கைக்கு அறிவின்திறம் நன்று! இது நன்று என்று
தன்கைக் கடகம் குலுங்க; கைபுடைத்து நக்கான்

வடிவாள் புடைதோன்ற ஆர்த்து, வில் வாளிப்
புட்டில் புறத்து வீக்கிப், பொற்கவசம் போர்த்தான்
அடியிற் கவசம் சேர்த்து, இடியின் நடை பெயர்த்து,
முடியும் உலகம் என்று—யாவரும் ஒடுங்க வந்தான்

இன்னே இராமனுக்கு யானே முடிசூட்டுதற்கே
முன்னே வந்துளேன்; இது காக்குநர் காமின்—
என்றான்

விண்ணவர் மண்ணவர் விஞ்சையர் ஆகுக,
எண்ணுறு தேவர் மூவர் நரகரே ஆகுக,
மண்ணினை நேர்வீட்டுநர் நேர்வந் துறினும்
பெண் நாட்டம் இருக்க ஒட்டேன், இப்பேருலகத்தே!

மன்னர் சொன்னதுமாற, மரபு முறைமைகெட;
இன்னல் புரிவாளுக்கு எதிராக இப்பொழுதே
உன்னை முடிசூட்டி, உலகம் மகிழ வைப்பேன்;
என்னை எதிர்ப்பார்கள் யாராயினும் அழிப்பேன்

இவ்வாறு காளமேகம்போல் சீறிவருகிறான் இலக்குவன்.

இராமன் காடு நோக்கியதுமுதல் இலக்குவன் மகிழ்ச்சி என்பதை அறியாதவன். இராமனுக்குத் தொண்டு செய்வதே கருமமாகக் கொண்டவன், பிற யாதினும் கருத்தில்லாதவன்,

சீற்றத்திற் சிறந்தவன் இலக்குவன் எனின் அது மிகையாகாது. பரதன் இராமனை அழைக்கப் பரிவாரங்களுடன் வருகிறான். மலைக்குவட்டில் நின்ற இலக்குவன், ஆரவாரம் புழுதியின் எழுச்சிகளால் இதனைக் கண்ணுற நேர்ந்தது. அவன் கைகேசி மகன் கைதவம் உடையான் என எண்ணினான், உள்ளம் கொதித்தான், வாய் விண்டான் :—

விரதமுற் றிருக்கும் இராமன்மேல்*
பரதன் படைகொடு வருகிறான்,
அரசு கைப்பற்று அவாவினன்!
வரட்டும்! வரட்டும்! பார்க்கிறேன்!

அண்ணா, பரதன் படையுடன்
நண்ணா நின்றனன்: நான் இனிச்
சும்மா இருப்பனோ? சரங்களும்
வில்நாண் கவசமும் எடுத்துளேன்!

சுரிகை யும்இடைச் சேர்த்துளேன்.
பரதன் வலியனோ! படைவலிதோ!
ஒருவன் இளைஞன்யான் வலியனோ?
தெரிவாய் அண்ணா, என்திறத்தினை!

பரிகள் யானைகள் யாவும் அழிந்திடும்,
குருதி ஓடிநீர் கடலை அடைந்திடும்;
இரதம் முறிந்திடும், வீரர் யாவரும்
மரணம் எய்துவர், மேல்உலகு அடைகுவர்

நீண்டதேர்த் தட்டினில் பேய்கள் நின்றுஅவண்
மாண்டவர் கரங்களை, குடலைத் தின்று,நேர்
காண்டகு நாடகம் நடிக்கும் களிக்குமால்!
ஆண்மைசால் தம்பியின் திறனை அறிதிநீ!

குருதிநீத் தத்தில் குளித்துச் சாதகர்
சிறுகண் கூளிகள் சிரிக்கும் களிக்குமால்!
பெரிய கவந்தம் ஆடும்! தேவர்கள்
சிரித்து என்கைத் திறனை வியப்பரால்!

ஆள்அற, தேர்களும் அழிய, ஆடவர்
தோள்அற, தலைஅற, தோற்றத்து யானைகள்
தாள்அற, கைஅற, சார்ந்த வீரர்கள்
வாள்அற, உயிர்அற, வீழ்தல் காண்டிநீ

இருநிலம் ஆள்வதற் கெண்ணும் பரதனும்
அருநரகு ஆள்வதற் காகும் தன்மையும்,
ஒருவனோ டன்றித், தன் உடன்உற் றார்களும்
தரைமகள் மடியினில் புரள்தல் காண்டிநீ

அன்னை தந்தையர் அழுது புலம்ப,முன்
உன்னைக் கானகம் அனுப்பி வைத்தவள்
தன்மகன் உயிர்நீத் தான் என்றுகேட்டு
இன்னல் உற்றழு திரங்கக் காண்டியால்

இவ்வாறு இலக்குவன் சினம் எல்லை மீறி நிற்பது. அறந் திறம்பிய இடங்களில் அவன் சீற்றம் அடங்காது ஓங்கி நிற்கும். சீதையிடம் சென்ற சூர்ப்பநகையைப் பார்த்து—

“நில்லடி, எனக்கடுகினான், சில்அல் ஓதியைச்
செங்கையில் திருகுறப்பற்றி, ஒல்வயிற்றில்
உதைத்து, ஒளிகிளர் சுற்றுவாள் உருவி
ஏகல். ன நுவலா, மூக்கும் காதும் முரண்

முலைக்கண்களும் போக்கி”—சினத்தையும் போக்கி, அவளையும் போகவிட்டவன் இலக்குவன்.

அவ்வாறே அண்ணனுக்காக நீர் தேடிச் சென்ற இடத்தில், அயோமுகி அவன் எதிர் வந்துநின்று

"முன்னம் ஒருத்தர் தொடாமுலை யுடையேன்
பொன்னின் மணித்தட மார்போடு புணர்வாய்"

என்றதும் இலக்குவன் கண்கள் சிவந்தன.

"இன்னும் இவ்வுரை வாயில் உரைப்பின்*
உன்னுடல் இரண்டு கூறுபடும்" என;
"என்னுடன் நீ, நீராடுதி விழைந்தே"
என்றலும், சுமித்திரைச் சிங்கம் சினந்தான்,
"உன்இரு காதோடு நாசியைத் துமிப்பல்,
என்முன் நின்று இழிவுறேல்" என்றான்.
அன்னாள் அவனைத் தூக்கிமேல் எழலும்
சொன்னபடியே காதோடு நாசியைப்
பின்னப் படுத்தியே மீண்டு போயினான்.

அவனை நாமும் விட்டு அடுத்தவற்கு வருவாம்.

6—(6) குகன்

பரதன் படையுடனும் இனத்துடனும் இராமனை அழைக்கவர, இதனைக் கண்டு ஐயுற்ற குகன் சினந்து எழுந்து தன்படைஞரைக் கூவி அழைத்தான். 'இப்படை எலாம் எலி! யான் அரவம்' என்று; பரதன் படையை எள்ளி நின்று, தன் படைஞரைப் பார்த்து வீரர்களே,

வான்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு ஏன்றனன். நீவிர் அண்ணற்கு அரசு அமைத்திரால்.

துடிஎறி, நெறிகள் சுற்றுற*
ஓடிஎறி, அம்பிகள் ஓட்டலிர்
அடிஎடுத்து அக்கரை வைப்பவர்களைப்
பிடி,எறி கற்கொடு, பாழ்படுத்துவீர்.

அஞ்சனவண்ணன் என்ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அரசுஎய்திய மன்னரும் வந்தாரே!

செஞ்சரம் என்பன தீஉமிழ்கின்றன, செல்லாவோ!
உய்ஞ்சுஇவர் போய்விடின், நாய்க்குகன் என்று எனை
ஏசாரோ?
(குகப் 14)

ஆழநெடுந்திரை ஆற்றைக்கடந்து இவர் போவாரோ?*
வேழநெடும்படை கண்டுயான் விலகும் வில்லாளோ?
முன்னவன் என்று நினைந்திலன்! மொய்புலி அன்னஒரு
பின்னவன் நிற்கிறான் என்றும் நினைந்திலன்.
என்னைஇகழ்ந்ததாம், இவ்வெல்லை யுற்றது! கடப்
பானோ?
மன்னவர் நெஞ்சில் வேடர்விடும் சரம் பாயாதோ?

என்னுயிர்த் துணைவன் காட்டினில் அருந்தவம் இயற்றிநிற்க,—மன்னவனா இவன் நாட்டினை ஆள்வனோ? மாயானோ?—அன்னவனோடு போகாது யானிங்கு அமர்ந்ததுவும்—நன்மையே! நன்று! இன்று யான் நமனாய் வேலை செய்வேன்!

கானை அடைந்துள அண்ணலை எதிர்த்துஇவன்
கனன்று வந்தான்.
யானை குதிரைகள் தேர்களும் வீரரும் இவண் அழிந்து
வானை அடையவே வைக்குவன்: "வந்தது போல
அவர்
போனார்! அழிந்தவர் போனார்!" எனவினை புரிகுவன்
யான்

ஆடுகொடிப்படை அழித்து, அறத்தவர் ஆளுதற்கு
நாடுகொடுத்தவர் வேடர் எனப்புகழ் நாட்டுவம் யாம்
நாடுகொடுத்தனன் நாயகன், அவனை மதியாதே
காடுநோக்கினன் படையுடன், கருதிப் பாரீரே!

இஃது உரைநடைச் செய்யுள்: இது குகனின் சீற்றத்தின் சாயல்: கோடிப் பாம்பு போல் சீறிநிற்பவன். பரசுராமன் இலக்குவன் குகன் இவர்களின் சீற்றமே கலப்படமில்லாச் சுத்தமான சீற்றம். இவற்றை உள்உணர்ச்சியுடன் கூறி நடித்துத் துய்த்தல் வேண்டும்.

6—(7) பரதன்

கேகய நாட்டிலிருந்து மீண்டு அயோத்தி யடைந்த பரதன் அரண்மனையுள் தந்தையாரைக் காணாமையால் தாய் அருகிற் சென்று அடிவணங்கி நின்றான்.

கைகேயி: எந்தை, என் அம்மையார் நலமோ?

பரதன்: ஆம், நலமே. அம்மா: தந்தையாரின் தாள் தொட்டுப் பணிய விரும்புகிறேன்; யாண்டுளார்?

கை: தேவர்கள் போற்ற, அவர் விண்ணுலகு அடைந் துள்ளார். நீ வருந்தற்க.

பர: (திகைத்து நின்று) அம்மா, இப்படி ஒரு சொல் தங் களைத் தவிர எவரேனும் உரைப்பரோ? (எந்தாய், எந்தாய் இறந்தனையோ! என்றழுது,) அம்மா, எனக்குத் தந்தையும் தாயும் தெய்வமும் அண்ணன் இராமனே: யான் அவனைக் கண்டு வணங்கி வருகிறேன்

கை: இராமன்—சீதை இலக்குவன் இருவருடனும் காடு சென்றுள்ளான்.

பர: இராமன் காடு சென்றுளானா? எவ்வாறு அவன் இக் கடுஞ் செயல் புரிந்தான்? அவன் காடு புக்கது தந்தை மாண்ட பின்னரோ, அதற்கு முன்னரோ?

கை: "கோமகன் இருக்கவே, வனத்து அவன் ஏகினான்".

பர: அம்மா, குற்றம் கிடையாது, பிறரின் செற்றம் கிடையாது, தெய்வ கோபமும் கிடையாது. பெற்ற தந்தை இருக்க, பிள்ளை கான்புகுமாறு யாதுற்றது?

கை: யான் எனக்குரிய வரத்தைக் கேட்டு, இராமனை வனத்திற் போக்கினேன், நாட்டை உனக்கு ஆக்கினேன். மன்னர் இது தாங்காது உயிர் துறந்தார்.

துடித்தன கபோலங்கள், சுற்றும் தீச்சுடர்
பொடித்தன, மயிர்த்தொளை, புகையும் போர்த்தது;
மடித்தது வாய்,நெடு மழைக்கை மண்பக
அடித்தன ஒன்றோடொன்று அசனி அஞ்சவே

(பள்ளி படை 67)

(மனத்துள் "இவளை இப்போதே அடித்துமுடித்தால் என்ன? அதனைப் பின்னர் இராமன் கடிந்து நிற்பானே என எண்ணி) அம்மா, தந்தையார் இறந்தரர், தமையனார் காடு சென்றார், இதற்கெல்லாம் வழி செய்த உன் வாயைக் கிழியாமல் யான் இன்னும் நிற்கிறேன், பார். நாட்டை அரசாளத்தானே நிற்கிறேன்! நீயும் கல்போல் இருக்கிறாய், யானும் மரம் போல் நிற்கிறேன். உன்னை உதைத்தே ஒழித்து விடுவேன்; நான் உன்னை ஒறுத்தால் அண்ணா என்னைக் கடிவார் என்றே வறிதே நிற்கின்றேன்; நீ தாய் என்னைப் பெற்றவள் என்று நான் உனக்கு இரக்கம் காட்டகில்லேன், நீ தாயோ—இல்லை இல்லை, நீ நோய்—நோயும் இல்லை, நோய் இறந்தவருடன் தீர்ந்து போகும்—நீ ஒரு பேய், அதனால்தான் இன்னும் இருக்கின்றாய்: நீ சாக மாட்டாய், இன்னும் எனக்கு என்னென்னவோ புரிவாய்

ஒரு அரசன் இறக்க, அவன் வழி வருபவன் காடு ஏக—அந்த நாட்டை இந்தப் பரதன் ஆள! தர்மம் தழைக்கும்! அரச மரபு முறைமைகளை அழித்து-மன்னனை மாய்த்து, அப்பழிக்கு எல்லாம் என்னைக் காரணமாக வைத்து, வழி வழியாக வசைக்கு ஆளாக்கினையே பாவீ! அம்மா, நீ செய்த குற்றத்துக் கெல்லாம் ஒரு கழுவாய் கூறுகிறேன்; கேள், அதனால் உன் பழி பாவம் எல்லாம் நாள

டைவில் மறைந்து போகும். "நீ உயிரைத் துறந்தாய் ஆயின் தூயை ஆதி, உலகத்தே பிறந்தாய் ஆதி; ஈதலது பிறிதில்லை".

இவ்வாறு பரதன் தன் தாய்பாற் சினந்து நின்றான். சுடுசரம் போன்ற சொற்களால் பரதன் கடிந்து நின்றான்.

நீ இன்னம் இருந்தனை, யானும் இருந்தனென்
ஏயெனும் மாத்திரத்து எற்றுகிற் றிலேன்
நாயகன் முனியும்என்று அஞ்சினேன், அலால்
தாய்எனும் முறைமையும் தடுக்கற் பாலதோ

நோயீர் அல்லீர், நும்கண வன்தன் உயிருண்டீர்
பேயீரேநீர் இன்னும் இருக்கப் பெற்றீரே!
மாயீர், மாயா வன்பழி தந்தீர், முலைதந்தீர்;
தாயீரே, நீர்இன்னும் எனக்குஎன் தருவீரே!

(பள்ளியடை 72, 75)

சத்துருக்கன்

சத்துருக்கன் இளையவன்; அவன் சினம் செல்லாது. தன்னினும் சிறியவரைப் பார்த்தே அவன் சீறவேண்டும். பரதன் இராமனை நாட்டிற்கு அழைக்கச் செல்லும் போது, வழியில் கூட்டத்துடன் மந்தரைக் கூனியைப் பார்த்து விட்டான்; "இவளல்லவா இத்தனை கேட்டிற்கும் காரணம்" என்று சினந்து

மந்தரைக் கூனியும் வழிச்செல் வாருடன்
உந்தியே போதல்கண்டு இளவல் ஓடிஆர்த்து
அந்தரத்து எற்றுவான் அழன்று பற்றலும்;
சுந்தரத் தோளவன் விலக்கி நின்றனன்

கூனியின் நடையை, இளையவன் துடிப்பை நடித்துப் பார்மின்,

6—(8) வாலி

வாலியைக் கொன்று வானரப்படையின் துணை பெற வேண்டும் என்று அனுமான் கூறியபடியே இராமன் சுக்ரீவனைப் பார்த்து "நீ சென்று வாலியைப் போருக்கு அழை" என்றான்: சுக்ரீவனும் சென்று அழைத்தான். இது காறும் அஞ்சி ஒடுங்கியிருந்த தம்பி இப்போது தன் மனை வாயிலில் வந்து போருக்கு அழைத்தது வாலிக்குப் பெருஞ் சினத்தை மூட்டிற்று: அவன் வெகுண்டு எழுந்தான்.

"எழுந்தான்... இறுதி ஊழியிற்
கொழுந்திரைக்கடல் கிளர்ந்தென..."

"போய்ப் பொடித்தன மயிர்ப்புறம்
தீப்பிடித்த விழிகள்
மீப் பொடித்தன புகை உயிர்ப்பு"

"கைக்கொடு கைத்தலம் புடைப்ப—
வந்தனென் வந்தனேன் என்ன வந்தனன்."

இது வாலியின் சினந்தந்த மெய்ப்பாடு. பின்னர் அடிபட்டு விழுந்து, தன் மேல் தைத்த அம்பை உருவி, அது ராம பாணம் எனக் கண்ட போது அவன் ஏமாற்றத்தால் பெருஞ் சினங் கொண்டான். இராமனைக் கண்ணுற்றதும் "உன் எண்ணம் என்ன? உன் செயல் என்ன?" என்று ஏசுவான் இயம்பலுற்றான்." நீ வாக்குத் தவறாத தசரதன் மகனோ? உடன் பிறப்பிற் சிறந்த பரதன் தமையனோ? சூரிய குலத் துக்குக் களங்கம் உண்டாக்கினை, மனைவியைப் பிரிந்து மதிகெட்டாய், அறத்தை அழித்தாய், நன்று தீது அறியாய் என்று பலவாறு வசை பாடினான்: அவற்றை அன்பர்கள் செய்யுட் படித்துத் துய்த்தல் வேண்டும்.

வாலியுடன் சேர்த்து அவன் தம்பி சுக்கிரீவன் சினம் பற்றியும் சிறிது காண்பாம். இராவணன் நெடுங் கோபுரத்தில்

நின்று, வெளியிற் சூழ்ந்துள்ள இராமனுடைய படைகளைக் கணித்து நின்றான். இராமன் வீடணனை நோக்கி ''அவன் யாவன்?'' என வினாவ, வீடணன்—

''கூறும் மங்கையர் குழாத்திசை கோபுரக் குன்றில்
ஏறிநின்றவன் புன்தொழில் இராவணன் என்றான்''.

இராவணன் என்ற பெயரைக் கேட்டதும் சுக்ரீவனுக்குச் சினம் பொங்கிற்று. என்ன ஆகும் என்று எண்ணாதவனாய், எவரையும் யாதும் கலந்து பேசாதவனாய் திடீர் மூர்க்கனாக அவன் ''திண்டோள் அரக்கன்மேல் தாவினன்''. இருவரும் பொருதனர். இராவணன்

திருகிய சினத்தொடு செறுத்து எரி விழித்தான்
தருவனம் எனப்புடை தழைத்து உயர் தடக்கை
இருபதும் எடுத்து,உரும் இடித்தென அடித்தான்
(மகுடபங்க)

சினத்தின் மெய்ப்பாடு, விளைவுகளை இங்கு காண்கிறோம். அடுத்து அரக்கர் சினம் பற்றிக் காண்பாம்.

6—(9)

அரக்க இராவணனின் அசோகவனத்தையும் ஊரையும் நகரையும் அனுமான் தீயிட்டழித்துச் சென்றான். பலரைக் கொன்றான். இது இராவணனுக்குப் பெரிய மானக்கேடாக அவன் அவை கூட்டி ஆய்வு நடத்தினான். சேனைத் தலைவன், மகோதரன், வச்சிரதந்தன், துன்முகன், பக்கன், பிசாசன், கும்பகருணன் முதலியோர் அரக்கரின் திறத்தைப் பாராட்டிப், போர்புரிய வேண்டுமெனத் துடித்தனர். இறுதியில் இந்திரசித்து எழுந்து நின்று ''நாம் தேவர்களிடமிருந்து பலவரங்கள் பெற்றுள்ளோம், பல ஆயுதங்கள் பெற்றுளோம், மிக்க படைப்பலம் உடையோம். நம் பகைவரோ யானை, தேர், குதிரை, வீரர், யாதும் இலாதவர்; குரங்குப்

படையினர், மனிதர்; இவர்களை யான் வென்று வருவேன்; வென்றிலேன் ஆயின் யான் இராவணனுக்கு நேர் வழியிற் பிறந்தவன் அல்லன். யானே போர்க்களஞ் சென்று அங்கு பகைவர்களை வேர் அற அழித்து வருகிறேன்" என்றான். இவ்வார்த்தைகளைக் கேட்ட வீடணன் சினங்கொண்டான்; பின்வருமாறு கடிய லானான்;

அடே தம்பீ, நீ சிறுபையன், உன் பிள்ளைமைப் புத்தியில் ஏதேதோ பேசுகின்றனை. அறிவுரை பேச முன்வந்தனை, நூல் பல கற்று நுண்ணறிவு கொண்டனையோ? இடம், காலம், விளைவு பற்றியாதேனும் உன்னினையோ? நீ சிறு பாலன், பெரியோர் அவையில் முந்தலாகாது. ஒரு சித்திரத்தை, அக்கலை அறியாத—கண்இல்லாத ஒருவன் திருத்தத் துணிந்தது போல் நீ முந்தி நிற்கின்றாய்! உன் இளமையால் நீ முறைமை அறியாது பேசுகின்றாய். தீயவர் தேவரை வென்றதாகக் கதை உளதோ? களிப்பு மிகின் அழிவே விளைவாகும். அறம் தழுவி ஒழுகின் தீயரும் தேவர் ஆகலாம், அதனால் திறம் பெறலாம்: இவ்வுண்மைகளை உணராது நீ பெரியோர்கள் அவையில் பேசுவது ''தவறு என்று ஒள்ளிய புதல்வனை உரப்பி'' நின்றனன்

நூலினால் நுணங்கிய அறிவுநோக்கினை
போலுமால்? உறுபொருள் புகலும் பூட்சியோய்!
காலம், மேல்வினை, பொருள் உணருங் கற்பிலாப்
பாலன், நீ இனையன பகரற் பாலையோ?

விருத்த மேதையவர் வினைஞர், மந்திரத்து
இருத்தியோ? இளமையால் முறைமை எண்ணலாய்

பிள்ளைமை விளம்பினை, பேதை நீ—என
ஒள்ளிய புதல்வனை உரப்பி நின்றனன்

(இராவணன் மந்திரம்)

இது பெரியோர் சிறியோரை—தந்தை தன் மக்களைக்கடிந்து நிற்கும் முறை. இறுதியாக இராவணன் சினம் பற்றிக் கூறி, இதனை முடிப்பாம்.

6—(10) இராவணன்

இராவணன் சினம் பெருமிதத்துடன் கூடியது யானையின் பிளிறுதல், சிங்கத்தின் கர்ச்சனை அவனிடம் பிறக்குமேயன்றி, குரைத்தல் ஊளையிடுதல், அங்கு காண முடியாது: அவன் வீரத்தின் சின்னம். (அவன் வாக்குகளை எடுப்பான குரலுடன் படித்துப் பார்க்கவும்.) அவன் மாரீசனிடம் சென்று சீதையை வௌவவேண்டும் என்று கூற; மாரீசன் உடன்படாது கடிந்துரைத்தான். அறம் முறை மைகள் நவின்றான். அதனைக் கேட்ட இராவணன் சினந்து

மூவுலகினுக்கும் ஒரு நாயகம் முடித்தேன்
மேவலர் கிடைக்கின் இதன்மேல் இனிது உண்டோ?
ஏவல் செயகிற்றி எனது ஆணைவழி. எண்ணிக்
காவல்செய் அமைச்சர் கடன் நீகடவது ஏனோ?

மறுத்து ரைத்தனை எனப்பெறினும், நின்னை வடி வாளால்
ஒறுத்து, மனம் உற்றது முடிப்பேன், ஒழிகல்லேன்

என்று சினந்தான். அவ்வாறே கும்பகருணன் தனக்கு அறம் உரைத்தபோது

உறுவது தெரியஅன்று உன்னைக் கூயது.
சிறுதொழில் மனிதரைக் கொல்தி சென்று. எனக்கு
அறிவுடை அமைச்சன் நீ அல்லை. அஞ்சினை
வெறுவிது உன்வீரம்

மறங்கிளர் செருவினுக்கு உரிமை மாண்டனை
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை
இறங்கிய கண் முகிழ்த்து, இரவும் எல்லியும்
உறங்குதி, நீ போ......

என்று சினந்தான். அவ்வாறே அவை கூடியபொழுது வீடணன் அறம் உரைக்க; அதனைக் கேட்கச் சகிக்காத இராவணன்

வெஞ்சினம் தருபோரின் எம்முடன் நீஎழ வேண்டா,
இஞ்சி மாநகர் இடம் உடைத்து. ஈண்டு இனிது இருத்தி,
அஞ்சல், அஞ்சல்...
நஞ்சின் வெய்யவன் நகைஎறிந்து உரும்என நக்கான்.

பின்னர் இந்திரசித்து தன் தந்தைக்கு "ஆசைதான் அச் சீதைபால் விடுதியாயின், அனையவர் சீற்றந் தீர்வார்; போதலும் புரிவார்" என்று கூற; அதனைக் கேட்கச் சகிக்காத இராவணன்

நடுங்கினைபோலச் சாலத் தளர்ந்தனை. கருடன் காண
படம் குறை அரவம் ஒத்தாய்.
முன்னையோர்-இறந்தார் எல்லாம் இப்பகை முடிப்பார் என்றும்,
பின்னையோர்- நின்றார் எல்லாம் வெற்றியே தருவார் என்றும்
உன்னை-நீ அவரை வென்று தருதிஎன்று, உணர்ந்தும் அன்று!
என்னையே நோக்கி, யான் இந்நெடும்பகை தேடிக் கொண்டேன்

மீதெழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ! இருபது திண்டோள் உண்டால்!

இவ்வாறு தம்பியரிடத்தும் தன்மகனிடத்தும் பெருமிதத்துடன் சினந்து நின்ற இராவணன் அனுமானை இந்திர சித்து பாசத்தால் பிணித்து தன்முன் கொண்டு நிறுத்திய போது சிறிதும் மதிக்காதவனாய் மிகு சினத்துடன் பேசினான்.

யாரைநீ? என்னை இங்கு எய்து காரணம்?
யார்உனை விடுத்தவர்?
சோர்விலை சொல்லுதி (பிணிவீட்டு 73)

பின்னர் அனுமன் பதில் கூறியதும்

குரக்கு வார்த்தையும், மானிடர் கொற்றமும்
இருக்க, நிற்க! நீ என்சொல் அடா, எம்
புரத்தினுள் ஒருதூது புகுந்தவன்
அரக்கரைக் கொன்றது? அஃது உரையாய்.

இராவணன் சினத்தினும் சிறந்து நிற்பவன்; இராமன் சினத்தினும் சிரித்து நிற்பவன். சினம் ஒருவர்க்குத் தீமை, இகழ்ச்சியை விளைவிக்குமே அன்றி நன்மை தருவதில்லை: ஆதலின் வள்ளுவர் அதனைச் "சேர்ந்தாரைக் கொல்லி" என்றார். நாம் அதனை விடுத்து அடுத்த "அச்சம்" பற்றி அறிவாம்.

7. அச்சம்

அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே (தொல்காப்பியம்)

தெய்வம் விலங்கு கள்வர் இறைவராயினோர் இந்நால் வகையினால் அச்சம் பிறக்கும் என அறிவிக்கின்றார்.—தீ வெள்ளம் பெருநோய் பாம்பு பிறவும் அச்சந்தருவன—ஒடுங்கிய உடல், நடுங்கிய நிலை, அலங்கியகண், கலங்கிய உள்ளம், கரந்து வருநடை, கையெதிர் மறுத்தல், பரந்தபார்வை இவை அச்சத்தின் மெய்ப்பாடாக அடியார்க்கு நல்லார் அறிவிக்கிறார். அயோத்தியின் இராமசோதரர்களும், இலங்கையின் இராவணன் உடன்பிறந்தார்களும் அச்சம் அறியாதவர்; ஆதலின் இராமகாதையில் பெரியோர்களிடம் அச்சம் காண்பது அரிதே ஆகும். அவர்கட்கு அஞ்சிய எளியோர் பாலே அச்சம் தோன்றுவதாகும்.

7—(1)

மிதிலையில் இராமனுக்குத் திருமணம் முடித்துத் தசரத மன்னன் மகிழ்ச்சியுடன் திரும்பும்போது மயில் வலமாகவும், ஊகம் இடமாகவும் செல்லக்கண்டு "இடையூறு இங்கு உளதென நடவான்... மணித்தேரொடு நின்றான்". இது ஒரு சிறு அச்சம். சிறிது நேரத்திற் பரசுராமன் சீறி "படை இரிய—புருவக்கடை நெரிய—கண் பொரி சிதற—உரும் ஏறென", வந்த இராமன் எதிர் சென்றான். இராமன்

தசரதனுக்கு உயிர் போன்றவன்; அவன்முன் பரசுராமன் செல்வது யானைமுன் சிங்கம் செல்வது போல் முது மன்னர்க்குத் தோன்றியது; உள்ளம் நெகிழ்ந்தது, அச்சம் பிறந்தது; உடனே அவன் எதிர்வந்து ஆராதனை புரிந்து, அவன் அடியில் முடிவைத்து வணங்கினான். காரணம். அச்சம்: காரியம் மகனுக்கு இடையூறு நேரும் என்னும் எண்ணம். பரசுராமனைப் பார்த்து

"என்மகன் உயிர்தபுமேல்
என் உறவோடு உயிர் உகுவேன்...
குலத்தோடு அறமுடியேல்—" என்று

இரந்து நின்றனன். கம்ப நாடகத்தில் முதல் அச்சம் இது.

7—(2)

இராமன் இலக்குவன் சீதை மூவரும் ஆரண்யத்தை அடைந்ததும், விராதன் கோர உருவத்துடன் வந்து "நில்லும் நில்லும்" என்று நிறுத்திச் சீதையை எடுத்து உயர்ந்தான். அவன் பிடியிலுற்றுத் தவிக்கின்ற சீதையின் நிலை என்ன? பூனைவாய்ப்பட்ட கிளிபோல் அவள் அஞ்சித் துடிக்கிறாள்.

வஞ்சக்கொடு பூசைநெடு வாயினில் மறுகும்
பஞ்சரக்கிளி எனக் கதறு பாவை (விராதன் 25)

7—(3)

சூர்ப்பநகை மூக்கு முலைகளை இலக்குவன் அறுத்து விட்டான். பின்னர் அவள் தூண்டுதலால் அகம்பன் திரிசிரன் இவர்கள் தம் சேனையுடன் வந்து மடிய; அப்பால் தூடணன் போருக்கு வந்தான். அவன் படைவீரர் ராம

பாணத்துக்கு அஞ்சி,

"கச்சும் வாளும் தம் கால் தொடர்ந்து ஈர்வன காணார்
ஆச்சம் என்பதே உருவுகண்டாலென அழிந்தார்."

அவ்வாறு அஞ்சி நடுங்கிய வீரர்களைத் தூடணன் பார்த்து

"அச்சம் என்னும் இது ஆருயிர்க்கு அருந்துணை ஆமோ?
கொச்சை மாந்தரைக் கோல்வளை மாதரும் கூடார்."
"கொங்கை மார்பிடைக் குறிப்புறக் களிப்புற்று
நங்கைமார்களைப் புல்லுதிரோ? நலம் நுகர் விரோ?"

என்று எள்ளி ஊக்கம் பிறக்கச் செய்தான். அச்சம் உடையவர் கொச்சை மாக்கள். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்றார் வள்ளுவர்.

7—(4)

சபரி கூறிய முறையே இராமஇலக்குவர் கிட்கிந்தையை அடைந்தனர். வில் ஏந்திய இவ்விரு வீரர்களையும் கண்ட சுக்கிரீவனும் அவன் துணைவர்களும் "இவ்வீரர்கள் வாலியால் ஏவப்பட்டு, நம்மை அழிக்க வருகிறார்கள்" என்று எண்ணி அஞ்சி ஓடலானார்கள்

வாலி ஏவலின் வரவினார்கள், வரிசிலையினர் எனப்
பாரமா மலையின் ஒருசார் ஓடுதல் புரிந்தார்

"ஒன்று உற்றக்கால் விற்றற்கு உரியர் கயவர்" என்றார் வள்ளுவர். வானரரோ அஞ்சத்தக்க ஒன்று உற்றக்கால் ஓடுதற்கு உரியராயிருந்தனர். நடுக்கம் கலக்கம் கரத்தல் மறுத்தல் இவை அச்சத்தின் மெய்ப்பாடு அல்லவா!

7—(5)

அனுமான் கடலைக் கடந்து இலங்கை முழுவதையும் சுற்றி, இறுதியில் அசோகவனத்திற் சீதையைக் கண்டான். முதலில் ஐயுற்ற சீதை பின்னர் தெளிவடைந்து வரலாறு

முற்றும் அறிந்தாள், அவட்கு மனத்துள் "இச்சிறு உருவம் எவ்வாறு இப்பெருங்கடலைக் கடக்க முடியும்" என ஒரு வியப்பு தோன்றலானது. உடனே "நீ இக்கடலைக் கடந்த தெவ்வாறு? ஏதேனும் சித்து கற்றுளாயோ? அல்லது தவப் பலனோ?" என்று வினாவினாள். உடனே அனுமான் பேருருக்கொண்டு வானளாவ—குண்டலங்களுடன் தொழுத கையனாக நின்றான். உடனே சீதை

துஞ்சினர் அரக்கர் என்று உவக்கும் சூழ்ச்சியாள்
"அஞ்சினேன் இவ்வுரு; அடங்குவாய்" என்றாள்.

அனுமானின் பேருரு சீதையை அஞ்ச வைத்தது. இராவணனை வதைத்த பின் இராமன் ஆணைப்படி அனுமான் சீதையிடம் வருகிறான். அருகிலுள்ள அரக்கிய ரைக் கண்டு வெகுண்டு, சீதையிடம் "அன்னையே, எனக்கு ஒரு வரம் அளித்தி. உன்னைத் துன்புறுத்திய இவர்கள் உடலை யான் என் உகிரால் கிழித்து, இவர் உயிரை அழித்துக் குருதியைக் குடிக்குவென்" என்றான். இதனைக் கேட்ட அரக்கியர் அஞ்சி நடுங்கி "அன்னை, நின் பாதமே சரண்" என்று அடியுற ஒதுங்கினர். அப்பொழுது அன்னை "அஞ்சன்மின், அஞ்சன்மின் நீர்" என அபயம் அளித்து நின்றாள். அனுமானால் அரக்கியரும் அஞ்சினர், சீதையும் அஞ்சினாள்.

அரக்கியர் அஞ்சியது போன்றே அரக்கரும் ஒரு முறை அஞ்சினர். எப்போது? அங்கதனை இராமன் இராவணன் பால் தூது அனுப்பினான். சீதையை விட்டு நீ உன் உயிரைப் பேணிக் கொள்க, இன்றேல் செருவில் வந்துற்று உன் தலை பத்தும் சிந்திக்கொள்க—என்பது தூதுச்செய்தி. அங்கதன் இராவணன் அரண்மனையை அடைந்தான். இவனைக் கண்ட அரக்கர் அச்சம் உற்றனர். காரணம்? இவனை அனுமானாக எண்ணினர். முன்னர் ஒருமுறை வந்து

சோலையை அழித்தான்; கிங்கரர் பஞ்சசேனாபதிகள், அட்ச குமாரனைக் கொன்றான்; இப்போது நம்மைக் கொல்வான் என்று அஞ்சித் துடித்து, உடனே இராவணனுக்கு அறிவிக்க ஓடினர்.

"அழுகின்ற கண்ணராகி, அனுமன் கொல்! என்ன அஞ்சித்
தொழுகின்ற முறையில் ஓடி நின்றனர் அரக்கர்எல்லாம்"

7—(6)

அச்சத்தின் மெய்ப்பாடாக அடியார்க்கு நல்லார் சில கூறினார்: நாம் பல காணலாம். நம் தமிழ்நாட்டு நடிகர் திலகம் சிவாசி கணேசன் பல காட்டலாம்: ஆனால் பெரிய—நாடக ஆசிரியரான கம்பர் நாம் எதிர்பாராத ஒன்று குறிப்பிடுகின்றார். அனுமான் கணையாழி பெற்று மீளும்போது அசோகவனத்தை அழித்தான், ஓம குண்டங்கள் மாடங்களைச் சிதைத்தான்; ஆதலின் தக்க பாதுகாப்பின்றி அரக்கர் தவித்தனர்; சோலைக் காவலர் அஞ்சி ஒடுங்கி இதனை எவ்வாறு இராவணனுக்கு அறிவிப்பது என்று நடுங்குகின்றார்கள். ஆங்கு உற்ற இடக்கர் மெய்ப்பாட்டை அன்பர்கள் யூகித்து உணர்தல் வேண்டும்.

நீரிடுதுகிலர், அச்சர், நெருப்பிடு நெஞ்சம், நெக்குப்
பீரிடும் உருவர், தெற்றிப் பிணங்கிடுதாளர், பேழ்வாய்
ஊர் இடுபூசல் ஆர உளைத்தனர், ஓடியுற்றார்
பாரிடு பழுவச்சோலை பாவிக்கும் பருவத்தேவர்.

ஆடை நனையச் சிறுநீர் கழித்தனர். முதல் 3 அடிகளை நடித்துப் பாருங்கள்; முதல் கட்டமே அச்சத்தின் முதிர்ந்த கட்டம்!

7—(7)

அசோகவனத்தை அழித்த அனுமானை எதிர்த்துக் கிங்கரர்கள் அழிந்தார்கள். இச்செய்தியைச் சிலர்

இராவணனுக்கு அறிவித்தார்கள். அவனால் இதனை நம்ப முடியவில்லை. அரக்கரை வீழ்த்துவது எவர்க்கும் இயலாக் காரியம் என எண்ணும் அவன் அவர்களிடம், "இது நீவிர் கண்டதோ? கேட்டதோ?" என்று பெருமிதத்துடன் வினா வினான். அவர்கள்

"கண்டனம் ஒருபுடை நின்று கண்களால், சேனை
மண்டலம் சுற்றி ஓர் மரத்தினால் அடி
உண்டது; குரங்கு இன்னும் ஒழிவதன்று"

என்று கூறினர். கருத்து என்னை? நாங்கள் ஒருபுடை மறைந்து நின்றோம், அதனால் தப்பினோம், பார்த்தோம், அறிவிக்கின்றோம்; மறையாவிடின் நாங்களும் இறந்து படுவோம் என்பதே கருத்து. அச்சத்தின் மெய்ப்பாடு—கரத்தல். ஆசிரியர் கண்ணுக்கு மறைந்து மாணவர் ஒதுங்கிச் செல்வதும், அதிகாரிகள் கண்ணுக்கு மறைந்து பணியாளர் ஒதுங்குவதும் மனத்திலுறும் அச்சத்தின் மெய்ப்பாடே.

7—(8)

இராவண தர்பார் யாவர்க்கும் அச்சம் ஊட்டுவது அவன் கொலுவில் அமர்ந்திருப்பின்

மங்கையர் திறத்தொரு மாற்றம் கூறினும்
தங்களையாம் என எவரும் தாழ்குவர்.
அன்னவன் அமைச்சரைநோக்கி ஆண்டொரு
நன்மொழி பகரினும் நடுங்கும் சிந்தையர்.
இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர், கரதலம் சுமந்த உச்சியர்.

இப்படிக் கொலு அமரும் இராவணேசுரன் மாரீசன் மனைமுன் வருகிறான். அவனைக் கண்ட மாரீசன் நிலை என்ன?

"இருந்த மாரீசன், அந்த இராவணன் எய்தலோடும்
பொருந்திய பயத்தன், சிந்தை பொருமுற்று வெருவு
கின்றான்
.........எதிர்கொண்டு கடன்கள் யாவும்
திருந்தியமுறையிற்செய்து, திருமுகம்நோக்கி நின்றான்".

இவற்றை உணர்ந்து நோக்கின் பொருள் நனி விளங்கும்.

7—(9)

சிலருக்குச் சில கொடுஞ்செயல்களைக் காண மனம் சகிக்காது; கண்ணை மூடிக் கொள்வர். ஒரு பிணியாளன் வயிற்றை மருத்தர் அறுக்கிறார். அதைக் கண்ணுறும் உறவினர் அஞ்சி அகல்கின்றனர். மான்மரைகளைச் சுட்டு வீழ்த்துவதைக் கண்டு, சாதுக்கள் அஞ்சுகின்றனர்; ஒரு மானைச் சுட்டு வீழ்த்தி, அது துடிப்பதைக் கண்டு அஞ்சி வருந்தி, அன்று முதல் வேட்டையை விட்டொழித்தார் நேரு. கறிக்கடைகளில் கடாக்களைத் தோல் உரித்துத் தொங்க விட்டிருப்பதைக் கண்டதும் சிலர் அயல் நோக்கிச் செல்வர். தெருவில் பிணம் வருவதைக் கண்டு அஞ்சி அயலில் திரும்பிச் செல்வார் பலர். இவற்றுக்கெல்லாம் காரணம் உள்ளத்திற் பிறக்கும் ஒருவகை அச்சமே. இராமஇலக்குவர் மீது இந்திரசித்து பாணங்களை மழை போல் பொழிந்தான். இதனைக் கண்ட தேவர்கள் அஞ்சினர்.

பச்சிமத்தினும் முகத்தினும் மருங்கினும் பகழி
உச்சி முற்றிய வெய்யவன் கதிர்என உமிழ,
கச்சை கட்டியோன் கைவினைக் கடுமையைக் காணா
அச்சம் உற்றனர் கண்புதைத்து ஒடுங்கினர் அமரர்

7—(10)

இராவணன் போரணி புனைந்து "இன்று என் மனைவி மண்டோதரி தாலி இழப்பாள், இன்றேல் இராமன் மனைவி

சீதை தாலி இழப்பாள்'' என்று சூள் உரைத்து இராம இலக்குவர் எதிர் வந்து சிலை நாண் தெறித்தான்: நெருப்புப் பற்றி எரிகிற காட்சி போல் இருந்தது. அப்போது

மணிக்கொடுங்குழை வானவர் தானவர் மகளிர்
துணுக்கம் எய்தினர், மங்கல நாண்களைத் தொட்டார்
(தேர் ஏறு 29)

வீரர்களாக நிறைந்த இராமநாடகத்தில் கம்பர் ஆங்காங்கு அச்சத்துக்கும் சில குறிப்புகள் அமைத்துள்ளார். அச்சம் ஏற்படுவது வீரர்கள் பாலன்று, கோழையர்பால். ''அச்சம் உடையார்க்கு அரணில்லை—'' குறள். அஞ்சலிற் றுஞ்சல் நன்று.

8. பெருமிதம்

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே (தொல்காப்பியம்)

கல்வி—வித்தை. தறுகண்—அஞ்சாமை. இசை—பழிதருவன செய்யாப்புகழ். கொடை—யாவற்றையும் கொடுத்தல்—இந் நான்கின் காரணமாகப் பெருமிதம் பிறக்கும் என்பர் உரை யாசிரியர். அடியார்க்கு நல்லார் முரிந்தபுருவம் சிவந்தகண் கடித்தபல் மடித்த உதடு சுருட்டிய நெற்றி திண்ணியசொல் பிடித்தவாள் பகைஞரைப் பொருட்படுத்தா நிலை இவை வீரத்தின் மெய்ப்பாடாகக் கூறுகிறார். கம்பநாடகத்தில் வீரத்தின் மெய்ப்பாடு பற்றிக் காண்பதே ஈண்டு நம் கருமம்

கம்பர் பாடியது இராமகதை; ஆயினும் அதனைச் சைவர் சமணர் புத்தர் கிரித்தவர் மகமதியர் பிற யாவரும் விரும்பிப் படிக்கின்றனர், கேட்டுத் திளைக்கின்றனர் காரணம் என்ன? ஆறு மலை கடல் நகர் மனிதர் தேவர் அரக்கர் குரக்கர் விலங்கு புள் என அவன் படைத்த பல பாத்திரங்களிலும் பெருமிதமே நின்று நிலவும்; அப்பெரு மிதத்தில் மக்கள் தம்மை மறந்து நிற்கின்றனர்: மீண்டும் மீண்டும் கற்றும் கேட்டும் வருகின்றனர். மல்லிகைத் தோட்டத்துள் அந்திப் பொழுதில் போய் நின்றால் மணம் பரவி நிற்பதை உணர்வது போலக் கம்பன் காவியம் பெருமித உணர்வை ஊட்டி, அதனை யாவரும் அவாவ வைக்கிறது;

மக்கள் இந்த உண்மையை அறியாதே, அதனைச் சுவைத்துச் சுவைத்துத் திளைக்கின்றனர். இழிநிலையை விரும்புவார் எவருமிலர்; பெருமிதத்தைப் போற்றும் உலகம் என்ற உண்மையை உணர்ந்தவர் கம்பநாடர். கம்பருக்குக் காவியம் எழுத வழிகாட்டியது சிந்தாமணி ஆகும். தமிழில் இன்று உள்ள நூல்களிற் சிறந்த சொற்கட்டு உறுதிப்பாடு கொண்ட நூல் சிந்தாமணி என்றால், அது மிகையாகாது. எம் ஆசிரியர் ச. த. சற்குணர் அவர்கள் அதனைத் "தமிழ்கடலிற் பிறந்த வலம்புரி அல்லவா சிந்தாமணி!" என்று தலை நிமிர்ந்து நிற்பார்கள். சிந்தாமணியின் கருத்துகள் சொற்றொடர்களைக் கம்பநாடகத்தில், அங்கு உற்றவாறே பரக்கக் காணலாம். சிந்தாமணி இருப்புச் சங்கிலிபோல் திண்ணியது: கம்பநாடகம் பொற்கொடி போல் மெல்லியது. திண்ணியது பயிலப் பெறாமல், மெல்லியது புனையப் பெறுகின்றது. காரணம் என்னை? கம்பன் கண்ட நுட்பமே, பெருமிதம் பற்றியே நுட்பமே! சீவகன் மனிதன், அவனைப் பற்றியே பேசிப் பாடி வருதல் மக்கள் உள்ளத்தைக் கவர்வதில்லை; மக்கள் உள்ளத்தைக் கவர— காவியம் நீடு நிலைக்கக் கதைத் தலைவனைத் தெய்வம் ஆக்கவேண்டும், அஃதே கருத்தைக் கவரும் என்ற நுட்பங்கண்டு இராமனை நூல் முற்றும் தெய்வமாக்கி வைத்தார் கம்பர். தம் கதையிலுள்ள யாவரையும் பெருமித நெறியிற் செலுத்தினார்; இதனால் அவர் காவியம் இன்று தலைசிறந்து மிளிர்கின்றது.

கம்பநாடகம் கற்பவரும் கேட்பவரும் சிறு இழிநிலையில் எண்ணும் பாத்திரங்கள் கூனியும், கைகேசியும் ஆவர். கம்பர் அவர்களை இழிவிலும் மிக்காராகவே காட்டுவார். கூனியின் தோற்றத்தை

"இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்" என்றார்.

இராவணன் எத்துணை பெரியவன்?பெருமிதத்தின் சின்னம்! அவன் செய்த தீச்செயல்கள் எத்துணை? அவற்றை அளவிட முடியுமா? அவை எல்லாம் சேர்ந்து ஒரு உருக் கொண்டா லென இக்கூனியின் உரு. இமயமலையை உடைத்து வண்டிவண்டியாகக் கற்கள் கொண்டுவந்து கட்டிய மனை என்பது போல்—இவ்வுவமை. இவள் செயலோ—

''மூன்றுல கினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்''.

இவள் ஒருபெண், மூப்புடையாள், அங்கப் பழுதுடையாள் என்று எண்ணுதற்கு இல்லை; இவள் செய்வினை சிறியன ஆகா: குடிசைகள் கோட்டைகளுக்குத் தீவையாள்; மூன்றுலகுக்கும் நாசம் ஊட்டுவாள் என்று பெருமிதமாகப் பாடினார் கம்பர்: உண்மையே. கைகேயியைத் தூண்டி விட்டுத் தசரதரை நாட்டில் மடித்தாள். இராமனைக் காட்டுக்கு அனுப்பி மலையில் வாலியை வதைத்தாள். இலங்கையில் இராவணனைக் கொன்றாள்: மூன்று இடத்து மன்னர்கள் மாள மூல காரணமாக நின்ற மந்தரை மா பெரியள்! கைகேசியை ''உலகத்தே ஒருத்தி, பாவி'' என்று பழித்தாலும், இராமகாதை என்னும் திவ்விய அமுதை ''உலகமெலாம் பருக வைத்த பெருநலம் புரிந்த அருங்குணத் தாள்" எனத் திறம்படக் கூறி நின்றார்; இந்த ஆற்றல் உடையார் பிறர் யாவர்!

"இரக்கமின்மை அன்றோ இன்று உலகங்கள் இராமன்
பரக்குந் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே''

கம்பர் காவியத்தில் எங்கும் பெருமிதமே. மன்னர் 60 அல்ல, அறுபதினாயிரம் ஆண்டு வாழ்வார். குரங்குகள் கல் எடுத்து எறியா; மலையைத் தூக்கி வீசும். கொம்பு ஒடித்து அடியா, மரங்களைப் பெயர்த்து வீசுவ; கடல்மீன் எல்லாம் மணக்கும்; கோட்டைகள் வானைத் தொடும். சூரியன்

சந்திரன் யமன் வருணன் வாயு அக்கினி எல்லாம் இராவணன் ஆணைக்கு அடங்கி நடக்கும்: போர் செய்ய வருவோரும் போரில் இறப்போரும் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என எண்ணில் அடங்குவாரல்லர்; வெள்ளம் தாமரை சங்கம் எனக் கணக்கிறந்த பேரெண்களே ஆகும். இப்பெரு மிதங்களைக் கண்டறிந்த 'கற்புக்கனல்' ஆசிரியர் மகாகவி. அ·கு· ஆதித்தர் 1947இல் தம் நூலில் கம்பன் பற்றிப் பாடிய பாடல்களிற் சில:—

முன்முனியே சொன்னாலும் முறைதவறு
நெறிஎல்லாம் முற்றும் நீக்கி
நன்னயம்வேண் டுலகென்றும் ஏற்கும் ஒரு
நாகரிகம் விளக்கி வைத்தான்
கன்னி, மழை, காளை, மணம், போர்வீரர்
குரங்கு, அன்னம், அழுகை, ஆடல்
எந்நடையில் நடக்கும்அவ் வியல்நடையிற்
கவிபாடி ஏற்றம் ஆனான்.

உள்ளுவதெல் லாம்உயர்வே உள்ளுவன், அவ்
உயர்நோக்கின் என்றும் தாழான்,
வெள்ளந்தா மரைசங்கம் விளம்புவதே
அன்றி, ஒன் றிரண்டு எண்ணான்
கள்ளராக் கதர், வேடன், குரங்கு, செங்
கருடன், தே, குரிசில் எல்லாம்
உள்ளத்தே தானாகி, உயர்நெறியிற்
கதை நடத்தி உலகங் காத்தான்.

கம்பர் படைத்த பாத்திரங்கள் எல்லாம் பெருமித நடையன; அவர் உருவாக்கிய இராவணன் உலகில் யாண்டும் இல்லாத பெருமிதத்தான். "கம்பர் கவித்திறனில்" "இராவணப் பெருமிதம்" என இரு அதிகாரங்கள் அமைத்தோம். அதன் முடிவில் ஒரு வினாவும் அமைத்தோம்.

பெருமிதம் இருவகையாகும்; உயர்நிலையிற் றிரியா உள்ளத்துப் பெருமிதம், ஒன்னவரை அடக்கி ஆளும் உடல் உரத்துப் பெருமிதம். உரத்துப் பெருமிதத்தினும் உள்ளத்துப் பெருமிதம் சாலச் சிறந்ததாகும். சேனைப்பலம் ஆயுதபலம் உடைய இட்லர் ஒத்த பன்னாட்டுத் தலைவர்களினும், சத்தியம் அகிம்சை விரதம் பூண்ட காந்தியடிகளே பெரியவ ராகக் கருதப்பட்டு, மகாத்மா பட்டம் உற்றார்; அரசர்களினும் அருந்தவ முனிவர்களே போற்றப்பட்டனர். காரணம்? அவர்களின் உள்ளத்து உயர்வே. இந்நெறியிற் கம்பர் காட்டும் பெருநெறி பற்றிச் சில காண்பாம்.

இராமன்

இராமன் இளமையில் வல்லரக்கியான தாடகையை வீழ்த்தினான், எவரும் எடுக்க முடியாத வில்லை வளைத் தான், மிக்க வலிபெற்ற பரசுராமன் பங்கமுறச் செய்தான், கொடிய விராதனை வதைத்தான், ஆற்றல் மிக்க கர தூடணர் திரிசிரர்களைக் கொன்றான், மாரீசன் மடியச் செய்தான் கவந்தனை அழித்தான், பெருமரங்களைத் துளைத்தான், வெல்லற்கரிய வாலியை வீழ்த்தினான் கும்பகர்ணன் அதிகாயன் மகரக் கண்ணன், வீரதீர இராவணன் யாவரையும் வென்றான். இவற்றால் மட்டும் இராமன் பெருமிதத்தான் ஆவனோ? அல்லன், அல்லன். பின்னர் அவன் பெருமிதந்தான் என்னை?

1. யாவரிடத்தும் இனிமையாக "எது வினை? இனிது நும்மனை? குமரர் வலியர்கொல்?" என அளவளாவினான். காட்டுவாசியான குகன், மலைவாசி-குரக்குருவச் சுக்கிரீவன், ஆகாயவாசம் புரி புள் சடாயு, தனக்கு எதிரியாகும் அரக்கர்—யாவராயினும் அண்டினோருக்கு ஆதரவு அளித்து வந்தான். இது பெருநெறி அல்லவா?

I கைகேசி "ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்ப் பூழிவெங்கானம் நண்ணி—" என்று கூறியபோது' சிறிதும் முனியாது "அப்பொழுது அலர்ந்த செந்தாமரை', முகத்தனாக "மின் ஒளிர் கானம் இன்னே போகின்றேன் விடையும் கொண்டேன்" என்று புறப்பட்டான். எத்துணை அடக்கம்! "நிலையிற் றிரியாது அடங்கியான் தோற்றம்.

மலையினும் மாணப் பெரிது"—குறள்

III விசுவாமித்திரர் "இத்தாடகை பொல்லாதவள், இவளைக் கொல்" என்ற போது "பெண் என மனத்துட் பெருந்தகை நினைத்தான்." அயோமுகியைக் கொல்லாமல் பங்கப் படுத்தி இலக்குவன் மீண்டபோது

"தொல்இருள், தனைக்கொலத் தொடர்கின்றாளை நீ
கொல்லலை; நாசியைக் கொய்து நீக்கினாய்;
வல்லைநீ! மனுமுதல் மரபினோய்நீ!"

என்று தழுவிப் பாராட்டினான். பெண்பாலரிடத்தில் பரிவு காட்டி நின்றான் இராமன். இஃது அவன் பெருமிதம்.

IV வாலி இராமனை நோக்கிப் பலவாறு கடிந்து, இறுதியில்

"செவ்வியோய்! செருக்களத்துஉருத்து எய்தாது வெவ்விய
புளிஞர் என்ன விலகியே மறைந்து, வில்லால் எவ்வியது

என்ன?" என்று கேட்க, இராமன் தன் குற்றம் உணர்ந்து; போலிச் சமாதானங்கள் கூறாமல் வாய் மூடி மௌனியாக நின்றான். இஃது பெறற்கரிய பெருங்குணம். "ஆற்றுவார் ஆற்றல் பணிதல்".

"சால்பிற்குக் கட்டளையாதெனின், தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்"—குறள்

V இராவணன் முதல் நாள் போரில் படையிழந்து உரம் இழந்து தனித்துத் திண்டாடி நிற்க; இராமன் அந்நேரத்தைப் பயன்படுத்தாமல், பகைவனுக்கு இரங்கி "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" என அருள் கூர்ந்தான். அவ்வாறே கும்பகருணன் நொந்து கிடந்த சமயத்திலும்,

"ஏதியோடு—பெருந்துணை இழந்தனை.
எதிர்ஒரு தனி நின்றாய்;
நீதியோனுடன் பிறந்தனை; ஆதலின்
நின்உயிர் நினக்கு ஈவன்
போதியோ? பின்றை வருதியோ—"

இவ்வாறு நொந்தவர்பால் பரிவு காட்டி நின்றான். தக்க காலம் எனத் தனக்கு ஆதாயத்தை நாடாமல் மிக்க பெரு நெறி தழுவி நின்றான் இராமன்.

VI இராவணனை வதைத்து, அயோத்திக்கு மீளும் முன் தசரதர் இராமனுக்குக் காட்சி யளித்து "யான் உனக்கு நல்கத் தக்க வரம் ஒன்று வேண்டுக" என்று கூற; இராமன் யாது வேண்டினான்? நாடு செழிக்க வேண்டும், நல்ல மழை பெய்ய வேண்டும், யான் நீள நாட்டை ஆள வேண்டும். என்ற முறையில் யாதும் கேளாமல்—

"தீயள் என்றுநீ துறந்த என்தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரந் தருகஎனத் தாழ்ந்தான்,"

இது இராமன் பெருமிதமா? கம்பன் பெருமிதமா? கைகேசியையும் பரதனையும் தசரதர் ஏற்றுக் கொள்ளும்படி முதலில் வேண்டி, இரண்டாவதாக

நேய வானர இனம்செல்லும் இடங்களில் நீர்தேன்*
காயும் கனிகளும் கிழங்குகள் தடையின்றிக் கிடைக்க

என்று தனக்குப் பேருதவியாக நின்ற குரக்கினத்தின் நலங் கருதி வரம் வேண்டினான். அவ்வாறே' பரத்துவாசர் 'உனக்கு வேண்டும் வரங்கேள்' என்ற போதும், வானரர் நலம்பற்றிய இவ் வரமே வேண்டினான்.

VII இராமன் நற்பெருங் குணக்குன்றாக விளங்கக் காண்கிறோம். இன்னும் ஒன்றிரண்டு கூறி, அவன் பெருமிதத்தை முடிப்பாம். பரதன் காட்டுக்கு வந்து தான் குற்றமற்றவன் என அறிவித்தான், பாதுகை பெற்றுச் சென்று நகருக்குப் புறத்தே இருந்தான். இவற்றால் பரதன் மீது இராமனுக்கு அழுக்காறு ஐயுறவு சினம் ஏற்படாதிருக்கலாம். ஆனால் பரதன் தன்பால் வரும்முன் வெறுப்பு ஏற்பட ஏது உண்டு அல்லவா? அவனுக்காக அல்லவா கைகேசி அரசு வேண்டினாள்; தான் நாடிழக்க மூலகாரணம் பரதன் அல்லவா? இவற்றை எண்ணி இராமன் மனம் சிறிது களங்கமுறலாம், வன்மை யுறலாம் அல்லவா? உலகியல் எவ்வாறு நடைபெறுகிறது? தந்தையும் மகனும்-அண்ணனும் தம்பியும் —தாயும் மகனும்—அக்காளும் தம்பியும் சொத்துக்காக வழக்கிட்டு, வக்கீல் வைத்து மன்றம் ஏறி நீதி வேண்டுகிற முறையை நாம் காண்கிறோம். கம்பர் காட்டும் நெறி என்ன? பரதன் வருகையைக் கண்ட இலக்குவன் ஐயுறுகிறான், இராமன் யாது கூறினான்?

> பெருமகன் என்வயின் பிறந்த காதலின்
> வரும்என நினைகையும், மண்ணை என்வயின்
> தரும்என நினைகையும் தவிர—தானையால்
> பொரும்என நினைகையும் புலமைப் பாலதோ?

ஈற்றடியின் கருத்து என்னை? இலக்குவா, இத்தனை காலம் பழகியும் உன்னால் உண்மையை உணர முடியவில்லையே; அறிவு நெறியில் நிற்க வேண்டாமோ? என்பதே. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற முறையால்—அறிவால் பெருமிதத்தனாக விளங்குகிறான் இராமன். இதனினும் சிறந்த ஒன்று கூறுவாம்.

இராமன் — சீதை — இலக்குவன் மூவரையும் காட்டில் விட்டுச் சுமந்திரர் நாடு நோக்கிப் புறப்படுகிறார். அப்

போது இராமனை நோக்கி "யான் நாட்டில் மன்னர்க்கு யாது கூறுவேன்" என்ற நிலையில் நின்ற சுமந்திரற்கு இராமன்.—

வெவ்வினை அன்னையால் விளைந்தது; இதனை
எவ்வம்என் றெண்ணி இடர்ப்படா திருக்கவும்;
எவ்வருள் என்பால் வைத்தனன், இன்சொலால்
அவ்வருள் பரதன்பால் வைக்கவும் அறைதியால்

என்று பரதனுக்காகப் பரிந்து வேண்டினான் என்றால், இராமனின் பெருமிதம் என்னே!

VIII மன்னர்கள் பெருந் தலைவர்கள் வரும் நாளில் அவர்களைப் பார்க்க ஆர்வத்தால் கூடும் மக்கள் திரளைப் புரவுத் துறையார் அச்சுறுத்தி விலக்குவர், தடி கொண்டு தாக்குவர், குதிரைகளைச் செலுத்தி விரட்டுவர். நேரு ஒருமுறை சென்னைக்கு வந்த போது, குதிரைப் படையினர் கூட்டத்தை முரட்டுத்தனமாக விலக்க; அவர் தமது காரினின்று இறங்கிப் போய்க் குதிரை வீரர்களைக் கடிந்து நின்றார். கூட்டமும் விலகியது. இஃதே ஒப்ப ஒரு காட்சி கம்பர் அமைக்கிறார். இராவண வதைக்குப்பின் சீதையை இராமனிடம் அழைத்து வருகிறார்கள். மக்கள் ஆர்வத்தால் குழுமி, நெருக்கம் அதிகம் ஆகிறது. காவலர் கை ஓச்சலால், கூக்குரல் எழுகிறது. இதனை அறிந்த இராமன் வீடணனை நோக்கி

"புனித,நூல் கற்றுணர்ந்த*
புந்தியோய், நீ தகாத செய்தியோ?
களம்காணும் ஆசையால் யாவரும்
குழுமினர்; கூடிவந்தார்களைக்
கடிந்திட யார் சொன்னார்?"

என்று கடிந்தான்.

இராவணன் ஏவலால் ஒற்றர் சிலர் உருமாறி இராமன் சேனைக்குள் வந்தனர். இதனை உணர்ந்த குரக்கர் அவர்களைப் பற்றி அடித்துத் துன்புறுத்தத் தொடங்கினர். இதனைக் கண்ட இராமன் மனம் இரங்கி,

"தாம் பிழை செய்தாரேனும்
நாம் பிழை செய்யலாமோ? நலியலிர், விடுதிர்"

என்றான்.

இவ்வாறு மக்கள்பால் இரங்கி நிற்கும் இஃதன்றோ பெருமிதம்!

IX இராமனைக் கண்டதும் சுக்கிரீவன்
"வேறுள குழுவை எல்லாம் மானிடம்
வென்ற தன்றே!"

என்று வியந்து நின்றான்; அத்துணை இனிய உருவம்!

கும்பகர்ணனால் "ஐயன் வில் தொழிற்கு ஆயிரம் இராவணர் அமையார்" என்று பாராட்டப் பெற்ற வித்தை மேம்பாடு!

"இலங்கை கேள்வி"யில் விடணன் இராவணனைப் பற்றி இராமனுக்கு அறிவிக்குங்கால்

"இன்று உலப்பினும், நாளையே உலப்பினும் சிலநாள்
சென்று உலாப்பினும்—நினக்கு அன்றிப் பிறர்க்கு
என்றும் தீரான்"

என்று இராமனுடைய வீரம் விளங்கப் பேசுகிறான்.

தூதுசென்ற அங்கதன் இராவணனைக் கண்டதும், அவன் முடிவுக்கு

"இராமன் கையில் வில் உண்டேல்
உண்டு; வேறு எதிர் உண்டோ?"

என்று எண்ணி, இராமன் வீரம் விளங்க எண்ணுகிறான்.

கும்பகர்ணனுடன் தன் வலிஎல்லாம் கூட்டிப் பொருத அனுமான், தன்னால் அவனை மாய்க்க முடியாது என்று கண்டு

"சுந்தரத் தோளான் வாளி
பிளக்குமேல் பிளக்கும்"

என்று முடிவுகட்டி, இராமன் வீரத்தை விளக்கி நின்றான்.

உடல் வலியாலும் உள்ளத்து உயர்வாலும் அழகிய தோற்றத்தாலும் இராமன் பெருமிதத்தின் பேருருவாக விளங்கினான்,

சீதை

அரக்கர் கோட்டைக்குள் பெருங்காவலில் அல்லற்பட்டு வாழ்ந்த நிலையிலும், அனுமான் "என் தோள்மீது கடிதே ஏறு, யான் அக்கரையில் இருக்கும் இராமன்பால் எளிதாகக் கொண்டு சேர்த்து விடுகிறேன்" என்றபோது

ஆறும் ஐம்பொறி நீயும் ஓர் ஆண் ஆதி;*
கூறும் இவ்வுரு தீண்டுதல் கூடுமோ?

என்று தன் கொள்கையிற் பிறழாது பெருமிதங் காத்தாள்.

இராவணன் இறந்தபின் சீதையிடம் வந்த அனுமான்
"எனக்கு அளிக்கும் ஒருவரம்—எம்பிராட்டி,
உனக்குத் தீங்குசெய் அரக்கியர் பலரையும்
கணப்பொழுதினில் கொன்று சிதைத்து யான்
மனக்களிப்புறத் தந்தருள் என்றனன்.

இதற்குச் சீதை கூறிய மறுமொழி யாது?

என்ன தீமை இவர்கள் இயற்றினர்?*
மன்னவன் சொன்ன முறையில் நின்றனர்
எய்தவன் புறத்திருக்கப், பாய்ந்துள
வெய்ய அம்பினை, வில்லை நோவதோ?

என்று மிகமிகச் சாந்தமான நிலையில் பதில் உரைத்து; 'கடந்தவை தியவைகளைக் கருதேல்'' என அனுமானுக்கும் அறம் உரைக்கும் பெருமிதத்தள் ஆனாள்.

இலக்குவன்

இளமை முதல் இறுதி வரைக்கும் தியாகச் செம்மலாக விளங்கினான். ''கூடப் பிறந்தானும் உளன்'' என யாவரும் பாராட்ட இராமனைப் பிரியாது வாழ்ந்தான். ''சுமித்திரைச் சிங்கம்'' என்று கம்பர் பாராட்ட வீரத்தை விளக்கி நின்றான். இராவணனால்

''யானும், இந்திரனை வென்ற என்மகனும்,*
கானில் கரனை அழித்த இராமனும் அன்றி
இவனுக்கு நிகர் எவரும் இலர்: இவன்
ஒரு தனி!'' என்று பாராட்டப் பெற்ற பெருமித்தான்.

பரதன்

''ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ'' என்று குகனாலும்,

''எண்ணில் கோடி இராமர்களாயினும்
அண்ணல் நின் அருளுக்கு இணையாவரோ?''

என்று கோசலையாலும் பாராட்டப் பெற்ற பெருமிதத்தான்.

வாலி

எவராலும் வெல்ல முடியாத பெரு வலியுடையவன்; இறக்குந் தருணத்திலும் தன் அழிவுக்குக் காரணமான தம்பி சுக்கிரீவனுக்காகப் பரிந்து, இராமனை நோக்கி:—

ஓவிய உருவ, நாயேன் வேண்டுவ தொன்று
பூவியல் நறவம் மாந்திப் புந்திவேறுற்றுத் தம்பி
தீவினை இயற்று மேனும், எம்பிமேல்சிறி; என்பால்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல்வேண்டா

என்று வேண்டி நின்ற பெருமிதத்தான்.

கும்பகருணன்

அண்ணன் இராவணனுக்கு அஞ்சாது அறம் உரைத்தவன். "என்னை வென்றுளார் எனின், உன்னையும் வெல்வது உறுதி" என்று எடுத்துரைத்தவன். இறக்குந் தருணத்தில் தன் தம்பி வீடணனுக்காக இரங்கி, இராமனை நோக்கி:—

நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியன்றி;
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என் தம்பி:
வேதியா, இவன்உனக்கு அடைக்கலம், யான்வேண்டினேன்.
உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒரு பொழுதும்
எம்பி பிரியானாக அருளுதி, யான் வேண்டுகிறேன்

என்று வேண்டிய பெருமிதத்தான்.

திண்மை உண்மை கடமையுணர்ச்சி ஆற்றல் அறிவு அறம் நல்லொழுக்கங்கள் பலவும் திரண்ட ஒரு வடிவம் கும்பகர்ணன். அவன் பெருமிதத்தின் பேருரு

இந்திரசித்து

"வில்லாளரை எண்ணின், வீரற்குமுன் நிற்கும் வீரன்"
"எத்தேவரையும் முகங்கண்டறியாத ஈட்டான்"

வித்தையில் வல்லவன், விரகில் வல்லவன்.

"பெருநெறி பிடித்தொழுக வேண்டும்" என்று பாடினார் வள்ளலார். காவியம் முழுவதும் பெருநெறியே நிறுவி நின்றார் கம்பநாடர்: முதல் நூலொடு கம்பநாடகத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் கம்பர் எத்துணை நாகரிகமாக—உலகுக்கு எடுத்துக் காட்டாக--நயமாகச் செப்பஞ் செய்துள்ளார் என்பது நன்கு விளங்கும்: கம்பநாடகம் முற்றும் பெருமிதமாகவே நிறைந்தது. கம்பர் அரச குடும்பத்தில்

பிறந்தார், அரச காவியம் பாடினார், அரச பெருமிதத்தோடு நூல் யாத்து நின்றார். அவர் உள்ளம் பெரியது. அதை உணர்ந்து உய்தல் நம் கடன். நாம் "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என எண்ணிப் பெருமிதத்தில் நிலைப் போமாக!

பயிற்சி—2

1. தெழித்தனள் உரப்பினள்—
அம்பொன் மாலையால் குழித்தனள் நிலத்தை (பக்கம்)

2. கைக்கொடு கைத்தலம் புடைப்ப
"வந்தனென் வந்தனென்" என்னவந்தனன் (பக் 97)

3. குரங்கு வார்த்தையும் மானுடர் கொற்றமும்
இருக்க! நிற்க! நீ என் அடா. என் புரத்தினுட்புகுந்தவன்
அரக்கரைக் கொன்றது? (பக் 102)

4. "கண்டனம் ஒருபுடை நின்று" (பக் 108)

5. "ஓவிய உருவ, நாயேன் வேண்டுவது ஒன்று—"(பக் 122)

6. நீரிடு துகிலர்

இவற்றின் பொருள் வெளிப்பட நடித்துப் பார்மின்; (1) வெறுப்பு. (2, 3) வீரம். (4, 6) அச்சம் (5) இரக்கம்—இச்சுவை தோன்ற மெய்ப்பாடுமிளிரல் வேண்டும். உணர்ச்சித் திறனால் இவற்றை வெளிப்படுத்த முடியும். முயன்று பார்க்கவும்.

9. இளிவரல்

மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே (தொல்காப்பியம்)

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை இந்நான்கு காரணங்களால் இளிவரல் பிறக்கும் என உரையாசிரியர் கூற்று. இளிவரல்—பொருள் யாது? இழிவு உணர்ச்சி—குறைபாடு—அதனால் வெறுப்பு உணர்வு—இகழ்ச்சி நிலை இவை இதன் பொருளாம். மென்மை என்பது குறைவுபடல், நலிதல், முந்தியநிலையினும் தாழ்வுறுதல்—அடியார்க்கு நல்லார்,

இடுங்கியகண், எயிறுபுறம் போதல், ஒடுங்கிய முகம், உறுதியிலாக் கால்நடை, சோர்ந்த உடல், சொல் தளர்ச்சி இவை இளிவரலின் மெய்ப்பாடாகக் கூறுவர்.

இதனை விளக்காது, யாம் கம்பநாடகத்துக்குச் செல்வோம்

9—(1)

தசரத மன்னர் அவைகூட்டி அமைச்சர், குருக்களைப். பார்த்து

அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டனென்*
பிறிதொரு குறையில்லை. என்பின் வையகம்
முறைசெய ஒருமகவு இன்மை வருத்துமால்

என்று மகப்பேறில்லாக் குறையை கூறுவதும், தன் முதுமையைச் சுட்டுவதும் இளிவரலே ஆகும்.

"விரும்பிய மூப்பு எனும் வீடு கண்டயான்
அரும்பொறை இனிச்சிறிது ஆற்றகில்லேனால்

என்று மூப்பு பற்றிய வருத்தத்தை அறிவித்து, இதுகாறும் ஆண்ட நாட்டை இன்னும் ஆள நினைப்பது "உண்டமுன் எச்சிலை உண்பது ஒக்குமே," என்று கூறி நிற்பதும்: பின்னர் இராமனை அழைத்து

"ஐய, சாலவும் அலசினன். அரும்பெரு மூப்பும்
வெய்யதாகியது. வியன்பெரு ஆட்சியை விட்டு
உய்நெறிபுக நீ உதவிடல் வேண்டும்" என்று கூறுவதும்

மூப்பு, மென்மை பற்றி வந்த இனிவரலே.

9–(2)

"ஒருமா முனிவன், மனையாள்: கண்ஒளி உடையார்
அல்லர்,"
திருமாமகனே துணையாய்த் தவமே செய்து தளர்வார்.

இது தசரதனால் கொல்லப்பட்ட சுரோசனன் பெற்றோர் நிலை, மூப்பு,—கண் தெரியாது,—கால்நடக்காது.—பையன் அவர்களைத் தூக்கிச் செல்ல வேண்டிய நிலையில் வாழ்ந்தார்கள்— இளிவரல்

9–(3)

சூர்ப்பநகையின் மூக்கு முலைகளை அரிந்து விட்டான்; அவ்வாறே அயோமுகியும் அரிபப்பட்டாள். இராமபாணத்தால் கும்பகருணன் மூக்கிழந்து கிடந்தான். இந்த முகங்களை நோக்கின் கண்தோண்டி எடுக்கப்பெற்ற நுங்குக் கூந்தல் மாதிரி விகாரமாயிருக்கும். இஃது பெரிய இளிவரல்

போக்கினீர் என் நாசி, போயின் என்? பொறுப்பீரேல்;
ஆக்குவன் ஓர் நொடிப்பொழுதில்; அழகு அமைவன்!
(சூர்ப்ப நகைப்படலம்)

கும்பகர்ணன்

மற்றெலாம் நிற்க...... கொற்ற நீதியும் மானமும்......
பெற்ற நுங்களால் தன்பெருஞ்செவி மூக்கோடும்
அற்ற எங்கைபோல் என்முகம் காட்டிநின்று
ஆற்றலென் உயிர் அம்மா!

நோக்கிழந்தனர்.....
வாக்கிழந்ததென்று அயர்வுறுவேன் செவியோடு
மாற்றாரால்
மூக்கு இழந்தபின் மீள்தல் என்றால் அது முடியுமோ?
உங்கள்தோள்...... வானவர் நகை செய்யச்
செங்கை தாங்கிய சிரத்தொடும், கண்ணினீர்
குருதியொடு தேக்கி
எங்கைபோல் எடுத்து அழைத்து யான் வீழ்வெனே?
இராவணன் எதிர் அம்மா (கும்பகருணன் வதை)

தசரத மன்னர்

கந்து கொல்யானைக் களிமன்னர்*
முந்துற வந்து வணங்கு தாளான்
வந்துறும் நன்மை என்று எண்ணி
பைந்தொடி காலின் பணிந்தனனால்

''எனக்கு என்மனை வாழும் பெண்ணால் வந்தது அந்தரம் என்னப் பெறுவேனோ'' எனக்கிடந்து இரங்குகின்றான். இது போன்றே, ஊடலினும் பணிந்தறியா இராவணன் சீதை முன் நின்று

''சுமை உடைக் காம வெந்நோய்
துடைத்திரேல், தொழுது வாழ்வேன்''

என்று நிலத்தில் விழுந்து வணங்குகிறான். இவை யாவும் இரங்கத் தக்க இளிவரலே.

9—(7)

மலையில் ஒரு குருவி மூட்டியது போல இராவணன் மீது சுக்கிரீவன் சாடினான். இராவணன் இவனைப் பற்றிப் பிடித்து மார்போடு இறுக்கி அமுக்கி நசுக்கிக் குற்றுயிர் ஆக்கி விட்டான். அவன் கை கால்கள் நீள, முகம் வலித்துச் சுழிக்க, உடல் துடிக்க, அவன் அல்லற்பட்ட காட்சி பெரிய இளிவரல். பின்னர் தப்பி ஓடிவந்து இராமன் முன் தலை தாழ்த்து வெட்கி நின்றான்; வானர அரசன் மானம் இழந்த ஒருவன் ஆயினான்: நல்ல இளிவரல், மானக் கேட்டால் உற்றது.

''தன் தனி நாணால்...... கொலை வெஞ்சீயம்
நின்றென, எருத்தம் கோட்டி நிலனுற நோக்கி
நின்றான்'' வீராப்பு ஒழிந்தது, இளிவரல் பிறந்தது.

(மகுடபங்கப்படலம்)

இவ்வாறே சுக்கிரீவன் கும்பகருணனுடன் போர் செய்யத் துணிந்தபோதும் அரக்கன் குரக்கனை அமுக்கிப் பிடித்து அழுத்தி நைத்து எலும்பு முறியக் குத்தினான்.

''பொறுக்கிலாவகை நெடும் புயங்களால் பிணித்து
இறுக்கினான், இவன் சிறிது உணர்வே எஞ்சினான்.''
''எழும் கதிர் இரவிதன் புதல்வன், இராகுவாய்
விழுங்கிய மதி என மெலிந்து தோன்றினான்.

கும்பகர்ணன் பிடிப்பிலிருந்து தப்பி இராமனிடம் வந்த சுக்கிரீவன் வெட்கிக்,

''கண்டனன் நாயகன் தன்னை: கண்ணுறா
தண்டலில் மானமும் நாணும் தாங்கினான்''

உணர்ச்சி தோன்ற நடித்து நில்லுங்கள். இளிவரலை விளக்குங்கள்

(கும்பகருணன் வதை)

9—(8)

"மலைகுவன், வாங்கிடு இத்தனுவை" என்று வீரம் பேசி வந்தான் பரசுராமன். இராமன் வில்லை வாங்கி எளிதாக வளைக்கக் கண்ட பரசுராமன் இஞ்சி தின்ற ஒன்று போல் இழிமுகங்காட்டி நின்று, அங்கு நிற்கவும் துணியானாய் அப்பால் அகன்று போனான். அவ்வாறே வீர இராவணன் முதல் நாள் போரில் தோற்ற போது ஆயுதம் எல்லாம் இழந்து, ஆலம் விழுது போல் கைகளைத் தொங்க விட்டு "வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்."

"தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்க; தான் அப்
பூதலம் என்னும் மாது தன்னையே நோக்கிப்
போந்தான்"

9—(10)

இராமனும் இளிவரற்கு உள்ளானான். மனைவியைப் பிறன் ஒருவன் வௌவிச் சென்றான் என்ற வசை ஏற்படு மாயின் இழிவு உணர்ச்சி ஏற்படுவது இயல்பே.

புகழ்புரிந்தஇில் இல்லோர்க்கு இல்லை: இகழ்வார் முன்
ஏறுபோல் பீடுநடை. —(குறள்)

இல்லறம் பிழைத்தோம் என்று அல்லற் பட்டான், சனகனிடம் எப்படி முகங்காட்டுவேன்? எனப் பன்முறை நொந்து நின்றான்.

"இல் இயல்புடைய நீர் அளித்த இன்சொல்லின்
வல்லி அவ்வரக்கர்தம் மனையுளாள்" எனச்
சொல்லி, யான் மலையெனச் சுமந்த தூணியன்
வில்லினன் செல்வனோ மிதிலை வேந்தன் பால்
(கவந்தப்படலம்)

இந்திரசித்தின் பிரமாத்திரத்தால் இலக்குவன் மூர்ச்சை யிழந்தான்போற் கிடந்தபோது' என் வில்லாற்பய னென்னை? தம்பியைக் காப்பாற்றா வில் எற்றுக்கு?

வேலைப் பள்ளக் குண்டுஅகழிக்கும், விராதற்கும்,
காலிற்செல்லும் காகமணிக்கும், கரனுக்கும்,
மூலப் பொத்தல் செத்த மரம்ஏழ் முதலுக்கும்,
வாலிக்கும்மோ ஆயது என்வில் வலி! அம்மா!

என்று ஏங்கி இரங்கினான். இரவு பகல் போலப், பொலிவும் இழிவும் பெரியோர் சிறியோர் யாவரிடத்தும் நேரும் போலும்! இடங்கண்டு தரம் வேறுபடலாம், உணர்வு துய்ப்பு பொது!

9—(11)

வீர இராவணன் முதல் நாள் போரில் தோற்று நகருக்குத் திரும்புகிறான். தோல்வியால் அவன் உற்ற இழிவைக் கம்பர் அழகிய செய்யுளால் விளக்குகிறார். அதை உணர்ந்து அபிநயிப்பதுஅறிஞர் கடன்

மாதிரம் எவையும் நோக்கான்
    வளநகர் தன்னை நோக்கான்
காதலர் தம்மை நோக்கான்
    கடற்பெருஞ்சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தல் மாதர்
    தனித்தனி நோக்க; தான்அப்
பூதலம் என்னும் மாது
    தன்னையே நோக்கிப் போந்தான்

எவ்வாறு? "தூக்கிய கரங்களோடு"

"—நளினம் அன்ன முகத்தியர் நயனம் எல்லாம்
    வாள் ஒத்த—"

சிறந்த இளிவரல்! உணர்ந்து தெளிதல் வேண்டும்.

10. சமநிலை

தொல்-ஆசிரியர் ''எட்டே மெய்ப்பாடு என்ப'' என எட்டுச் சுவைகளாகவே வகுத்தார். சமநிலை பற்றிக் கூறினா ரல்லர். பிற்காலத்தில் வடமொழி வழக்குத் தழுவி நவரசம் ஆக; உரையாசிரியர்களும் ''நடுவு நிலை'' ஒன்று சேர்த்து, ஒன்பான் சுவை ஆக்கினார்கள். அடியார்க்கு நல்லார் இதன் மெய்ப்பாடாகக் கூறுவது:— கோட்பாடு இல்லாமை, மறந்தரு நெஞ்சம், மாறியவிழி, துணுக்கமில்லாநிலை, தண்ணென இருத்தல், அளத்தற்கு அருமை, அன்பொடு புணர்தல், கலங்கிய நோக்கு, கதிர்ப்பு. காய்தல் உவத்தல்—இசை வசை—இன்பம் துன்பம் எனக்காணாது, இயக்க மற்ற நிலையில் இருப்பதே சமநிலை. உலகம் உயிர் இருப்பை விளக்கி ஊக்கமுற ஆங்கு உயர்வுதாழ்வு—பிறப்பு இறப்பு—ஏற்றம் இறக்கம்—சுகம் துக்கம்-வாழ்வு வீழ்வுகள் இருந்தே தீரும், இருத்தல் வேண்டும். திருவள்ளுவரின் ''இரப்பாரை இல்லாமாஞாலம்மரப்பாவைசென்று வந்தற்று'' என்றகருத்து இதனை நன்கு விளக்கி நிற்கும். மரப்பாவை நிலை உயிரற்ற செத்த நிலை: ஆகவே சமநிலை. என்பது சவநிலையாகும்: அது இன்பதுன்பங்கள் அற்ற, மெய்ப்பாட்டு ஒரு நிலையாம்; ஆயின் அதனை ஒரு சுவையாகக் கருதலாமோ? இலக்கணத்தில் பெயர்கள் ஐ ஆல் கு இன் உருபு சேர்த்துப் பொருளை வேறு படுத்தி நிற்பதை வேற்றுமை என்பர். ஆயின், உருபு சேராத தனிப்பெயர் வேற்றுமை இல்லை யாயினும் அதனை முதல் வேற்றுமை என்பர். பத்மாசனம்

பயிலாசனம் சர்வாங்காசனம் போன்ற கை கால் உடலை வளைத்துத் திரித்து நிற்பனவற்றை ஆசன முறைகள் என்பது சரியே; ஆயினும் ஒன்றும் புரியாது நெடுஞ்சாண் கிடையாய்க் கிடப்பதை 'ஆசனம் எனத் தகுமோ? அஃது "சவ ஆசனம்" என்று பெயர் பெறுகிறது. அம்முறையே ஒரு செய்ப்பாடும் இல்லாது வறிதே இருப்பது சமநிலைச்சுவை யாகிறது. கம்ப நாடகத்தில் இந்நிலை காண்டற்கரிது. ஏன்? கம்பநாடகம் உயிருள்ளது: ஆயினும் வலிந்து சில சான்றுகள் காண்போம்.

1. "வாங்கிடு இத் தனுவை" என்ற பரசுராமனின் வில்லை வாங்கி வளைத்தபோது இராமன் யாதும் தற் பெருமை கூறாமலும் அவனை இழித்துக் கூறாமலும் நின்று "யாது இதற்கு இலக்கம் ஆவது?" என்ற நிலை சம நிலையே.

2. தசரதர் இராமனிடம் "என்பாரத்தைக் குறைக்க உனக்கு முடிசூட்ட எண்ணுகிறேன், நீ இயைதல் வேண்டும்" என்றபோது, இராமன்

"காதல் உற்றிலன், இகழ்ந்திலன்; யாது கொற்றவன்
ஏவியது அது செயல் என் கடன்" என்று நின்றதும் சம நிலையே.

3. முடிபுனையும் கோலத்துடன் வரவேண்டிய இராமன் "கவரியின்றிக், கொற்ற வெண்குடையின்றி" வரக்கண்ட கோசலை "நெடுமுடி புனைதற்கு இடையூறுண்டோ?" என்றாள். இராமன் "உன் காதல் திருமகன் பங்கமில் குணத்து எம்பி பரதனே துங்க மாமுடி சூடுகின்றான்" என்றான். இது கேட்ட தாய் திடுக்கிடாமல் நிதானம் என்னும் சமநிலையில் நின்று

"முறைமை அன்று என்பது ஒன்று உண்டு, நின்னினும்
நிறைகுணத்தவன், நல்லன் பரதன்" என்றாள்.

4. பரதன் காட்டுக்கு வந்து இராமனிடத்தில், அரசு, நின்னதே, ஆள்க என்றனன். "மன்ன, போந்து நீ மகுடம் சூடு என்றான்." அப்போது மகிழ்ச்சி கொள்ளாமலும், பரதனைக் கடியாமலும் நடுநிலையில் நின்று இதமாகப் பேசி அனுப்பி வைத்ததும் சமநிலையே.

5. இராவணன் அவை கூட்டிய போது, யாவரும் துடித்து வீரியம் பேச; கும்பகருணன் "நீ அரச குலத்து ஒருவன், ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்தவன் என்று அண்ணன்பெருமைகளைப்பகர்ந்து,பின்னர் "உன்னைவிரும்பு மாதர் பலர் இருக்க, நீ பிறன் மாதை விரும்பி நிற்கின்றாய் பழியைநாடுகின்றாய். நான் தம்பி என்ற முறையில் உனக்கு இதம் உரைக்கின்றேன்" எனப் பெருமை சிறுமைகளை அமைதியாக எடுத்து உரைத்து நின்ற நிலையும் சம நிலையே.

6. பகைவர் இனத்தைச் சேர்ந்த வீடணன் புகல் அடைந்தபோது "பற்றுதல் அன்றி உண்டோ புகல் நம்மைப் பகர்கின்றானை?" என்று பகர்ந்து, மறுத்து நின்ற வானரர்க்கும் இதங்காட்டி, வீடணனுக்கும் நலம் புரிந்து, "குகன், சுக்கிரீவனோடு நீயும் வர, "நின்னொடும் எழுவர் ஆனோம்" என்று இயம்பி நின்ற நிலையும் சமநிலையே.

7. இராமன் இராவணனைக் கொன்று அயோத்திக்கு வந்து முடிசூடியபின்

"வரதனும் இளைஞர்க்கு ஆங்கண் மாமணி மகுடம் சூட்டிப்
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து நின்றான்."

இஃதும் சமநிலையே.

11. பக்திச்சுவை

சுவைகள் எட்டாகி, ஒன்பதாக வளர்ந்து நின்ற முறையினைக் கண்டோம். 1959ஆம் ஆண்டில், யாம் அதனைப் பத்துச் சுவையாகப் பெருக்கி, C.L.Sமூலம் ''பத்துச்சுவைகள்' என ஒரு நூல் வெளியிட்டோம். பக்திச் சுவையே பத்தாம் சுவையாகும். இது முந்திய ஒன்பான் சுவையினும் ஒட்டாததாகும். மெய் மறந்து தியானத்திருத்தல், கண்மூடி மௌனியாதல், நாமம் நவில்தல், கூடிப்பாடுதல், ஆடுதல், உருவ வழிபாடு, பூசனை, தூபதீப ஆராதனைகள், மலர் அர்ச்சித்தல், தவம் புரிதல், ஆலய வழிபாடு, வலம்வருதல், அடியார்களை ஓம்புதல், அருள்மொழி கேட்டல், படித்தல், கைகூப்பி வணங்குதல், வீழ்ந்து வணங்குதல், முழங்காலிடல் ஈதல் இவை பக்தியின் மெய்ப்பாடுகள் ஆகின்றன. இவற்றுக்குக் கம்ப நாடகத்தினின்று சில சான்றுகள் காண்பாம்.

11—(1)

தசரதர்க்காக உரோமபதன் கலைக்கோட்டு முனியை வேண்டுகிறான். எவ்வாறு?

''அன்ன முனிவரன் உறையுள் தனையணுகி
அடியினைத் தாமரைகள் அம்பொன்
மன்னுமணி முடிஅணிந்து, வரன்முறை செய்து—''

தசரதமன்னர் அயோத்தியில் கலைக்கோடரை வரவேற்ற முறை எவ்வாறு?

"பிதிர்ந்தது எம்மனத்துயர் என்று கொண்டு—
எதிர்த்தனன் ஓசனை இரண்டொடு ஒன்றுமே"
"இழிந்துபோய் இரதம்; ஆங்கு இணை கொள் தாள்களில்
விழுந்தனன் வேந்தர்தம் வேந்தன்—"

வேள்வி முடிந்தபின், தசரதர் முனிவர்க்கு உபசாரம் செய்த முறை:—

"இரலைநல் சிருங்கமா முனிவன் தாள் தொழா
உரிய பற்பல உரைபயிற்றி" உய்ந்தனென்
பெரிய நற்றவம் இனிப்பெறுவது யாது!
"எந்தைநின் அருளினால் இடரின் நீங்கியே
உய்ந்தனன் அடியனேன் என்றனன்—"

(திரு அவதாரப்படலம்)

11—(2)

தசரதர் அரண்மனைக்குக் கௌசிகர் வருகிறார். மன்னர் செய்த தென்னை?

"இந்திரன் எனக் கடிது எழுந்து அடிபணிந்தான்.
'பணிந்து, மணி குயிற்றிஒளிர் பைம்பொன்
அணிந்த தவிசிட்டு, அருத்தியோடு இருத்தி,
இணைந்த கமலச்சரண் அர்ச்சனை செய்து, இன்றே
துணிந்தது என் வினை தொடர்பு எனத்தொழுது—

"நிலம் செய்தவம் எனின் அன்று—என்
குலம் செய்வினை உண்டெனினும் அன்று—நீ, யான்
வலம் செய்து வணங்க எளிவந்த இது முந்துஎன்
குலம் செய்த தவம் என்றினிது கூறி—

(கையடைப்படலம்)

பக்திக்கு மெய்ப்பாடு இங்கு நன்கு விளக்கப்படுகிறது. எழுதல், வாழ்த்துதல் வணங்குதல், போற்றுதல் இவற்றை உன்னி உணரவேண்டும்.

11—(3)

கௌசிகர் இராமனை அழைத்துக் கொண்டு, மிதிலை யுள்புக்குச் சனகமன்னன் அரண்மனையை அடைந்தார்; அங்கிருந்த சதாநந்த முனிவரை இராமனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுது நேர்ந்த தென்னை?

"வந்து எதிர்ந்த முனிவனை வள்ளலும்*
சிந்தையார வணங்கலும்; சென்றுஅயல்
அந்தமில் குணத்தான் நெடிது ஆசிகள்
தந்து நின்றனன்

அடியார் கடமையும் ஆண்டான் கடமையும் இங்கு நனி விளக்கப் பெற்றன: இவன் தொழுகிறான். அவர் அருளு கிறார். பின்னர் அம்முனிவரை விட்டுப் பிரியும்போது

"வென்றி வீரர் வியப்பொடு உவந்து எழா
ஒன்றுமாதவன் தாள்தொழுது, ஓங்கிய
பின்றை ஏத்திப் பெயர்ந்தனர் தம்இடம்.

இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நிறைவேறிற்று.

பின்னர் நடந்த தென்னை? மணமக்கள் செய்ய வேண்டியது யாது?

"மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார்
முற்றிய மாதவர் தாள்முதல் சூடிக்;
கொற்றவனைக் கழல் கும்பிடலோடும்
பொற்றொடி கைபற்றிப் பொன்மனைபுக்கான்

கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கி;
ஆயதன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாள்தொழ லோடும்—
அன்னமும் அன்னவர் அம்பொன் மலர்த்தாள்
சென்னி புனைந்தனள், சிந்தை உவந்தாள்.

மணமக்கள் மாசுமறுவற்றவராய்த் தெய்வநிலையில் நின்று பக்தியுடன் பெற்றோரைப் பராவினர்.

11—(5)

இராமனுக்கு முடிசூட்ட அமைச்சர் குழுவிற் பேசி முடிவு கட்டினார் தசரதர். சேடியர் இச் செய்தியைக் கோசலைக்கு அறிவித்தனர். அறிவு மிக்ககோசலை ஆற்றியது என்னை; செய்தி கொண்டு வந்தவர்க்கு நற்பரிசில் நல்கி

''துன்னு காதல் சுமித்திரையோடும்
மின்னும் நேமியன் கோவிலை மேவினாள்

''மேவி
தேவிமாரொடும், தேவர் யாவரின்
வாவி மாமலர்ப் பாதம் வணங்கினாள்

''என் வயின் வந்த மைந்தற்கு, இனி அருள்
உன் வயத்தது என்றாள்—''

இன்பத்திலும் தெய்வத்தை மறவாது ஆலயம் சென்று போற்றி நின்றாள் கோசலை; இராமன் காட்டுக்குப் புறப் பட்டதும் கோசலை கூறிய தென்னை?

"ஏத்தினார்—தம் மகனை; மருகியை
வாழ்த்தினார், இளையோனை வழுத்தினார்
காத்து நல்குமின் தெய்வதங்கதாள், என்றார்''

இன்பத்திலும் துன்பத்திலும் எண்ணத்தில் உறவேண்டியது இறைவன் மீதுள்ள பற்று.

உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும்
பண்ணும் கருமம் பலஆம் பொழுதும்
எண்ணம் பலஉள் எழும்அப் பொழுதும்
அண்ணல் பெயர் தான் அதனோடு எழவே

என அடியார் ஒருவர் பாடியது ஒப்ப, யாண்டும் எந்நேரத்தும் தெய்வத்தைப் பற்றி நினைக்கக் கம்பர் ஆங்காங்கு குறிப்பிடுகிறார். நினைப்பே பக்தி.

11—(6)

கோவிலுக்குச் செல்லும் அடியார்கள் பக்தியின் சின்னமாகத் தேங்காய் பழம் பூ வாசனைப் பொருட்கள் கொண்டு செல்வர்: காலணிகள் இன்றிக் குனிந்து—விழுந்து கை கூப்பி வணங்குவர், உருவத்தை நோக்கி மெய்ம்மறந்து நிற்பர். இத்தகைய பக்தி குகனுடைய பக்தி—பெரும் பக்தி!

''சுற்றம் அப்புறம்—நிற்க: கணை, வில்துறந்து – வீக்கி
வாளை நீக்கிப் பள்ளிவாயிலை நண்ணினான்''
''கண்ணனை நோக்கிக் கனிந்தனன். இருண்டகுஞ்சி
மண்ணுறப் பணிந்து, மேனிவளைத்து, வாய்புதைத்து
நின்றான்''

''இருத்தியீண்டு என்னலோடும், இருந்திலன்
அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு இசைவதாகத்
திருத்தினென் கொணர்ந்தேன்; என்கொல் திருவுள்ளம்'
என்றான்'?

''நீ சென்று நாளை நாவாயொடும் வா'' என்று இராமன் கூற;

கார்குலாம் மேனிஐய, உன்னை நேர்பார்த்த கண்கள் *
வேறுஅயல், விலக்கற் கில்லேன்; விலகியான் வருந்திச்
சொந்த
ஊரினை நோக்கற் கில்லேன். உடனிருந்து உன்பணிகள்
நேருற இயற்றி நிற்பேன் என்றனன் நலங்கள் மிக்கோன்

இது குகனுடைய பக்தி; இராமனுடன் ஒன்றி நிற்கிறான்.

11—(7)

இராமன் தண்டகவனத்தை யடைந்தான். அவனைக் கண்ட முனிவர்கள் நிலை என்னை? அவன் நிலை என்னை?

எழுந்தனர் எய்தினர் இருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றஅக் குரிசில் வீரனைப்
பொழிந்தெழு காதலின் புல்லினார்; அவன்
தொழுந்தொறும் தொழுந்தோறும் ஆசி சொல்லினர்
(அகத்தியப் படலம்)

பரத்துவாசரைக் கண்டதும் இராமன் செய்ததென்னை?

''அம்முனி வரலோடும், அழகனும் அவர்தூவி
மும்முறை தொழுதான்; அந்தமுனிவனும் எதிர்புல்லி—'

இங்கு அடியார்நிலை, அறவோர்நிலை மீண்டும் விளக்கப் பட்டுள்ளது. கம்பர் தம் நூல் முழுவதும் ஆசாரம் கற்பித்து மக்கட்கு நாடக உருவில் அறிவூட்டுகின்றார்.

அகத்தியர் இருப்பிடம் நோக்கி இராமன் வருகிறான்' நேர்ந்ததென்னை?

''ஆண்டகை அவ்வயின் அடைந்தமை அறிந்து—
மாண்ட வரதன் அடிவணங்க—எதிர் வந்தான்.
''போதுமணம் நாறுகுளிர் சோலை கொடுபுக்கான்—
''விருந்து அவன் அமைத்தபின் ...என்றான்
''என்ற முனியைத் தொழுது இராமன்—
''மேகநிற வண்ணனும் வணங்கி விடைகொண்டான்
(அகத்தியப் படலம்.)

11—(8)

இனி மற்றொரு வகை காண்போம். இராமன் சீதையைத் தேடிக் கிட்கிந்தைக்கு வந்தான். அங்கு மாணவ வடிவில்

நின்ற அனுமானைக் கண்டான். அனுமான் ''நுங்கள் வரவு நலமே ஆகுக'' என, இராமன்

*எவ்வழி, நீங்கியோய் நீ, நீயாவன்?'' என விளம்பினான். இதற்கு அனுமான் யாது பதில் கூற வேண்டும்?

''ஐய,யான் காற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன்*
வையத்தார் அனுமன் என்று வழங்குவார் எனது நாமம்''

இஃதே இராமன் வினாவுக்கு ஏற்ற விடை ஆகும். ஆனால் கம்பர் வாக்கில் அனுமான் கூறும் முறை என்னை?

''மஞ்செனத் திரண்ட கோல மேனிய, மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகைய ஆகி—நளிர் இரும்பனித் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண,யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன், நாமமும் அனுமன் என்பேன்''

முதலில் உற்ற 3 அடிகட்கும் அவசியம் யாது? விரிந்த வெற்றுரை என விளம்பலாமா? இல்லை இல்லை. செறிந்த கருத்துடன்கம்பர் அவ்வாறு கவி அமைத்தார். மேல் நோக்காகப் பார்ப்பின் இலக்கியச் சுவைக்காகச் சொல் வளம் பரப்பினார் கம்பர் எனத் தோன்றும்: அவை சொல் வளம், இலக்கியச் சுவைக்காக அமைந்த அடிகள் அல்ல. பின் எற்றுக்கு? பெரு நூல்கள் எழுதுதல் எதற்காக? குரக்கு மனம் நெறிப்பட்டுச் சிறப்படைவதற்காக. கட்குடி, காமம், களவு கொலை பொய்யுரை போன்ற தீய வழிகளை விட்டு விலகி, நேர் நெறியில் ஒழுகி அறிவு பெற்று, உள்ளத்தில் அமைதி காண்பதற்காக. அமைதி பெறுவதற்குப் பக்தி நெறியே சாலச்

சிறந்தது: இந்த உண்மை தெரிந்தே பக்தியைப் பரப்பக் கம்பர் அரச குமரர்களையும் குரக்கினத்தையும் தெய்வ மாக்கிக் கதை படைத்தார்: தம் படைப்புக்கு ஏற்ற முறையில் —தம் கருத்து நிறைவேற—படிப்பாரிடம் பக்தி பிறக்க— ஆங்காங்கு கதையின் நாயகனை வளம்படப் பாடித் தெய்வீக உணர்ச்சி பிறக்க வைக்கிறார். "மஞ்செனத் திரண்ட கோல மேனிய"—இப்பாடலைப் படிக்கும் போது அறிவாளியின் உள்ளம் குளிர்வுறும்: கம்பர் தம் கவியினால் நம்மை மேலேற்றுகிறார்: மக்கள் மனத்தை ஒருநிலை உயர்த்தி நிற்பதே சிறந்த இலக்கியம். கம்பர் கருத்து இத் தகைய கவிகளால் பக்தி பிறக்கச் செய்து நம்மைப் பண் படுத்துவதே. பின்னர் அனுமான் சென்று சுக்கிரீவனை அழைத்து வருகிறான். சுக்கிரீவன் இராமனைக் கண்ணுற்ற காட்சியைக் கம்பர் எவ்வாறு விளக்குகிறார்?

"கண்டனன் என்ப மன்னோ கதிரவன் சிறுவன்; காமர்
குண்டலம் துறந்த கோல வதனமும், குளிர்க்கும்
கண்ணும்,
புண்டரி கங்கள் பூத்துப், புயல்தழீஇ, பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம் செய்த மரகதக்கிரி அன்னானை
(மராமரப் படலம்)

செய்யுள், தோகை கட்டிப் பறக்கிறது; தமிழ் தவழ்கிறது, உள்ளம் குளிர்கிறது; தெய்வம் உய்கிறது. இது நிற்க—

அரக்கரிற் பெரியனாகிய கும்பகருணன் பொருது அனுமான் சுக்கிரீவன் இலக்குவன் யாவரினும் வலியனாகத் தன்னை விளக்கினான். இராமன் அவனை எதிர்க்க எதிரில் வந்தான். கும்பகர்ணன் அவனைக் கண்ணுற்றான். இதற்குக் கவி நாட்ட வேண்டிய முறை யாது?

"மனைவியைப் பிரிந்து உள்ளம் மானத்தால் நையப் பெற்றான்
முனைப்புடன் பொருதல் வேண்டி முன்னுற வருதல் கண்டான்"

இவ்வாறு பாடினால் அது முறைமை. ஆனால் கம்பர் இராமனைக் கும்பகர்ணன் கண்ணுற்ற காட்சியை எவ்வாறு விளக்குகிறார்?

"கண்டனன்—வதனம் வாய் கண் கை கால் என்னப்
புண்டரீகத் தடம்பூத்து; பொன்சிலை*
மண்டலத் தொடர்ந்து, மண்வயங்க வந்ததோர்
கொண்டலிற் பொலிதரு கோலத்தான் தனை.
(கும்பகருணன் வதை

இப்போது ஐயமின்றி உணரலாம். கற்கும் அன்பர்கள் உள்ளம் கசிந்து உருகித் தெய்வ உணர்ச்சி பெறக் கம்பர் வித்திடுகிறார். அவர் கவியில் தெய்வீகம் படிந்துள்ளது. இம்மட்டோ?

வாலியை—மறைந்திருந்து அம்பு எய்து வீழ்த்தி விட்டான் இராமன். "மார்பில் தைத்த அம்பு யாருடையது? இத்துணை வலியவன் யாவன், பார்ப்போம்" என்ற அவாவினால் அம்பை உருவிப் பார்த்தான். அங்கு "இராமன்" என்னும் பெயர் இருக்கக் கண்டான். இதற்கு எவ்வாறு கவி நிறுவுவது?

"என்னையும் வீழ்த்தத் தக்க வலியவன் யாவன்! இன்னே
அன்னவன் நாமம் காண்பல்" என்று கைவிசைத்து அம்பை
முன்னுறப் பிடுங்கி நோக்க; இராமப்பேர் வதிதல் கண்டு
பின்னுற முகஞ்சுழித்துப் பிற பல எண்ணலானான்"*

இவ்வாறு பாடினால் போதுமானது. ஆனால் கம்பர் கவி எவ்வாறு? அது நம்மைப் பக்தி உலகிற் செலுத்துகிறது, படிக்கும் உள்ளத்தை உயர்த்துகிறது.

மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தை-முற்றும்
தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும் பதத்தை—தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை—இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்.
(வாலிவதை)

எத்துணை வளமான வாக்கு! நம்மை எத்துணை உயர்த்தி நிற்கிறார்! இதனாற்றான் கம்பர் அழியா வாழ்வு பெற்று உய்கிறார். இப்பாடல்கள் பக்திச் சுவை ஊட்டுவது மட்டுமன்று, நாடக ஒப்பனையில் இராமன் எவ்வாறு குளிர்முகத்தனாகச் காட்சியளிக்க வேண்டும் என்றும் அறிவிக்கின்றன. இதனை விட்டு, அடுத்த ஒன்றுக்கு வருவோம்.

11—(9)

வீடணனுக்கு அடைக்கலம் அளிப்பது உறுதியாகிச் சுக்ரீவன் சென்று அவனை அழைத்து வருகிறான் வீடணன் பரம பக்தனாக வருகிறான். இராமன் ஆண்டானாக இருந்து. அபயகரம் காட்டி அவனை ஏற்பதாகக் குறிப்பிடுகிறான். பக்திக்குச் சிறந்த மெய்ப்பாடு இங்கு மிளிர்கிறது.

கரங்கள் மீச்சுமந்து செல்லும் கதிர்மணி முடியன்; கல்லும்
மரங்களும் உருக நோக்கும் காதலன்; கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந் தோறும் இருநிலத்து இறைஞ்சுகின்றான்;
வரங்களின் வாரி அன்ன தாள்இணை வந்து வீழ்ந்தான்
(வீடணன் அடைக்கலம்)

தெருவில் நின்றே தலைமேல் கைதூக்கிக் கும்பிட்டுக் கோவிலுக்குள் செல்லும் பக்தன் போல் வீடணன் செல்கிறான். இராமன் ஆசனத்திலிருந்து நோக்கி அபய கரங் காட்டி ஏற்றியும் இறக்கியும் கருணை காட்ட; கை அசைவு முறை ஏறி இறங்கும் ஒவ்வொரு தரமும் வீடணன் குனிந்து நிமிர்ந்து—குனிந்து நடந்து வந்து இராமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகிறான். கைகள் தலைக்கு மேல் குவிவதும், தரையில் வீழ்ந்து வணங்கலுமே பக்தியின் சிறந்த மெய்ப்பாடு.

இதற்குப் பிறிதொரு சான்று தருவோம். இலக்குவன் இராமனுக்கு அடியானாக உழைத்து நின்றான். பரதனோ இராம பக்தனாகப் பராவி நின்றான். காட்டிலிருக்கும் அண்ணனை நாட்டுக்கு அழைக்கத் தம்பி பரதன் வரும் காட்சி எவ்வாறு?

"தொழுதுஉயர் கையினன், துவண்ட மேனியன்
அழுது அழி கண்ணினன், அவலம் ஈதென
எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை—
முழுதுணர் சிந்தையான் இராமன் நோக்கினான்
(கிளைகண்டு நீங்குபடலம்)

குகன் பரதனைக் கண்டநிலை என்ன? பரதன் "திசை நோக்கித் தொழுகிறான்."

இராவணனை வதைத்தபின் இராமன் சீதையுடன் அயோத்தி வந்து சேர்ந்தான். பரதன் இராமனை வரவேற்ற முறை எவ்வாறு?

"சேவடி இரண்டும் அன்பும் கையுறையாகச் சேர்த்து,
பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி,

நாவிடை உரைப்ப தொன்றும் உணர்ந்திலன் நின்ற
நம்பி
ஆவியும் உடலும் ஒன்றத் தழுவினன் அழுது சோர்வான்!
(மீட்சிப்படலம்

பக்தியின் உச்சநிலை இது. பரதன் பரமபக்தன், பணிந்து கிடக்கிறான் இராமன். உளம் கசிந்து அருளி நிற்கிறான்.

''அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்?
ஆர்வலர் புண்கணீர் பூசல்தரும்.''

இங்கு மற்றொரு சுவையான நிகழ்ச்சியையும் குறிப்பிடல் வேண்டும். உணர்ந்து நடித்துத் திளைப்பார்க்கு அது உன்ன உன்ன இன்பம் பயக்கும். அயோத்திக்கு வந்த இராமன் தாயாருக்குச் செய்த மரியாதை எவ்வாறு?

''கைகயன் தனயை முந்தக் காலுறப்
பணிந்து, மற்றை
மொய்குழல் இருவர் தாளும் முறைமுறை
வணங்கி நின்றான்:
ஐயனை அவர்கள் தாமும் அன்புறத்
தழுவித், தத்தம்
செய்யதா மரைக்கண் ணீரால்
மஞ்சனத் தொழிலும் செய்தார்.
அன்னமும் முன்னர் சொன்ன
முறைமையின் அடியில் வீழ்ந்தாள்.

இச்செய்யுளை உணரும் போது, அன்பர்கள் கம்பர் பெருமானின் பெருந் திறனை எண்ணி எண்ணி வியக்க வேண்டும். என்ன வியப்பு என்று சற்றே ஆய்வோம்.

இராமன்''தாய் கையில் வளர்ந்திலன், வளர்த்தது கேகயன்மாமகள்'' என்றுஉலகம்கூறும்படிவளர்ந்து,அவளால்

அருமையாகப் பாராட்டப் பெற்றான். அதற்கு நன்றிக் கடனாகவே, திருமணம் ஆனதும்—பெற்றதாய் கோசலை அயலில் இருக்க-

"கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கி;
ஆயதன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாள்தொழு தானால்.

இது அவன் அன்பு காட்டிய அற்றை நாள் நிகழ்ச்சி.

முதல் வணக்கம் கைகேசிக்குக் கிடைத்தது. அவள் பின்னர் மனந்திரிந்து இராமனைக் காட்டுக்கு அனுப்பி மனைவியை இழக்கச் செய்தாள், பல அல்லலுக்கு உள்ளாக்கினாள், கணவன் மாயக் காரணமானாள், அரசியல் முறைமையைக் கெடுத்தாள். இற்றைநாள், இத்தீயாளுக்கு மரியாதைவேண்டுமோ?" ஒரு நன்றி செய்தாரை உள்ளத்தே நினைத்துப் பிழைநூறும் பொறுப்பர் பெரியோர்" என்பது பெரியோர் வாக்கு.

"நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது
அன்றே மறந்து விடல்"
"இன்னா செய்தாரை ஒறுத்தல். அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

என்ற வள்ளுவர் நெறியில் நின்றான் இராமன். நிலைாயிற்றிரியாது" பண்டுபோல் இன்றும் கைகேசிக்கு முதல் வணக்கம் அவன் செலுத்தினான். அதனால் மலைபோல் ஒளிர்கிறான்; இடையில் உற்ற இன்னல்களை மறந்தவனாக—பண்பாடு கருதியவனாய் — ஒழுக்கநெறி கடைப்பிடித்தான்.

"ஊழி பெயரினும் தாம்பெயரார்—சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்!" — இந்நெறியில் இராமன் ஒழுகலானான். நாடகம் எதற்காக? அறிவு பெற. அறிவு எதற்காக?

ஒழுக்கமுற. ஒழுக்கம் எதற்காக? அமைதி, நல்வாழ்வு உற: ஆதலின் இங்கு நாடகக்கலை அறிவுக் கலையாக மாறி நின்றது.

பாலகாண்ட இறுதியில் கடிமணப்படலத்தில் "இராமன் கைகேசியை முதலில் தொழுதான் என்று கவிபாடிய கம்பர், அதற்கு அப்பால் அயோத்யாகாண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்ட முடிவில் ஏறக்குறைய 9500 பாடல்களுக்குப் பின்னும் கோப்பு விடாமல் அக்கருத்தை அறிவித்து நமக்கு நீதி புகட்டு கிறார். இஃது அவர் இயல்பு, மரபு!

11–(ii)

ஒரு புதுநாடகம்: அதனை விளக்க ஒரு சிறுகதை: மருதூர் என ஒரு சிற்றூர். ஒரே குடும்பத்து நூற்றுவர் அங்கு வாழ்ந்து வந்தனர். ஊருக்குள் ஒரு கோயில் நிறுவப்பட்டு, அவர்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்தது. கோவிலில் பூசனை முடிந்ததும் திருநீறு, வெற்றிலை பாக்கு, பழம் தேங்காய், பொங்கல் முதலியன அர்ச்சகர் ஆங்குற்ற குடும்ப முதியோர்க்கு முதலில் வழங்கிப் பின்னர் ஏனையோர்க்கு வழங்குதல் மரபு. காலச் சுழற்சியில் சிலர் செல்வர்களாகவும் சிலர் வறியராகவும் மாற நேர்ந்தது. கோயிலில் ஒரு நாள் பூசனை நடக்கும் தருணத்தில் இளையர் செல்வர், சின்ன மணி என்பார் திடீர் என அங்கு வந்தார். கூட்டத்தார் அவரைச் சிறப்பித்து நின்றனர், அவர்க்கு முதலிடம் கொடுத் தனர். இது கண்ட முதியவர் மனம் புழுங்கி நின்றார். "என்ன நடக்கிறது பார்ப்போம்" என்று அவர் மனத்துள் ஆயிரம் அலைகள் மோதின. அர்ச்சகர் வெளி வந்து இளைய செல்வர் சின்னமணி கையில் முதல் பிரசாதம் நல்கினார். மரபு உடைந்தது. முதியவர் பெரியமணி மனம் உடைந்து தலை குனிந்து, அங்கு நில்லாமல் வெளியேறினார்.–இதனை ஒரு நாடகமாகக் காணுங்கள்.

கம்பர் இத்தகைய ஒரு நாடகம் நடத்துகின்றார். நாடகத்தால் நமக்கு நாகரிகம் அறிவு பண்பாடுகளைக் கற்பிக்கின்றார். இலங்கையிலிருந்து இராமன் மீண்டு வந்து அயோத்தியை யடைந்ததும் தாய்மார் மூவரையும் பக்தியுடன் தொழுதான் எனப் பார்த்தோம். அது இராமன் பெருங்குணம். இராமன் முதன் முதல் கைகேசி காலில் விழுகிறான். பின் கோசலை காலில், அதன் பின் சுமித்திரை காலில் விழுந்து வணங்குகிறான். இராமன் இவ்வாறு வணங்கும்போது, இலக்குவன் நிலை என்னை?

இலக்குவன் உள்ளம் வெதும்புகிறான், துடிக்கிறான், அடக்க மற்றவனாய், யாது செய்வதென அறியாதவனாய் மேலும் கீழும் பார்க்கிறான். அவன் மனத்துள் ஆயிரம் அலைகள் மோதுகின்றன. எவ்வாறு?

ஓசீ! இது என்ன! பாவி, சண்டாளி, பழிவளர்க்கும் செவிலி. நச்சுரு, நாட்டைக் கெடுத்தவள், அரச முறைமையை அழித்தவள், நல்லவர்க்குப் பொல்லாப்பு புரிபவள், கடு, இவள் காலடியிலோ விழுவது? இது யான் புரிய மாட்டேன். அண்ணன் நன்று தீது கருதாது நின்றால், யானும் நிற்பனோ? ஆதரிப்பதும் அடைக்கலம் அருள்தலும் அவருடன் இருக்கட்டும்: எனக்கு இது அடுக்காது. யான் இவளைத் தொழமாட்டேன். "தீயாரைக் காண்பதுவும் தீது அவரோடு இணங்கி இருப்பதுவும் தீது" எனக்கு இது ஆகாது!

"சரி, அண்ணன் தொழும் போது தம்பி தொழாது நின்றால், அது முறைகேடு அல்லவா? உள்ளம் ஒருப்படாவிடினும், ஒரு ஒப்பனைக்காக வறிதே மரம்போல் விழுந்து எழும்பினால் என்ன? பெற்ற தாயரும், பெரிய தாயரும் நிற்கிறார்களே, அவர்களை வணங்க வேண்டாவோ? அவர்கள் இருவரையும் வணங்கி, இக்கொடியாளை வணங்

காது விட்டால், அம்மையர் இருவரும் என்ன நினைப்பர்? தடியன் முரடன் அறிவற்றவன் என என்னை நொந்து பழிப்பரே. மூவர் இருக்கும் இடத்தில் ஒருவரைத் தனித்து இழி நிலைக்கு உள்ளாக்குவதும், இருவரைச் சிறப்பிப்பதும் முறை யன்றே. என்ன ஆயினும் சரி; யான் இக்கொடியாளைப் பணிந்து போற்ற மாட்டேன்: இது உறுதி. ஆ! ஒன்று செய் வேன்: மூவர்க்கும் சேர்த்து பொதுவாக ஒரு ஒப்பனை வணக்கம் செய்து, அப்பால் அகல்வேன், இதுதான் சரி இப்படியே செய்கிறேன்'' என்று அவ்வாறே ''வணக்கம்'' என்று அயல் நோக்கி விழ்ந்து வணங்கி அகன்றனன்.

''தன்நிகர் இலாத வென்றித் தம்பியும் தாயர் தங்கள்
பொன்னடி பணிந்து வீழ்ந்து — போயினன்''

இலக்குவனாக நின்று துடித்து நடித்துப் பார்மின்.

11—(12)

பக்தியின் மற்றொரு வகை மெய்ப்பாடு. சிலர் ஆலயத், தைக் கண்டதும் தொழுவர், வாயில் படியைத் தொழுவர் கொடி மரத்தைத் தொழுவர், நந்தியைத் தொழுவர். மணியைத் தொழுவர், தூணைத் தொழுவர், மரத்தைத் தொழுவர், மூலை மூலையாக நின்று தொழுவர், கோயில், மாடு, யானை, இன்னும் உள்ள யாவற்றையும் தொழுவர்; தொழுது யாதும் வாங்குவர், தொழுது அமர்வர், தொழுது எழுவர், தொழுது படுப்பர், தொழுது கொடுப்பர்—இத்தகைய ஒரு நாடகத்தைக் கம்பர் அனுமானைக் கொண்டு கற்பிக் கிறார்.

இராமனை முதன்முதற் கண்டு உறவு பெற்றதும்

''நின்ற அக்காலின் மைந்தன்
நெடிது உவந்து அடியில் வீழ்ந்தான்

சீதையைத் தேடுவதற்காக இலங்கையுள் அனுமான் புக வேண்டும். புகு முன் செய்தது யாது?

"வீரனும் விரும்பி நோக்கி......
ஆரியன் கமலபாதம் அகத்தினில் வணங்கி;
பூரியர் இலங்கை மூதூர்ப்பொன்மதில் தாவிப்புக்கான்.

அவ்வாறே, அசோகவனத்தில் தன்னை மாய்த்துக் கொள்ளத் துணிந்த சீதைமுன் அனுமான் முதலாகத் தோன்றிய போது—

"கண்டனன் அனுமனும்......
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினான்
(உருக்காட்டு படலம்

சீதை தன்னை அனுமான் பார்த்ததற்கு அடையாளமாகத் தனது சூடாமணியைக் கொடுக்க, அனுமான்

"தொழுது வாங்கினன், தூசினில் சுற்றினன்
பழுதுறாவகைப் பந்தனை செய்தனன்
அழுது மும்முறை வலம்வந்து இறைஞ்சினன்:
எழுது பாவையும் ஏத்தினள்; ஏகினன்

அனுமானை எதிர்க்க அட்ச குமாரன் வருகிறான். அவனைக் கண்டதும் "இவன் இராவணனோ, இந்திரசித்தோ? நம் எண்ணம் இன்று நிறைவேறிற்று" என்று இராமனை நினைத்துத் தொழுதான்.

"சுந்தரத் தோளை நோக்கி
இராமனைத் தொழுது சொன்னான்"

பக்தர்கள் தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஆண்டவனை நினைக்கின்றார்கள்.

அட்சகுமாரன் இறந்தபின், அனுமனைப்பற்ற இந்திரசித்து பெரும்படையுடன் வருகிறான். இதனைக் கண்ட அனுமான் செய்தது என்னை?

ஆய பெரும்படை வருவது கண்டு
மாயம் மிகுதிறல் வானர வீரன்
நாயகனைத் திசை நோக்கி வணங்கி,
மேயதோர் இன்பம் எய்தினன் நின்றான்.

இந்திரசித்து தன்பாசத்தால் அனுமனைப் பிணித்தான்; அனுமன் கருதியது யாது?

''எந்தையது அருளினும், இராமன் சேவடி
சிந்தை செய் நலத்தினும் — வானவர்
தந்துள வரத்தினும் — தறுகண் பாசம்
சிந்துவன் —

அனுமான் வாலில் துணியைச் சுற்றித் தீ வைத்து வெளி விட்டார்கள். அவன் யாது செய்தான்:—

''மன்னனை வாழ்த்திப் பின்னர் வயங்குஎரி மடுப்பன் என்னா;
பொன்நகர் மீதே தன்போர் வாலினைப் போக விட்டான்.

இலங்கையை எரித்து, அனுமான் மீள எண்ணினான். செய்தது என்னை?

''நீங்குவன் விரைவின் என்னா... வீரன்
பூங்கழல் தொழுது வாழ்த்தி விசும்பிடைக் கடிது போனான்.

கும்பகருணனும் அனுமானும் போரில் தலையிட்டனர். அனுமான் மலை ஒன்றை எடுத்து அவன் மீது வீசினான்; அஃது அவனை நன்கு தாக்கியது. அனுமன் மகிழ்ச்சி எவ்வாறு?

''...... குன்றம் ஒன்று நெற்றிமுற்றச்
செறித்தெனச் சுரிக்க வீசித், தீர்த்தனை வாழ்த்தி ஆர்த்தான்

இராவணனை வதைத்த பின் இராமன் சீதைக்கு அச் செய்தியை அறிவிக்க அனுமானை அனுப்பினான். அனுமான் சென்று அறிவித்த முறை எவ்வாறு?

"வணங்கி அந்தமில் மாருதி - மாமலர்
அணங்குசேர் கடி காவினை அண்மினான்
பாடினான் திருநாமங்கள், பன்முறை
கூடு சாரியின் குப்புற்றுக் கூத்து நின்று
ஆடி அங்கை இரண்டும் அலங்குறச்
சூடி நின்றனன்—

பக்தி பெருகி விட்டது, சுருக்குவோம். இராமனுக்கு முடி சூட்டுவிழா நடக்கிறது. அனுமான் பக்தியோடு இராமன் இருக்கும் ஆசனத்தின் அடியில் ஒட்டியிருக்கிறான்.

"அரியணை அனுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்த—"

முடிசூட்டு விழா முடிந்ததும் யாவரும் தத்தம் இடங்கட்குப் புறப்படுகின்றார். எவ்வாறு?

"பரதனை-இளைய கோவை-சத்துருக்கனனை-
பண்பார்
விரதமாதவனை-தாயர் மூவரை-மிதிலைப் பொன்னை-
வரதனை வலங்கொண்டு ஏத்தி வணங்கினர் விடையும்
கொண்டார்.

இவ்வாறு கம்பர் தம் நாடகத்தில் இலக்குவன் பரதன் சத்துருக்கன் வானரவீரர் மற்றும் யாவரும் இராமனை ஏத்திப் போற்றும் ஒரு பண்பாடு காட்டிப் பக்திச் சுவையை மெய்ப்பாடுகளுடன் நிறுவியுள்ளார்.

முடிசூட்டு விழாவில் இராமனும் சீதையும் இருந்த திரு ஒலக்கத்தை செழுந் தமிழில் தந்து, அக்காட்சி பெற்றார் பிறவிக் கடலைக் கடந்து நிற்பார் என்று பக்தியோடு ஒன்ற வைக்கிறார்.

மரகத சயிலம் செந்தா மரைமலர்க் காடு பூத்து,
திரைகெழு கங்கைவீசும் திவலையால் நனைந்து,செய்ய
இருகுழைதொடரும் வேல்கண் மயிலொடும் இருந்த
தேய்ப்ப;
பெருகிய செவ்விகண்டார் பிறப்பெனும் பிணிகள்
தீர்ந்தார்

(திருமுடிசூட்டுபடலம்)

பச்சைமாமலைபோல் மேனி, பவளவாய் கமலச்
செங்கண்
அச்சுதா, அமரர் ஏறே, ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர, யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா
நகருள்ளானே

என்று ஆழ்வார் மனமுருகிப் பாடிய நிலையில் கம்பர் இராமனை மனக்கண்ணில் நிலைக்க வைத்துத் துய்த்துப் பாடிய பாடல்கள் பல. அன்பர்கள் இவற்றை மனத்தில் உணர்ந்து உருக்கண்டு துய்க்க வேண்டுகிறேன். இன்னு - விராதன் வதைப்படலத்தில் "புறங்காண அகங்காண" முதலாக 12 பாடல்கள்; சரபங்கர் பிறப்பு நீங்குபடலத்தில் "துவசம் ஆர் தொல் அமருள்" முதலாக 6 பாடல்கள் அகத்தியப்படலத்தில் "விண்ணினில் நிலத்தினில்" முதலாக 4 பாடல்கள், கவந்தன் படலத்தில் "ஈன்றவனோ" முதலாக 9 பாடல்கள், இரணியன் வதைப்படலத்தில் 'அடியார் அடியேன்" முதலாக 10 பாடல்கள், யுத்தகாண்டக் காப்புச்செய்யுள், பாயிரத்து முதல் "உலகம் யாவையும்" ஆகிய 43 பாடல்களையும் கற்பார் வேதசாத்திரங்கள், அடி

யார்களின் வாக்குகள் பலவும் கூறும் தெய்வீக உண்மையை எளிதில் உணர்வார்கள்: யாவரும் கற்று உயர் இன்ப வாழ்வு எய்தக் கம்பன் வழிகாட்டி நிற்கின்றான்.

வாழ்க கம்பன் காவியம்!
வாழ்க நம் செந்தமிழகம்!
வாழ்க இம்மா பாரதம்!
வாழ்கவே இவ்வையகம்!

பயிற்சி 3

1. இரவியின் புதல்வன் இராகு விழுங்கிய மதியென (பக். 128)
2. தன்தனி நாணால்-எருத்தம் கோட்டி நிலனுற நோக்கி (பக்கம் 128)
3. கரங்கள்மேல் சுமந்து—இரங்கினன்
நோக்குந்தோறும் நிலத்து இறைஞ்சுகின்றன் (பக் 143)
4. தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன்—
பந்தனை செய்தனன்—வலம்வந்து இறைஞ்சினன்
ஏகினன் (பக் 150)

இவற்றை நடித்துப் பண்பாட்டை விளக்கக்கூடியவர் சிறந்த நடிகராகப் பொலிவுறுவர்.

12. நாடகக்கலை

ஆடல் பாடல்களுடன் மெய்ப்பாடு தோன்ற நடித்து அறிவு பிறக்கச் செய்வது நாடகக்கலை. நடிப்பு என்பது பிறப்பு இறப்பு இல்லாத ஒரு கலை என்று முதல் அதிகாரத்தில் விளக்கினோம். இக்கலை 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரைக் கூத்தாகவே இருந்தது. கூத்து குடி காமம் இவை யெல்லாம் ஒன்றை ஒன்று தழுவிநிற்பன. இதனால் மேன் மக்கள் இவற்றைப் பயின்றாரல்லர். சிலர் சில பாடல் பாடங்களைப் பயில்வதும் தெருச்சந்திகளில், அல்லது குறித்த ஓரிடத்தில் ஆடிக்காட்டுவதும் மரபாக இருந்துவந்தது. இந்நிலையை மாற்றி, இக்கலைக்கு ஒரு வரம்பு நியதிகள் காணவேண்டித் திரு. சங்கரதாசு அவர்கள் கதைகளை நெறிப்படுத்தி, அவற்றுக்குப் பாடல்களும் வகுத்தார்கள். அவர்கள் இயற்றிய முறையில் பின்னர் கதைகள் முறையே நடிக்கப்பெற்றன. முதன்முதல் தஞ்சையில் ஒருவர் ஒரு கூத்துக் கொட்டகை கட்டியதாகக் கூறுவர். தெருச் சந்தியில் ஆடிய கூத்தர்கள் பின்னர் கொட்டகை கட்டிய ''நாடக மேடை''களில் நடிக்கத் தொடங்கினர். தெருச் சுற்றிக் கூவி விற்கிற ஒருவன் சிறுகடை வைத்து அமர்ந்து வாணிகம் செய்தது போலும், குடியிருக்க இல்லம் இல்லா ஒருவன் ஒரு குடில் கட்டி வாழ்ந்தது போலும் கூத்து சிறிதளவு உயர்ந்த ஒரு நிலைகண்டது. கூத்தினால் பெயர் பரவுவதும் பணம் வருவதும் கண்டு, பின்னர் உயர்குலத்தார் சிலர் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொட்டகைகளில் நடிக்கத்

தொடங்கினர். இவர்களில் வைத்தியநாத ஐயர், கலியாண ராம ஐயர், T. S. பரமேசுர ஐயர் முக்கியமானவர் ஆவர். அதன்பின் இழிநிலை சிறிது மறையத் தொடங்கியது. "ஐயர் செய்வது ஆசாரம்" என்று கருதுவது அன்றும் இன்றும் தமிழ்நாட்டு இயல்பு.

கரிய மாலினும் கண்ணுத லானினும்
பெரியர் அந்தணர்..........
ஆவதற்கும் அழிவதற்கும் அவர்
ஏவ நிற்கும் விதியும்— (கம்பர் மந்தரை சூழ்ச்சி)

ஆயினும் குலமாதர் கொட்டகை ஏறினாரல்லர். யான் அறிந்த அளவில் பெண் வேடத்தில் T. S. பரமேசுர ஐயரே சிறந்த நடிகர். அக்காலத்தில் வள்ளி திருமணம் அல்லி யரசாணி பவழக்கொடி சதாரம் சாரங்கதாரா அபிமன்னன் குலேபகாவல்லி பிரகலாதன் துரௌபதை துயில்உரிதல் மஞ்சுகோசா லலிதாங்கி சத்தியவான் சாவித்திரி கோவலன் இந்திரசபா நல்லதங்காள் இராமாயணம் அரிச்சந்திர மயான காண்டம்—இப்படி ஏறக்குறைய 20 கதைகள் எல்லாக் குழுவினராலும் நடிக்கப்பெறும். "இன்ன நாடக சபா" என்ற பெயரில், பின்னர் பலபல குழுக்கள் தோன்றிப் பழைய கதைகளையே நடித்து வருவர்: இதனால் ஒருவரோடு ஒருவரை ஒப்பிட்டு உணர்ந்து, "இதை இவர் நன்கு நடிக்கிறார்" என்று திறத்தின் மிக்கவரைப் பாராட்ட முடிந்தது.

முற்கூறியவர்கள் காலத்தைத் தொடர்ந்து-பின்னர் ஆரிய கான சபா என்ற பெயரில் K. S. அநந்த நாராயண ஐயர் பெண் வேடத்திலும், அவர் தமையனார் K. S. செல்லப்பா ஐயர் ஆண் வேடத்திலும் நல்ல பேர் பெற்று நடித்து வந்தார்கள். அநந்தநாராயணர் அவர் காலத்தில் நிகரற்ற பெண்வேட நடிகர்; செல்லப்பா நிகரற்ற பாடகர். நாடக மேடையில் சங்கீதம் பொலிவுறச் செய்தவர் செல்லப்பா ஐயர் எனின் குற்றமாகாது. அவர் சுரஞானத்தோடு இசை

டயின்று—இராகம், கீதம், சுரம் யாவும் பாடி, ஆர்மோனியக் காரருடன் ஒரு இசல் நடந்தி மக்களின் ஓகை பெற்று ஏறாக விளங்கினார். ''காயாத கானகத்தில் நின்றுலாவும் நற் காரிகையே'' என்ற பாட்டை, அவர் பாடிய வழியிலேயே பின்னுற்ற யாவரும் பாடி வந்தனர்: ஆயினும் அவரிட மிருந்த உயிரோட்டம் பின்உற்ற எவரிடத்தும் இருந்த தில்லை. அவர் பொருள் தெரிந்து உணர்ச்சியுடன் வாயி னால் பாடி—கையினால் பாடி—கண்ணினால் பாடித் திளைத்து நிற்பார்—உடன் நிற்கும் வள்ளி பெண்பாலாயின், அக்காலத்தில் பெண் வேடமே சிறந்த பாராட்டுக்குரியதாக இருந்தது தலைவன் வேடம் ஒரு துணைமேளம் போன்றே கருதப்பட்டது. இந்நிலையை மாற்றித், தலைவனை யாவரும் கவனிக்கும்படியும் போற்றும்படியும் செய்த பெருமை—திரு சங்கரதாசு அவர்களின் தலைசிறந்த மாணவர் ராஜா. M. R. கோவிந்தசாமிக்கு உரியதாகும். (அவர் பற்றிக் ''கம்பர் கவித்திறனில்'' காண்க). இவர்களின் பிந்திய காலத்தில் ஞானசவுந்தரி டம்பாச்சாரி மார்க்கண்டன் ராமதாஸ் கபீர்தாஸ் கண்டிராசன் மனோகரன் கீசகவதை சகுந்தலா மனோன்மணி இவ்வாறு சில நடிக்கப் பெற்றன.

திரு. பம்மல் சம்பந்த முதலியார் படித்த மேன் மக்களு டன் குழுக்கண்டு நாடகம் ஆடி அக்கலைக்கு ஒரு திருப்பம் வகுத்தார். 19 5ஆம் ஆண்டு ஒப்பப் பல சபைகள் தோன்ற லாயின; பல பெரு நடிகர்கள் தோன்றினர்; பெண்களும் மேடையேறி நடிக்க முன்வந்தனர். பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பது பழமொழி. 3மணி நேரம் ஆடி, 300 ரூ. வாங்கிச் செல்வது அக்காலத்தில் நல்ல தேட் டாகத் தெரிந்ததால் பல பெண்கள் ஆட்டத் தொழிலை மேற்கொணடனர். S. R. கமலம், V. P. சானகி, T.P. ராச லட்சுமி, D.R. முத்துலட்சுமி, P. சாரதாம்பாள், P.S. ரத்தினா பாய்— P, S. சரசுவதிபாய், K. B. சுந்தராம்பாள் இன்ன

பலர் பாடி ஆடி நாடக மேடையை அலங்கரித்தனர். அக்காலத்தில் தலைவன்—தலைவி வேடம்பூண நல்ல இசை ஞானம் வேண்டும்! இன்றேல் குட்டி நடிகர்தாம். இசையில் வல்ல தலைவர்கட்கு ஆர்மோனியம் வாசித்துப் பெயர் நாட்டியவர்கள் மூவர்: 1. காதர்பாச்சா, 2. K. T. நடராச பிள்ளை, 3. K. S. தேவுடு ஐயர். தேவுடு யாவரினும் பெரும் பேர் பரப்பிச் சிறப்புடன் திகழ்ந்தார். நிலையான கதைகளை நடித்துவந்த மூத்த நடிகர்களில் மன்னார்குடி நடராச பிள்ளை யாவரும் போற்றும்படி அரச வேடத்தில் பொலிவுற்று விளங்கினார். திரு விசுவநாத தாசு தமது தேசிய கீதங்களால் பெரும்புகழ் ஈட்டினார்; S. G. கிட்டப்பா தமது ாரீர வளத்தால் யாவரினும் மேம்பட்டு நின்றார், S. V. சுப்பையா பாகவதர், M. K. தியாகராச பாகவதர் மகாலிங்கம், சிதம்பரம் செயராமன், P. U. சின்னப்பா முதலியோர் இசைவளத்தால் புகழ்ஈட்டி வந்தனர்.

கன்னையா கம்பெனி தோன்றியபின் நாடகமேடை பெருங்காட்சி மேடையாக மாறியது. இரண்டு தொங்கு விளக்கு (gaslight) வெளிச்சத்தில் ஆடியகாலம் மாறி, மின்சார உதவியால் நாடக மேடையும் கொட்டகையும் இந்திரன் அரண்மனைபோல் ஒளிரலாயின. நடிப்பினும் காட்சிகளே மக்கள் மனத்தைப் பெரிதும் ஈர்த்து நின்றன. கன்னையா கம்பெனி காட்சி ஒப்பனைபோல் அதற்கு முன்னும் கிடையாது, பின்னும்—1981வரைக் கிடையாது என்று உறுதியாகக் கூறலாம். நாடகம் கூத்தாக முளைத்து—இசை நீரால் வளர்ந்து— காட்சிகளால் தழைத்து, ஒலிஒளி நயத்தால் காய்த்துப் பழுத்து நிற்கிறது.

அல்லிபரமேசுர ஐயர், ஔவை சண்முகம், பதிபக்தி கேசவன், ரத்தக்கண்ணீர் ராதா என்று தனித்தனி நடிப்பால் பெயர் நிறுவினர் சிலர்; மதுரைப்பாலர் கம்பெனி, T. P. கிருட்ணசாமிப் பாவலர் குழு, ராஜாம்பாள் கம்பெனி

T. K. S. சோதரர், சகஸ்ரநாமம் சேவாஸ்டேஜ், ராஜ மாணிக்கம் கம்பெனி, பாலாமணி கம்பெனி, மனோகர் குழு சோ—இவ்வாறான பல குழுக்களைச் சேர்ந்து பேர் பெற்றார் சிலர். உணர்ந்து நடித்துத் தன் திறனால் பெயர் விளக்க முற்று நிற்பவர் சிவாஜிகணேசன். திரையிலாகட்டும்! மேடையிலாகட்டும், அவர் நடிப்பு அருமை! அருமை! காரணம் கதையின் இயல்பை உணர்ந்து, அதனை உள்ளத் தில் ஏற்றி, உன்னி விளக்கமுற நடிப்பதுதான். இவ்வாறு நடித்த தெலுங்கு நடிகர் சுதானம் நரசிம்மராவ்; பெண் வேடத்தில் அவருக்கு ஈடாகத் தமிழ்நாட்டில் நடித்தவர் எவருமிலர். வடக்கில் பிருதிவிராஜ், தெற்கில் சிவாஜி கணேசன் இருவரும் ஒப்பற்ற நடிகர் திலகங்கள். ஏனை யோர் குறைபட்டார் என நாம் கூறவில்லை: ஏனையோர் இயற்கையாக நடிக்கிறார்; இவர்கள் கலை முறையில் எடுத்துக்காட்டிப், பார்க்கிறவர் மனத்தில் கருத்து பதியுமாறு மெய்ப்பாடுகள் தோன்ற நடிக்கிறார்கள். இதனைச் சிறிது விளக்குவோம்.

ஒரு குளத்தில் ஒரு அன்னப்பறவை. அதனை ஒருவர் படம் எடுக்கிறார். படம் மெய் உருவாக அமைந்திருக்கிறது; அதனைப் போன்றது பிறர் நடிப்புமுறை. குளத்திலிருந்த அன்னத்தை ஒரு ஓவியக்கலைஞன் வரைந்தால், அல்லது ஒரு சிற்பி கல்லிலோ வெண்கலத்திலோ உருவாக்கினால்— அன்னத்துக்கு உச்சியில் கொண்டை உயரும், வாயில் துதிக்கை நீளும், சிறகுகள் வரிகள் புள்ளிகள் கொண்டு கவிந்து கோலம்பெறும்; வால் மாம்பழ வடிவில்அகன்று மேல் நோக்கி நிற்கும். இந்த அன்னமே மக்களின் மனத்தை ஈர்க்கும், குத்துவிளக்கில் உச்சியில் இடம்பெறும், மங்கலமாகப் போற்றப்பெறும். படம்பிடித்த அன்னத்தைப் பார்த்துக் களிப்பர் யாவர்? அது வாத்துபோல் காட்சியளிக்கும்; ஓவிய அன்னம் பரிமளிக்கும்; சிவாசியின் நடிப்பு ஓவிய அன்னம்,

காவிய அன்னம் போன்றது; ஏனையோர் நடிப்பு குளத்து அன்னம், படத்து அன்னம் போன்றது. இவ்வாறே காவி யங்களில் கம்பராமாயணம் ஓவிய அன்னம் ஒப்பதாகும்.

நடிப்புக் கலையை இருவகைப் படுத்தலாம். 1. நடை முறை 2. கலைமுறை. நடைமுறை என்பது உலகில் நடப்பதுபோல் மென்மையாக விளக்குவது, கலைமுறை என்பது மக்கள் மனம் நிறைவுறத்தக்க முறையில் அழகுற இனிமை தர அறிவு பெற எடுத்துக் காட்டுவது. இவற்றுள் இரண்டாவது வகையால் நிறைவுபெற்று விளங்குகிறார் நடிகர் திலகம் சிவாசிகணேசன். நடிப்பு உணர்ச்சியிலிருந்து பிறக்க வேண்டும்; அவ்வாறாயின் அது உயிர்பெற்று விளங்கும். ஒரு பாலசரசுவதியார் நடனத்தில் முகத்தில் தோன்றும் பாவனைகள் நடனக் குழந்தைகள் முகத்தில் காண முடிகிறதில்லை. காரணம் என்னை? அவர்கள் கருத் துணர்வு இன்றி, இதற்கு இவ்வாறு எனக்கையையும் காலை யும் ஆட்டி முகத்தைச் சுழித்துக் காட்டுகிறார்கள். கதக்களி கோபிநாத் தங்கமணியிடம் இருந்த உயிரோட்டம் அவரிடம் பயின்றாரிடமில்லை; காரணம், உள் உணர்ச்சியின்மையே: நிற்க.

கலை என்பது யாது? உலகியலை உள்ளபடியே அறிவிப்பது கலையன்று. இனிமையாக அறிவுக்கு விருந் தளிப்பதே கலை. "இனிமையோடு அறிவு தருவது கலையே' என ஒரு விதிகாணின் அஃதும் குற்றமன்று. நாடகம் நடனம் காவியம் யாவுமே கலைநயத்துடன் தோன்றுதல் வேண்டும். வாழ்க்கையில் யாண்டும் கலை பொலிவுறல் வேண்டும். இந்த நுட்பம் கணேசன்பால் இயற்கையில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரக் கோவலனாக—செக்கிழுக்கும் சிதம்பரமாக— கட்டப்பொம்முஆக— அப்பர் அடிகளாக— சாக்ரட்டீசாக— குட்ட நோயாளியாக—அரசனாக—புலவனாக—முதியோ னாக—இளைஞனாக—போர் வீரனாக—எந்த வேடம் பூண்

டாலும் கலை நயத்துடன் நடித்துக் கலைக்கு உயிர் ஊட்டி அதனை வாழ வைத்து, மக்களுக்கும் உயிர் ஊட்டித் திளைக்க வைக்கிறார் நடிகர் திலகம். ''உயிர் ஊட்டுவது'' எனின் யாது என்பதை விளக்கி, அவர் கதையை அஃதுடன் நிறுத்துகிறேன். ''நவராத்திரியில்'' சத்தியவான் சாவித்திரி கூத்து நடக்கிறது. நடிகர் கணேசன் ஒரு கூத்தனாக நடித்துக் காட்டுகிறார்.

''வந்தேனே ராசாதிராசன் வந்தேனே!
தங்கச் சலங்கைகட்டி—''

என்ற பாட்டும், அதற்கு ஏற்ற ஆட்டும் கால் வரிசையும் முக பாவனையும், உரையும் கொண்டு மெய்ம்மைக் கூத்தனாகக் காட்டி யாவருக்கும் உயிர்ஊட்டவில்லையா? கூத்துப் பார்த்துள்ளோர் யாவரும் சிவாசி ஆட்டத்தில் குதூகலித்திருப்பார். அதுதான் உயிர்ஊட்டல். அவ்வாறே அந் நவராத்திரியில் ''பைத்திய'' சாவித்திரி.

''நான் கவிஞனுமல்ல''

என்று இசையிழுத்து விழித்து நின்றபோது, எல்லாரும் குளு குளுவென்று உள்ளங் குளிர்ந்து உயிர் பெறவில்லையா? இதுதான் உயிர் ஊட்டல். இதுதான் கலை. நம்மை மறந்து, நாம இன்புற்றுக் கலையில் ஒன்று படுகிறோம்; நம் உள்ளம் குளிர்கிறது; இனி இக்கலை பற்றிக் கம்பன் வைத்துள்ள கருவூலத்தைத் திறப்போம்.

நாடகக்கலை

இதற்கு உரிய தகுதிகள்: 1. பொருத்தமான உருவம்; 2. உடை; 3. நடை 4. உரை; 5. ஒளி; 6. மெய்ப்பாடு; 7. புறக்காட்சி-இத்தனையும் நிறைவுறல் வேண்டும். இவற்றுக்கு மேலாக நல்ல கதையமைப்பு வேண்டும். கம்ப நாடகத்தின் கதையமைப்புச் சீர்மையினைச் சிறிது எடுத்துக் காட்டுவோம்.

1. தேவர்கட்குத் திருமால் கருட வாகனத்தில் காட்சி
2. நடனமாதரைத் தொடர்ந்து கலைக்கோட்டு மாமுனி செல்லும் காட்சி. (நடனம்)
3. தசரதரும் விசுவாமித்திரரும்
4. தாடகை தோற்றம் (திரைக்குப் பின் மடிவதாக ஒலம்)
5. இராமன் காலடிபட்டு, கல் அகலிகை ஆதல்
6. மிதிலை அரண்மனை-இராமன் சீதை
7. வில் வளைத்தல்
8. திருமணக்காட்சி—

இவ்வாறு பாலகாண்டம் ஒருநாள் நாடகம். மனம் சலிக்காத முறையில் நல்ல நல்ல காட்சிகளுடன் கதை நடத்த இடந்தருகிறது கம்பநாடகம். பின்னர்

1. (முடி. சூட்ட முரசு) கைகேசியும் கூனியும்
2. கைகேசியும் தசரதரும்
3. இராமனும், கோசலையும், சீதையும்
4. இராமனும், இலக்குவனும், சுமித்திரையும்
5. இராமனும் குகனும்
6. பரதனும் தாயும்
7. பரதனும் குகனும்
8. இலக்குவன், இராமன்—பரதன், பாதுகை பெற்று மீள்தல்

இவ்வாறு அயோத்தியா காண்டம் ஒருநாள் நாடகம்

இங்கு அரண்மனை—காடு - ஆறு. படகு முதலிய காட்சிகளுடன் சொற்போர்-மாதர் இயல்–நட்புறவு-வெகுளி,சோகம், பக்தி முதலியன கொண்டு நாடகம் சிறப்புறுகின்றது.
அடுத்தது:—

1. ஆறு-காடு-குடிசை-சடாயுக்காட்சி-சூர்ப்பநகை
2. இராவணன் கொலு, சூர்ப்பநகை
3. இராவணசந்நியாசி
4. பொன்மான் வேட்டை (நிரைக்குள் சிறை எடுத்த ஓலம்)
5. மலைக்காட்சி, இராமனும் அனுமானும்-சுக்கிரீவன்
6. மராமர வீழ்ச்சி
7. சுக்கிரீவன் வாலிபோர்-அங்கதன் அரசு

ஆரணிய காண்டம், கிட்கிந்தாகாண்டம் ஒருநாள் நாடகம். அடுத்தது:—

1. கடல்காட்சி-அணை
2. அசோகவனம், அனுமான் சீதை
3. இராவணன் கொலு
4. கும்பகருணனும், வீடணனும்
5. கும்பகர்ணன் இந்திரசித்து மடிதல்
6. இராவணன் மடிதல். மண்டோதரி
7. சீதை அனுமான் இராமன்
8. அயோத்தி-பரதன். முடிசூட்டு விழா

சுந்தரகாண்டம் யுத்தகாண்டம் ஒருநாள் நாடகம்

எத்தனை வகையான காட்சிகள்? தேவர் முனிவர் மக்கள் குரங்குகள் கரடி பறவை வேடன் அரக்கன், அரக்கி கூனி சந்நியாசி அரசன் முனிவன், அரண்மனை—ஆறு கடல் காடு மலை இவ்வாறு பலவகைக் காட்சிகளுடன், வீரம் வெகுளி காதல் நட்பு வியப்பு பக்தி சோகம் நடனம், மணம், முடிசூட்டல் முதலிய பலவகைச் சுவைகளும் நிறைந்து உயர் நெறியில் நிற்பது கம்பநாடகம். இனி உருவம் பற்றிக் கூறுவோம்.

உருவம்

1. முனிவர் உருவம்: ஊன் எலாம் உலர்ந்து ''வற்றி என்பு எழுந்தயாக்கையர்—'' திருவாவினன்குடி முனிவர் என முனிவர்களைப் பற்றித் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. ஏன்? அவர்கள் மும்மலங்களை ஒழிக்க ஊண் உறக்கம் இவற்றை அடக்கித் தியானத்தில் இருப்பவர்கள். கம்பர் தம் நாடகத்தில் முனிவர்கள் உருப்பற்றி அறிவிக்கும் முறை எவ்வாறு? கோசிக முனிவர் எலும்புக் கூடு போல் தோற்றம் அளித்தார்-உடம்பில் ஊன் திரட்சி இல்லை. புளியம்பழத்தின் தோடு, ஒட்டியுள்ள புளி இவற்றை நீக்கி விட்டால் வெறுங்கோது மட்டும் தோன்றும். அவ்வாறு தோன்றினார் (கௌசிக) முனிவர்.

''தீது என்று உள்ளவை யாவையும் செய்து, என்னைக்
கோது என்று கொண்டிலள் —''

இராவண சந்நியாசி உருப் பற்றிக் கம்பர் அறிவிக்கிறார்:-

ஊண் இலன் என உலர்ந்த மேனியன்
நெறி நடந்த வருத்தச் செய்கையன்
பூப்பொதி அவிழ்ந்தென நடையன்
நடுக்குறு நிலையன், பருவம் முற்றியவன்
வளைந்த யாக்கையன், தவமாலையன்

இத்தகு முறையில் தோன்ற வேண்டியது முனிவர் உரு. ரவிவர்மா படத்தில் மேனகையுடன் நிற்கும் விசுவாமித்திரரைப் பார்த்தால் முனிவர் உருவ அமைப்பு நனி விளங்கும். நம் திரைப்படங்களில் வருமுனிவர்களின் உருவை ஒப்பிட்டு உணருங்கள்: காந்தியடிகள் எவ்வாறு காட்சியளித்தார்; புத்தர் வர்த்தமானர் இயேசுபிரான் உருவங்கள் எவ்வாறு கலை நுட்பத்தோடு எழுதப்படுகின்றன. ஆனால் நாயனார் தேவர் என்று சமயகுரவர் போல் போற்றப்படும் திருவள்ளுவருக்கு நாம் வகுத்த உரு எத்தகைத்து? இழுக்குடைத்து! திருமயிலை வள்ளுவர் கோயிற்சிலையையேனும் கவனித் திருத்தல் வேண்டும்; திருத்தக்கதேவர் உருவை உ. வே. சா.

ஐயரவர்கள் வகுத்த முறையையேனும் கவனித்திருத்தல் வேண்டும். முனிவர்கள் உரு நனி மெலிந்திருத்தல் வேண்டும். அடிகளின் உரு தடிகளாயிருத்தலாகாது.

2. பரத்துவாசர் உருவம்: குடையினன், நிமிர்கோலினன், குண்டிகையினன், சடையினன், மான்தோலினன், மரநார் உடையினன், மயிர்ஒழுக்க உருவினன், மறை நவில் நாவினன்.

அந்தண முநியர்: குடையர், குண்டிகை தூக்கினர், குந்திய நடையர், நாசிபுதைத்த கையினர்.

முனிவர் வேடம் ஒரு துணைவேடம். அதற்கு உரு ஒப்பனை செயல் முறைகளைக் கம்பர் எவ்வாறு அதிநுட்ப மாக விளக்கி நிற்கிறார்: இதுதான் கலை.

3. இந்திரசித்தின் உருவம்: இவன் அரக்கரில் இளைஞன் துடுக்கன் வீரன். இவன் உருவம் குளத்தில் துள்ளிப் பாயும் கெளிறுபோல்—வார்த்துவிட்ட சிலைபோல் வாட்டசாட்டமாக அமையவேண்டும். கம்பர் இவன் உருவத்தை வெளிப்படை யாகக் கூறாமல் குறிப்பு மொழியால் அறிவிக்கிறார். அனுமான் மூதன் முதல் இந்திரசித்தை அவன் பள்ளி யறையில் காண்கிறான். யாது நினைக்கிறான்?

"இளையவீரனும் ஏந்தலும் - இருவரும் பலநாள்
உளைய உள்ளபோர் இவனொடும் உளது - என
உணர்ந்தான்'
"இவனைப் புதல்வனாப் பெற்றவல் இராவணன்
புவனம் மூன்றையும் வென்றது ஓர் பொருளோ?!"

இராம இலக்குவர் வில்லுக்கு இவன் பலநாள் வேலை வைப் பான்! இவனைப் பெற்ற இராவணன் அவனி முழுவதையும் வென்றது ஆச்சரியமோ?!—இவ்வாறு நினைக்கத் தக்க உருவம் இந்திரசித்தின் உருவம்.

4. வீடணன் உருவம் :

"களித்துவாழ் கருநிற அரக்கருக்கு அஞ்சி
ஒளித்துவாழ் தருமத்தின் நல்உருக் கண்டான்"
(ஊர் தேடுபடலம்)

"உள்ளத்தில் உள்ளதை...
மெள்ளத் தன் முகங்களே விளம்பும், ஆதலால்
(வீடணன் அடைக்கலம்)

தீயன் என்று இவனையான் அயிர்த்தல் செய்கிலேன்"

5. அனுமான் உருவம்: இராமன் அறிவிக்கும் முறை :— ஆற்றல் கல்வி அமைதி அறிவு எல்லாம் நிறைந்த தோற்றத் தன் இவன். இவன் மாணி அன்று, உலகினுக்கு ஆணி! சேண் உயர் பெருமையன். இவ்வாறு கருதத் தக்க முறையில் அனுமன் உரு அமைதல் வேண்டும்.

6. கும்பகருணன் உருவம்

"தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குற
நாள் பல கழியுமால்."

"கண்டாள் கருணனை, கண்கடந்த தோளானை,
கொண்டாள் ஒரு துணுக்கம்."

"விண்ணினை இடறும் மோலி
விசும்பினை நிறைக்கும் மேனி
கண் எனும் அவை இரண்டும்
கடல்களிற் பெரியவாகும்
எண்ணின், இராவணனிற் பெரியோன்
மண்ணினை அளந்து நின்றமால் என
வளர்ந்து நின்றான்.

கும்பகர்ணன் தன் அண்ணன் முன் சென்று
"மலை கிடந்தது போல வணங்கினான்"

"தாள் உடையதோர் மலைகொலாம்
ஆள் என உணர்கிலேன்" என்றனன் இராகவன்

கம்பர் இவ்வாறு ஒவ்வொரு உருவையும் நனி விளக்கித் தம் நாடகத்தைச் செறிவுடைய சிறந்த ஒன்று ஆக்குகிறார்.

7. குகன் உருவம்: கல்திரள் தோளினன்—காயும் வில்லினன்—துடியன்— நாயினன்—செருப்பு அடியன்—அல் செறிந்தன்ன நிறத்தினன்—நெடிய தானையன்—கொம்பு துத்தரி பேரிகை பம்பைப் படையினன்—சல்லடம் அணிந்தவன்—புலித்தோல் கச்சையன்—புலிவால், தொங்கட்டான் ஆடையன், சோழி மாலையன்—கழலினன்—கருமயிரன்—நீண்ட திரண்ட புருவத்தன்—பனந்துரும்பு போன்ற மயிரினன், அரையில் கச்சை வாள் உடையவன்—சீறிய முகத்தினன். ஒப்பனையும் நிறைந்த இடம் இது.

8. இராவணன் உரு:

நெடுவரை யாவும் ஒருவழி திரண்டெனத் தோள்கள்—மேலாக மகரிகை, வயிரகுண்டலம் அலம்புதல்—உதய சூரியன் போல் மணிமுடிகள்—ஊர்வசி ரம்பை மேனகை திலோத்தமை இவர்கள் உடைவாள், தாம்பூலம், வாசனைத் திரவியங்கள் ஏந்தி நின்றல்—மண்டபம் பொன்மாடம் எங்கும் பரிமளம்—மாதர் பலர் நெய்விளக்கு ஏந்தி நிற்றல், சிலர் சாமரை இரட்டல், சிலர் நடனம் ஆடுதல்—கரிய மேனியில் பொற் பீதாம்பரம் ஒளிர்தல்—உடம்பில் அருவிபோல் உத்தரீயம் தொங்குதல்—கால்களில் வீரக்கழல்கள் மிளிர்தல்-மாதர்கள் சூழநின்று தம் பார்வையால் மகிழ்வூட்டல்—பல பல படைகள் ஏந்தியவர் புறத்தே புடைசூழ்ந்து நிற்றல்—இத்தகைய ஒப்பனை, புறக்காட்சிகளுடன் இராவணன் தோன்றுகின்றான். எவ்வாறு?

"சிரம் அனைத்தையும் திசைதொறும் திசைதொறும்
செலுத்தி
உரகர்கோன் இனிது ஆட்சி வீற்றிருந்தது ஒப்ப—"

"முறைகொள் மேருவின் முகட்டிடைக் கனகனை
 முருக்கிய முரண் சீயம்
தழைகொள் தேளொடு தலைபல பரப்பிமுன்
 துயில்வதோர் தகையானை

(ஆதிசேடன் சீறி உயர்ந்து படம் விரித்து நின்று ஒவ்வொரு திசையையும் நோக்குவது போல் தலை நிமிர்ந்து நிற்பான். இரணியனை அழித்த நரசிங்கம் பற்பல கைகளைப் பரப்பி மலைமேல் பதிவைத்துக் கிடப்பது போல் படுத்திருப்பான்) இராவணன் உரு, உரை, ஒப்பனைகள் பற்றி விளக்கமாகத் காண விரும்புவார் எமது "கம்பர் கவித் திறனில்" "இராவணப் பெருமிதம்" படித்து நடித்து உணர்க.

9. இராமன் உருவம் குளிர்ந்த முகத்துடன் யாவரும் விரும்பும் படியான தோற்றம். "வேறுள்ள குழுவை எல்லாம் மானிடம் வென்ற தன்றே!" என்று வியக்கும்படி ஒளிரும் குளிர் முகத்துடன் உடலமைப்பு.

இந்திரநீலம் ஒத்து இருண்டகுஞ்சி
சந்திரவதனம், தாழ்ந்த கைகள்
சுந்தரமணி வரைத்தோள்கள்
மந்தகாச முறுவல்.

(மிதிலைக்காட்சி)

வென்றி வாள்புடை வசித்து
என்றும் தேய்வுறாத்தூணி யாத்து
குன்றம் போன்று உயர் தோளில்
கொற்றவில் சேர்த்து (கையடை

இது இராமனின் இளமை இனிமை கலந்த தோற்றம். பார்த்த அளவில் தனிப்பட்ட ஒரு பெருமிதத் தோற்றம்.

இராவணன் மலையின் நின்று பகைவர் படையைப் பார்க்கிறான். "அதோ அவன் இராமன்! பார்த்த அளவில்

தெரிகிறது. ஏனையோர் பற்றி எனக்கு அறிவி'' என்று உழையனிடம் கூறினான்.

''ஏனையோரின் இவன் இராமன் என அவன்
மேனியே உரை செய்கின்றது. மற்றுள
சேனைவீரர் தம்மை விளக்கு எனத்
தான் வினாவினான், சாரனை நோக்கியே.''

பற்றலரும் போற்றும் பீடுஉடைய இது ஒரு தனிப் பெருந்தோற்றம்

10. சீதை உரு: காண்பார் உள்ளம் உருகிப் பக்தியில் ஈடுபட வைப்பது சீதை உரு.

''சொல்லும் தன்மைத் தன்று
குன்றும் சுவரும் திண்
கல்லும் புல்லும் கண்டுருகப் பெண்
கனிநின்றாள் (மிதிலைக் காட்சி

''அழகெலாம் ஒருங்கே கண்டால்
யாவரே அறிய வல்லார்'' (கோலங்காண்)

—''நங்கை வரலோடும், கைகள் தலைபுக்கன''.
அரவின் நீக்கிய ஐயனே அவன்,
இவள் கமலச் செல்வியே'' (காட்சி)

உருவம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதைக் கம்ப நாடகம் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் ஒப்பனைகளுடன், சிறந்த முறையில் விளக்குகின்றது. ''உருபற்றி இதனோடு நிறுத்தி, இனி உரைபற்றிக் கூறுவாம்.

உரை

உரைதாம் கொண்ட வேடத்துக்கும் பேசும் இடத்துக்கும் ஏற்றவாறு அமைதல் வேண்டும். இடங்கண்டு குரலை எடுத்தும் படுத்தும் பேசல் வேண்டும். யாம் குறிப்பிடும் உரைகளை உணர்ச்சியுடன்—நாடகம் நடிப்பதாக எண்ணிப் படித்து உணர்க.

இராமன்

I ஏனையோரைக் காணும்போது:—

"எதுவினை? இடர் இலை? இனிது நும் மனையும்? மதிமிகு குமரரும் வலியர் கொல்?"

II சூர்ப்பநகையைக் கண்டபோது :—
"ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?"

III அனுமானைக் கண்டபோது :—
"எவ்வழி நீங்கியோய்நீ? யாவன் நீ?"
1, 2, 3 இவை அன்பு கலந்த மொழிகள்

1V தசரதர் "உனக்கு முடிசூட்ட எண்ணுகிறேன்: உன் விருப்பம்யாது?" என்றபோது :—

"யாது கொற்றவன் ஏவியது அதுசெயல் அன்றோ
நீதி எற்கு ஆம்"

V விசுவாமித்திரர் தாடகைமேல் அம்புஎய்யக் கூறியபோது:

"அறன் அல்லவும் எய்தினால்—
அது செய்க என்று ஏவினால்—
ஐய, நின் உரைவேதம் எனக் கொண்டு
அது செய்வதன்றோ அறம் செய்யும் ஆறு"

IV கைகேசி "நீ காடு செல்லவேண்டும், இது நின் தந்தை ஆணை" என்றபோது :—

"எந்தையே ஏவ, நீரே உரைசெய்ய இயைவதுண்டேல்
உய்ந்தனன் அடியேன்"
"மன்னவன்பணியன்றாகில், உம்பணிமறுப்பனோயான்,
"மின்ஒளிர் கானம் இன்னே போகின்றேன், விடையும் கொண்டேன்"

4, 5, 6—இவை பணிவு ஆர்ந்த மொழிகள்

VII காலத்தில் மீண்டு வராது, கடமையில் தவறிய சுக்கிரீவன் வந்து வருத்தம் அறிவித்தபோது :—
தீர்ந்தது காலமேனும், உரிமையின்வந்து உரைத்தலின் தாழ்த்த தாகுமோ? பரதன் நீ! இன்னபகரற்பாலையோ?

VIII இராவணன் முதல் நாள் போரில்தோற்று, எல்லாம் இழந்து நின்றபோது :—

''வல்லையாயின், உனக்குள வலியெலாம் கொண்டு
நேர்நின்று பொருது போன்றுதி எனினும்
நல்லை ஆகுதி, பிழைப்பு இனிஉண்டுஎன நயவேல்''

''ஆள் (ஐயா,) உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த பூளையாயின கண்டனை. இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா''

IX கும்பகர்ணன் பொருது எல்லாம் இழந்து தனித்து நின்ற போது :—

''ஏதியோடு —துணை இழந்தனை
எதிர் ஒருதனிநின்றாய்,
நீதியோனுடன் பிறந்தனை, ஆதலின்
நின்உயிர் நினக்கு ஈவேன்.
போறியோ? பின்றை வருதியோ? இன்றேல்
போர்புரிந்து இப்போதே
சாதியோ? உனக்கு உறுவது சொல்லுதி—''

7, 8, 9 இவை கருணையுடன் வீரம் கலந்த உரை.

X இந்திரசித்தைக் கொன்று வரு இலக்குவன் குழுவைக் கண்டு இராமன் :—

''—சனகன் பெற்றெடுத்த கொம்பும் என்பால்
குறுகினள்!—அகங்குளிர்ந்தேன்.''
''தம்பியுடையான் படையஞ்சான் என்னும் மாற்றம்
தந்தனை?''

"ஆடவர் திலக, நின்னால் அன்று! அனுமன் என்னும்
சேடனால் அன்று! வேறு தெய்வத்தின் சிறப்பால்
அன்று!
வீடணன் தந்த வெற்றியிது"— இது பாராட்டுரை.

XI அனுமன் மருந்து மலையைப் பிடுங்கிவந்து, பிரமாத்திரத்தால் வீழ்ந்துகிடந்த இலக்குவனை எழுப்பி விட்டதைக் கண்டு இராமன் :—

"மண்ணில் முன்னம் தோன்றினோம் மாண்டுளோம்,
நின்னிற் றோன்றினோம்"
"அழியுங்கால் தரும் உதவி, ஐயனே
மொழியின்—எம் உயிர் ஈயினும் ஈடின்றால்:
பழியும் காத்து, எம் பகையும் சாய்த்து, எம்
வழியும் காத்தனை, மறையும் காத்தனை."
ஊழி காண்டி நீ. உதவினோய்,
ஒன்றும் இன்னல்நோய் உறுகிலாதுநீ,
என்றும் வாழ்தியால்! இனிய என் வாழ்த்து இது!

இவை வாழ்த்துடன் பாராட்டு உரை. இராமன் உரை இவ்வாறு அன்பு பணிவு கருணை வீரம் பாராட்டுகள் கலந்த இன்ப உரையாக இருக்கிறது. இதனைப் பொருள் அறிந்து, இடம் தெரிந்து, குரலை ஏற்றி இறக்கித் தக்கவாறு நாடக முறையிற் பயிலுதல் வேண்டும். இனி இலக்குவன் உரை பற்றிக் காண்போம்.

இலக்குவன்

இலக்குவன் இளையவன், துடுக்கன், சீற்றத்தின்உரு. இக்காரணங் கொண்டே இவனைச் சேடனின் அம்சம் என்றார்கள். இவன் பணியான், இவன் சினம் தணியாது. கைகேசி தன் மகன் பரதனுக்கு முடிசூட்ட வகைசெய்தாள் என்று அறிந்ததும் இவன் வெகுண்டு

I ''சிங்கக்குருளைக்கு இடும் தீஞ்சுவை ஊனை—நாயின்
வெங்கட் சிறுகுட்டனுக்கு ஊட்ட விரும்பினளே!''—
''பெண்நாட்டம் ஒட்டேன் இனிப்பேருலகத்துள்''—

என்றான். இராமன் ''இது விதியின் பிழை'' என்றபோது:—

''விதிக்கும் விதி ஆகும் என் வில்வலி, காண்டி—
என்றான்''

II ''பரதன் சேனையுடன் இராமனை அழைக்கவர, இலக்குவன் பிறழ உணர்ந்து :—

''குதித்தனன்—நீறு எழ மிதித்தனன் — இராமனை எய்தினன். ''மதித்திலன் பரதன். நின்மேல் வந்தான். பதிப்பெருஞ்சேனை பரப்பினன்''— ''அச்சேனையின், பெருமையும் என் ஒருமையும் நீ காண்டி, ஆள் அற— வாள் அற—தாள் அற—தோள் அறக் கணை தொடுப்பென் காண்டியால்—பரதன் உலகு ஆள்தல் விட்டு நரகு ஆள்வது காண்டியால்—கைகயன் மகள் விழுந்து அரற்றல்காண்டியால் இவ்வாறு சீற்ற மொழிகளுடன் நின்றான்.

III சூர்ப்பநகை சீதையை எடுக்கச்சென்றபோது வார்த்தைகளை வளர்க்காமல் ''நில் அடீஇ'' என்று கடுகி, அவள் கூந்தலைப் பற்றிச் சிதைத்தான். அவ்வாறே அயோமுகி அண்மிக் காதல் வார்த்தைகள் கூறியபோது

''மாறு உரை வாயிற் கூறிடின்
நின் உடல் கூறிடும்'' என வெகுண்டு கூறினான்.

IV இராவணன் இலக்குவனுடன் போர் கருதி நெருங்கிய போது இலக்குவன்

''காக்கின்ற என் நெடுங்காவலின் வலி நீக்கிய கள்வா,
போக்கு இன்று உனக்கு அரிதால்? எனப்புகன்றான்''

யான் காவலில் இருக்க, நீ சீதையைக் கவர்ந்து சென்றனை; கள்வா, அன்று தப்பிப் போய்விட்டாய், இன்று நீ தப்புவது

அரிது—என்று சினந்து கூறினான். இவற்றை நாடகபாணி யில் நவின்று பார்த்தல் வேண்டும்.

V கும்பகர்ணன் "என் உடன் பிறந்தாள் கூந்தல் தொட் டீர்த்த கைதலத்திடை வீழ்த்துவன், ஒல்லுமேல் காத்தி" என்றபோது இலக்குவன் சிற்றமாக—சுருக்கமாகச் சொல்லி நின்ற பதில் படித்து நடித்து இன்புறத்தக்கது.

"வில்லினாற் சொலின் அல்லது, வெந்திறல் வெட்கச்
சொல்லினாற் சொலக் கற்றிலம்யாம்—"

எம் கையில் பேசும்; வாய் பேசிநிற்பது எம் திறனுக்கு இழுக்கு—என்பது கருத்து. அருமையான வீரவாக்கு. இதே வாக்கு ஆங்கில மகாகவி சேக்சுப்பியரிடத்துப் பிறக்கிறது (Magbath ActV-Scene VII, Line 7, 8) I have no words; MY Voice is in my sword.என்வாய் பேசாது, வாளே பேசிநிற்கும் என்று 16 ஆம் நூற்றாண்டு மேலைப் பெரும்புலவர் கூறிய கருத்தை 12 ஆம் நூற்றாண்டு நம் கம்பநாடர் முன்னமே கூறியிருப்பது கண்டு நாம் பெருமிதம் உறவேண்டும் அன்றோ!

VI இந்திரசித்தைக் கொல்வேன் என்று இலக்குவன் சூள் உரைத்தமுறை :—

"இந்திரசித்தெனும் இவனை, என்சரம்
அந்தரத்துஉறத் தலை அறுக்கலாதெனின்,
வெந்தொழில் நமனுக்கு விருந்தும் ஆவன்யான்
மைந்தரிற் கடையெனப் படுவன் ஆழியாய்:
"சுடுசரம் இவன் தலை துணிக்க லாதெனின்
முடிய ஒன்று உணர்த்துவென்; உனக்கு யான்புரி
அடிமையின் பயன் இழந்து அறுக ஆழியாய்!

VI இந்திரசித்து "இருவீரும் சேர்ந்து என்னுடன் பொரு, திரோ, ஒருவிரே வந்து உயிர் தருதிரோ?" என்றபோது இலக்குவன் :—

''வாளில்—திண்சிலைத் தொழிலில்—மல்லினில்
ஆளுற்று எண்ணிய படைக்கலம் பலவற்றுள்—
கோளுற்று, அமர்செய்து உன் உயிர் கொள்வான்
சூளுற்றேன்; இது சரதம்''—என்றனன்.

ஒவ்வொன்றையும் வெகுண்டுநின்று உரைத்துப் பார்மின். இலக்குவனை அவன் வீர வெகுளியுரையோடு நிறுத்தி, இனி அனுமான் உரைமுறை பற்றிக் காண்பாம்.

அனுமான்

அனுமான் "சொல்லின் செல்வன்'' என்று பெயர் பெற்றவன். எதனால்? அவன் சொற்சாதுர்யத்தால். இதம் பதம்—நிமிர்ந்து பணிந்து கடிந்து—இடித்தல் நடித்தல் பல்வேறு வகையிலும், இடம் அறிந்து நன்கு பேசக்கற்றவன் அனுமான். இதனைச் சில சான்றுகளால் காண்போம். நாம் குறிப்பிடும் அனுமான் வாக்குகளை, இடம் அறிந்து தக்க முறையிற் குரல்காட்டி அன்பர்கள் படித்துத் துய்த்தல் வேண்டும்.

இராமன் முதன் முதல் அனுமானைக் கண்டு "நீ யாண்டிருந்து வருகின்றாய்?" நீயாவன் என்றபோது, அனுமான் :—

''கோல மேனியாய், யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அனு
மன் என்பேன்''

என்று இதமாகப் பதில்கூறி நின்றான். வரலாறு பற்றிப் பேசி, அனுமான் சுக்கிரீவனை அழைக்கப் புறப்படுகிறான். அப்போது ''நீவிர் யாவிர்? எனக்கு அதனை அறிவியும்" என்று தடித்தனமாகக் கேளாமல், மிக்க நாகரிகமாக

''யார் என விளம்புகேன்யான், எம்குலத் தலைவர்க்கு
உம்மை?"

என தனி நாகரிகமாக விளம்பிநின்றான்.

தமிழ்நாட்டில் இத்தகைய வாக்கு நயம் காண்டல் மிக மிக அரிது. 'நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன?" என்று கேட்பதே வழக்காக இருக்கிறது. யான் முதன் முறையாக டாக்டர் சஞ்சீவி அவர்களைப் பார்க்கச் சென்றபோது, அவர் இல்லத்தில் இல்லை; கதவு திறந்த மகள் அருள் அரசி'' அப்பா இல்லை என்று அறிவித்ததுடன் "அப்பா வந்தால் நான் யார் தேடிவந்ததாகச் சொல்ல வேண்டும்?'' என்று கேட்டாள். யான் உடனே கம்பனை எண்ணி வியந்து, தக்கது பேசிச் சென்றேன். தமிழகத்துக்கு ஒரு அறிவு உரு! வாழ்க!

இராமனைப் பற்றிச் சுக்கிரீவனுக்கு அனுமான் அறிவித்த முறை சால நயமுடைய ஒன்று. வாலிக்கு அஞ்சி வாழ்கிற சுக்ரீவன் உள்ளம் குளிரும்படி

"வாலி என்று அளவில்லா வலியினான் உயிர்தெறக்
காலன் வந்தனன்; இடர்க் கடல் கடந்தனம்—"
அழகினார் அறிவினார்; நிற்கு அரசுதந்து உதவுவார்''

என்று ஊக்கம் ஊட்டி; ஏக்கம் அழிய உரைத்தான்; இடம் அறிந்துபேசி நின்றான் அனுமான்.

வாலி இருப்பின் வானரப் படை நமக்குத் துணைவராது, ஆதலின் அவனைக் கொன்று, சுக்கிரீவனை அரசனாக்கி, வானரப்படையின் முழுத்துணையுடன் இலங்கையை நாடுவோம்—என்று காரண காரியங்களுடன் பேசி, வாலியின் அழிவுக்கு வித்திட்டான் அனுமான்.

கொடுந்தொழில் வாலியைக் கொன்று, பின்னர்
சுடுங்கதிரோன் மகன் கோமகன் ஆக்கி
நெடும்படை கூட்டினால் அன்றி, அரிதாம்
அடும்படை அரக்கரின் இருப்பை அடைவது

இவ்வாறு சமயமறிந்து பக்குவமாக ஓதிக் காரியம் சாதிக்க வல்லவன் அனுமான்; அவன் சொல்லைப் ''பிறிதோர் சொல் வெல்ல முடியாத'' நிலையிற் பேசி நின்றான்.

''இலங்கைக்கு நீவிரே சென்று சீதையைத் தேட வேண்டும்'' என்று சாம்புவர்கூற, யாவரும் ஒப்ப—அதற்கு ஒருப்பட்டுநின்ற அனுமானின் உறுதியளிக்கும் திண்ணிய மொழிகள் பாவனையுடன் படித்து இன்புறத்தக்கன.

''இலங்கையை இடந்து வேரோடு இவ்வயின் தருக என்றாலும்
விலங்கினர் தம்மை எல்லாம் வேரோடு அழிஎன்றாலும்,
பொலங்குழை மாதைக் கொண்டே போதுக இவண் என்றாலும்
கலங்கலீர்—உரைத்த எல்லாம் முடிக்குவென் கடிது கண்டீர்!'

ஊரத்துச் சூள் உரைத்துப் புறப்பட்டான் அனுமான், இவ்வாறு இடமறிந்து முறையோடு பேசிக் காரியம் சாதிக்கும் அனுமான், மாதவிக் கொடியால் சீதை தன்னை மாய்த்துக் கொள்ளத் துணிந்தபோது பேசிய முறை என்னை?

''இராமதூதன் யான்'' இத்துணையே, ''வேண்டாம், கழுத்தில் மாட்ட வேண்டாம்'' எனப் பேசிச் சென்றிருப்பின், சீதை அதற்குள் கழுத்தில் மாட்டியிருப்பள், போய்த் தடுத்துப் பற்றியிருப்பின்—இது அரக்கர் சூழ்ச்சி என ஓலமிட்டிருப்பள்; இவற்றை எல்லாம் ஊகித்தே ''இராமன்'' பெயரைக் கூறி நின்றான். வள்ளுவர் ''காலத்தால் தக்கது அறிவதாம் தூது'' என்றார். அந்த முறையில் அனுமான் ''தக்கது அறிந்து' செய்தான். சீதையும் எம்பிரான் நாமம் சொல்லி உருக்கினன் உணரவைத்தான்; உயிர்க்கு இதின் உறுதி யுண்டோ!'' என்று புத்துணர்வு பெற்றாள். காரணம்

அனுமானின் உரை முறை. இராமனைப் பற்றிக்கூறி, அதன் பின் தன்னைப் பற்றிக்கூறி, இறுதியில் பதமாக "ஒரு

பேறுபெற என்கண்தந்தருள்: அதனால்
ஆறுதுயர்: அடியேன் தோள்மீது
ஏறுகடிது—

என்று அடிபணிந்தான். ஆனால் அனுமான் வாக்குப் பயன் கண்டிலது; அஃதும் சீதையின் ஏற்றத்துக்கே. பின்னர் கணையாழி பெற்று அவன் புறப்பட்டு—அசோகவனத்தை அழித்துச் சம்புமாலியுடன் பொருதபொழுது அவன் நிலைக்கு இரங்கி அனுமான் கூறுகிறான் :—

ஏதியும் ஒன்று, தேரும் ஒன்று, உனைக் கோறல்
நீதியும் அன்று; நீநிலை தளர்ந்தாய்; சமர்புரிந்து
சாதியோ, அன்றிப் பிறிதென் செய்தி? இவண் விட்டுப்
போதியோ என்றான்—

சொல்லிப் பாருங்கள்—இரக்கந் தோன்ற, ஆண்மையுடன் நாடக பாணியிற் படியுங்கள். இந்திரசித்து பாசத்தாற் பிணித்து அனுமானை இராவணன் முன்கொண்டு நிறுத்தினான். இராவணன் :—

யாரை நீ? என்னை இங்கு எய்துகாரணம்?
ஆர்உனை விடுத்தவர்?
சோர்விலை! ஆணையால்! சொல்லுதி என்றனன்

இராவணன் உரைமுறையின் அதிகாரம் இங்கு உணரத் தக்கது. இதற்குப் பதிலாக அனுமான் "யான் சுக்கிரீவனால் அனுப்பப்பட்டவன், அங்கதனால் அனுப்பப்பட்டவன்' இராமனால் அனுப்பப்பட்டவன், அஞ்சனை மகன்" என யாதொன்றும் கூறாமல், வாலி பெயரைவைத்து விளக்கம்கூறி நின்றான்: இதுதான் தூதன் சமர்த்து.

தென்பால் வந்த தானைக்குத் தலைவன் வாலி
தன்மகன், அவன்றன் தூதன் வந்தனென் தனியேன்

வாலி இராவணனிடம் பட்டு அனுபவித்தவன், அதனால் அவன் பெயரால் தன்னை அறிவித்ததோடு; "உன்னை அடக்கிய வாலியை வென்றவன் இராமன் என்று இராமன் ஆற்றலையும் அறிவித்து நின்றான்.

''இடம் அறிந்து எண்ணி உரைப்பான் தலை''—குறள்
''சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க'' — ,,

யானும் தனியனாகவே வந்துள்ளேன் உனக்கு அஞ்சினேன்: அல்லேன் என்று கருத்துறப் பேசினான். இவ்வாறு விளக்கம் தெளிவு வீரம் யாவும் ஒளிரப்பேசும் அனுமான் இலங்கையிலிருந்து திரும்பிவந்து இராமனைக் கண்டதும் பேசமுடியாதவன் ஆனான். ஏன்? சீதையின் தூயநிலை இராமனின் அருமைகளை நினைத்தும், அவர்கட்கு உற்ற பிரிவின் அல்லலை நினைத்தும் மனம் கரைந்து யாதும் வாயினால் பேசமுடியாதவனாகத் தலையினால்— கையினால்—மெய்யினால் பேசினான்.

எய்தினன் அனுமனும்: இராமனின்
மொய்கழல் தொழுதிலன்—
தையலை நோக்கிய தலையன்—நீட்டிய
கையினன், வையகந்தழீஇ நெடிது இறைஞ்சினன்

பண்பாட்டின் உணர்ச்சியுடையவரே இதனை அறியமுடியும். உள்ளம் பொங்குகிறது, உரைகுளறுகிறது, முகம் வெளிறுகிறது. உடல் துடிக்கிறது. தெற்கு நோக்கித் தொழுது வீழ்ந்து-சீதைக்கு வணக்கம் செய்து, குறிப்பால் அவளின் இருப்பையும் தூய்மையையும் அறிவித்தான். கம்பரின் கருத்துஉயர்ந்த செய்யுளின் இது ஒன்று. நடித்துப் பாருங்கள் உரையில்லா-உருக்கமான நடிப்பு!

இராவணனை அனுமான் குத்துச் சண்டைக்கு அழைக்கும்முறை, அதன் மிடுக்கு, ஒழுங்கு—இவை கற்றுத் துய்க்க வேண்டிய உரை.

‘‘பரக்கப் பல் உரைத்து என்?
படர்கயிலைப் பெருவரைக்கும்—
திசைக்கரிக்கும் சிறிது அசையா
உரக்குப்பையின் உயர்தோள் பல உடையாய்,
குரக்குத் தனிக்கரத்தின் ஒரு
குத்து ஆற்றுவை எல்லாம்?

என் தோள்வலி அதனால், யான்
எடுத்து எற்றவும், இறவாது
நின்றாய் எனின்; நீ பின் எனை
நின் கைத்தலம் நிரையே
ஒன்றாய்த்தனி மிடலொடு குத்துதி: குத்தப்
பொன்றேன், உளன் எனினும், எதிர்
நின்னோடு போர் புரியேன்!

இவ்வாறே கும்பகருணனோடு சூள் உரைக்கிறான் அனுமான் ஒரு பாறாங்கல்லைத் தூக்கி நின்று:—

எறிகுவன் இதனை நின்மேல், இமைப்புறு அளவில் நீயே
மறிகுவதன்றி, வல்லை மாற்றினை என்னின் வன்மை—
தெரிகுவர் எவரும்: பின்னை உன்னொடு
அமர்யான் செய்யேன்.
பிரிகுவன் அயலே; வல்லோய்,
பெரும்புகழ் பெறுதி என்றான்.

இவ்வாறு வன்ம உரைகள் ஆண்மையுடன் தெளிவாக அமைந்துள்ளன.

இந்திரசித்து அனுமானை நோக்கி ஏளனமாக:—

நில்லடா—சிறிது நில்லடா:
　　உனை நினைத்து வந்தனென் முனைக்குயான்
வில்எடாது, வீண் ஆண்மைபேசி——விளையாடு
　　　　　　　　　　　　கின்றாய் நீ—உயிரோடு
கல்எடுத்தும் பெருமரம் எடுத்தும்—எம்
　　　　　　　　　　கருத்த திண்வலி அடக்கவோ?
சொல்அடா—என இயம்பினான்

இங்கு ''வில் இல்லாது, கல் எடுத்து எம்மை நீவிர் வெல்லவோ?'' என்று இகழ, அதற்கு அனுமான் அதே பாணியில்

வில்எடுக்க உரியார்கள் வெவ்வீரர் உளர் இருவர்:
கல்எடுக்க உரியானும் இங்குள்ளான் காலத்தே.*

என்று கூறினான். இம்முறையில் அரத்தை அரத்தால் தேய்ப்பதுபோல் உரையமையின், நாடகம் இன்பம் பயப்பதாகும். (கல்லெடுத்து எறிவது குரங்கு. கல்லெடுக்க உரியவன்—ஈமக்கிரியை செய்ய வீடணன். நாடக மேடையில் சொற்கள் குறிப்பாகப் பொருள்தரப் பேசின், அது பெரிய அறிவு விருந்தாகி யாவர்க்கும் இன்பம் ஊட்டுகிறது.

முன்னர் ''ராமதூதன்'' என்று சீதையை அணுகிய அனுமான், இப்போது இராவணனை வதைத்த பின் அதனை அறிவிக்கச் சீதையிடம் அணுகினான். எவ்வாறு?:—

சோபனம் சோபனம்! சுந்தரி சோபனம்!*
ஆழி அரக்கனை ஆனை அழித்தது!
சோபனம் சோபனம்! சோபனம் சோபனம்—என்று
பாடினான்—சுற்றி
ஆடினான்—சாரி

கூடினான்—கைகள்
சூடியான்—தலைமேல்.

உரை—உரையின்மை அவற்றின் மெய்ப்பாடுகள் பற்றிக் கண்டோம். இறுதியாக ஒன்றுகூறி அனுமன் கதையை முடிப்போம், அயோத்திக்கு வந்து முடிசூட்டியபின் யாவருக்கும் தக்க பரிசில் வழங்கி விடைகொடுத்தான் இராமன். அனுமானைப் பார்த்து:— உன்னைப்போல் உதவ யார் உளார்? நீ செய்துள்ள உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்யமுடியும்? அனும, ஒன்று! நீ என்னைப் ''பொருந்துறப் புல்லுக'' என்றான், இப்பொழுது அனுமன் யாது பதில் உரைப்பது? அனுமன் ''வணங்கி நாணி வாய் புதைத்து இலங்கு தானையின் முன்தலை ஒதுக்கி'' நின்றான். இது தான் நாகரிகம் சிறந்த நாடகம்: கம்பன் கற்பிக்கும் பாடம்: உள்ளத்துணர்வை மெய்ப்பாட்டால் அறிவித்து நிற்றலே நாடகச்சிறப்பு. ''நாண்- என்னும் நன்மை குறித்தது சால்பு'' அணி அன்றோ நாணுடைமை—திருக்குறள்.

இராவணன் உரை

இராவணன் உரைபற்றி அழுகைச் சுவையிலும் பெருமிதச் சுவையிலும் படித்து உணர்க. வானதி பதிப்புக் ''கம்பர் கவித்திறன்'' இராவணப் பெருமிதம் என்று 2 அதிகாரங் கொண்டது. அவற்றை நடித்துப் படிப்பார் கம்பர் இராவணனைப் பற்றிப் பாடும்போது எப்படி இருந்திருப்பார் என உணர்வார். சேக்ஸ்பியரின் சூலிசீசரும் கம்பரின் இராவணனும் பெருமிதத்துக்குச்சிறந்த சான்றுகள். இனி சீதையின் உரைபற்றிக் காண்போம்

சீதையின் உரை

கம்ப நாடகப் பாலகாண்டம் ஏறக்குறைய 1270 பாடல்கள் கொண்டது. இவற்றுள் சீதை வாய்மொழியாக

அமைந்தன யாவை? இராமன் மிதிலைக்குவந்து வில்லை வளைத்ததும், அதனால் மகிழ்ச்சி எய்திய தோழி நீலமாலை தன்னை அடக்க முடியாதவளாக

''வடங்களும் குழைகளும் வானவில்இட,
தொடர்ந்த பூங்கலைகளும் குழலும் சோர்வுற,
நுடங்கிய மின்என, நொய்தின் எய்தினாள்''.
"வந்தடி வணங்கிலள், வாய்விள் ஓகையும்
அந்தமில் உவகையள், ஆடிப்பாடினள்".
இதனைக் கண்ட சீதை

''சிந்தைகொள் மகிழ்ச்சியும், நிகழ்ந்த செய்தியும்
சுந்தரி சொல்'' என்றாள், அவளும் சொல்லினாள்.

"ஏன் இந்த மகிழ்ச்சி? என்ன நிகழ்ந்தது? சொல்''—இத் துணையே பாலகாண்டத்தில் சீதைவாக்கு. 1270 பாட்டுக்கு 6 சொற்கள்!

மாடியில் நின்று ''அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்'' என்று கவி பிறக்க நேர்ந்த இடத்தில்

என்ன அழகு!—இவன்
என்ன அழகு!

உள்ளத்தின் உள் புகுந்து
கள்வனாய் உலாவும் இவன் (என்ன)

மன்னர் மகனோ?--தேவ
மாரன் தானோ?
உன்ன உன்ன என்னை
இன்னற் படுத்துகிறான் (என்ன)

இவ்வாறு ஒரு பாடல்பாடி ஆடியதாக எழுதலாமே? வில்லை முறித்த செய்தி கேட்டதும்

பெற்றேன்—பெரும்பேறு—பெற்றேன்
இற்றது வில்இன்று—
இனியான் மணம் உற்றேன்-(பெற்)

இவ்வாறு பாடியதாக எழுதலாமே. நீர்விளையாட்டுப் படலம் பூக்கொய் படலத்தில் சீதையும் கலந்து நின்றதாகக் கவிகள் பாடலாமே! ஒரு படலம் முழுவதிலும் ஆறு சொற்களே சீதையின் வாக்காக அமைக்கக் காரணம் என்னை? விரகதாபம் உருவெளி எல்லாம் எண்ணமாகவும் கவிக்கூற்றாகவுமே அமைத்தார். திருமணம் முடிந்ததும் தலைவனும் தலைவியும் கைகோர்த்து வட்டம்சுற்றி ஓடி ஆடி

தங்கமே—உன்னை
இக்கணம்—உச்சி
முத்துவேன்—இறுகப் பற்றுவேன்
(என்று தலைவன்பாடிப் பற்றத், தலைவி—:

சிங்கமே—மா
தங்கமே—மழ
விடையே—நோமென்
இடையே (என்று தலைவி பாடித் துவள வைக்கலாமே)

மேடையில், இவை எல்லாம் தலைவிக்கு உரியன அல்ல; சிறு வேடத்தார்க்கு உரியவை. கம்பர் பெரிய நாடக கருத்தா, தலைவியைக் கண்ணியமாகக் கருத வைக்கிறார்.

இலக்கிய கர்த்தாக்கள் பெண்களைக் "கிளிமொழி" என்பர். பொருள் என்னை? கிளி "அக்கா, கள்ளன்" இரண்டு சொற்களே பேசும்; அவ்வாறு அளந்து பேசிப் பெருமிதம் பேணுபவர் குலமாதர். இந்த நாகரிகத்தைக் காட்டுகிறார் கம்பர். இனி அயோத்தியா காண்டம் பற்றிப் பார்ப்போம். அது ஏறக்குறைய 1360 பாடல்கள் கொண்டது. இவற்றுள்

500 பாட்டுகளுக்கு அப்பால் சீதை இடம்பெறுகிறாள். இராமன் காட்டுக்குப் புறப்பட்டுச் சீதையிடம் விடைபெற வருகிறான். அவன் சீரைசுற்றிய திருவுருவத்தைக் கண்ட சீதை

மன்னற்கு உற்றது உண்டோ?
வன்துயர் என்ன உற்றது?

என வினாவினாள். இராமன் நேர்ந்தவற்றைக் கூறி, ''நீ இரு, காடு சுடும்" என்று விளக்கச் சீதை

''பரிவு இகந்து, ஒருவு கின்றனை,
நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு?''

என்று சுருக்கமாகக் கூறிச் சீரைபுனைந்து வந்து நின்றாள். ''நீ உடன்வருவதால் எனக்குப் பெருந்துன்பம் ஆகும்'' என்று இராமன் கூற ''எற்குப் பிரிந்திருப்பது பேரின்பம் போலும்?" என்று அதற்கு மேல் பேசஇடம் வையாது உடன் சென்றாள்.

சுமந்திரர் சீதையை நோக்கி ''யாதேனும் செய்தி?'' என்ற குறிப்பில் நிற்க; சீதை-தசரதர் கைகேசி பரதன் கூனி எவரையும் கடிந்து எம்மொழியும் உரைக்காமல்

அரசர்க்கு அத்தையர்க்கு
என் வணக்கம் முதலில் இயம்புக.
பூவையை, கிளியைப் போற்றுமாறு என்
தங்கையர்க்கு இயம்புக

என்ற இவ்வளவில் தன் உரையை நிறுத்திக் கொண்டாள். அயோத்தியா காண்டம் கடைசிக்கு வருவோம். பரதன் வந்து அழுது நிற்க, இராமன் அவனைத்தழுவி ஆறுதல் கூறியபின் ''மல்லுயர் தோளினான் வலியனோ?'' என்றான். தந்தையார் விண்ணுற்றார் என்று பரதன் கூறியதும் இராமன்

அழுது புலம்பலானான். இதற்குக் கம்பர் 7 பாடல்கள் அமைத்துள்ளார், தந்தையார் இறந்த செய்தியை இராமன் சீதைக்கு அறிவித்தான். நேர்ந்தது என்ன? ''துளங்கினாள்—கண் கலுழி சான்றிட—நிலந் தடவி—ஏங்கினாள்.''

''அன்னமும் துயர்க்கடல் அடிவைத்தாள் அரோ''
என்று அழகாக நாகரிகம் கற்பிக்கிறார் கம்பர்.

ஆரண்ய காண்டத்தில் விராதன் தன்னைப் பற்றிய போது ''கூண்டுக்கிளிபோல்'' கதறியிருந்தாள் சீதை. பெண் மான்வந்து உலாவக்கண்டு 'ஆணிப்பொன்னின் ஆகியது. காணத்தகும்'' என்று அறிவித்து, ''மறையும் அது!'' என அதனைப் பற்றும்படி தூண்டி, ''நாயக பற்றி நல்கலை போலும் எனக் கிளியின், மொழிந்து நின்றாள். வந்த இராவண சந்நியாசி வஞ்சகன், காமி என்று அறிந்த பின்னரே சீதை கடிந்து முறையோடு அதிகம் பேசுகின்றாள் ''கிளி பேச்சு பேச்சு என்னும்; பெரும்பூனை வந்தக்கால் கீச்சு, கீச்சு என்னும்''. அவ்வாறே நன்மாதர் ஒன்றிரண்டு சொற்களே பேசுவர்; தமக்கு வரும் தீங்கினைத் தடுக்க—தம்மைத் தற்காக்க-மானம் புரக்கப் பலபேசி முயல்வர். இது நாடகத் தலைவியரால் உலகுக்குக் கம்பர் காட்டும் பாடம்; மெய்ப்பாட்டால் பேசவேண்டும், வாய்ச்சொல் அதிகம் ஆகாது. பொன்கலம் ஒலிக்காது; வெண்கலம் ஒலிமிகும்.

1980இல் சங்கராபரணம் என ஒரு திரைப்படம் பலர் பாராட்டுக்கும் உரியதானது. காரணம் ஆங்குற்ற கலை நுட்பமே; அக்கலை நுட்பங்களிற் சிறந்தது தலைவியை வாய் திறவாமல் மெய்ப்பாடுகளினால் நடிக்க வைத்ததே.

கம்பர், நாடக உரையில் இந்நுட்பத்தை நமக்கு அறிவித்துள்ளார். இனியேனும் நம் இயக்கர்கள் தம் படங்களில் நாடகங்களில் இந்நாகரிகத்தையும் புகுத்துவார்களாக. இனி ஒப்பனை பற்றிச் சிறிது காண்போம்.

ஒப்பனை

ஒப்பனை உருவத்தோடு அமைந்தது; அது "உருவம்", "உரை" பற்றிய கட்டுரைப்பாக்களில் கலந்து நிற்கிறது.

ஆதலின் அதுபற்றி அதிகம் எழுதி வளர்க்காமல் சில செய்திகள் காட்டுவோம்.

சீதைக்கு மணப்பெண் ஒப்பனை சிகழிகை: அளகபந்தி (மயிர் மாட்டி) குழை பொன் வடங்கன் முத்தாரம் பவள மாலை தலைமாலை கர்னப்பூ சின்னப்பூ குழை பாதசரம் சிலம்பு நூபுரம் கடகம் காப்பு மேகலை பட்டாடை திலகம் கண்ணுக்குமை பொற்சுண்ணம் ஐயவி இத்தனையும் சேர்த்து அயினிசுற்றி, நீர் பூ விளக்கு வைத்துத் தெய்வம் பராவுதல்.

இராமனுக்கு ஒப்பனை சிகழிகை சுழியம் குழை மகர குண்டலம் வீரபட்டம் கழுத்துவடம் வாகுவலயம் முத்து வடம் கடகம் கழல் பதக்கம் உத்தரீயம் நூல் வெண்பட்டு உதரபந்தனம் முத்துமாலை, உடைவாள் திலகம் கவரி இரட்டல் குடை நிழல்.

போர்க்காலத்தில் : வயிரவாள் கவசம் கோதை விரல் புட்டில் வில் அம்புறாத்தூணி

இராவணன் போர் ஒப்பனை: பொற்கவசம் கச்சுவலப் புறத்தில் வாள் பீதாம்பரம் கொய்சகம் எயிற்று அரவம் உடை வாள் சதங்கை கழல் கோதை புட்டில் வாகுவலயம் குண்டலம், முத்துவடம் வீரபட்டம் தூணி, வாகை மாலை.

ஆயுதங்கள்: படைகளைப்பற்றி வகைவகையாகக் கூறு கிறார் கம்பர். அது ஒரு தனிப்பெருங்கலை. அயில் அங்குசம் அரம் ஏழு ஈட்டி உலக்கை கழு கவண் கல் கதை கன்னகம் கணை கப்பணம் கணையம் கிடுகு கேடகம் குந்தம் குலிசம் கோல் சரம் சக்கரம் சங்கு சுரிகைசூலம் தண்டு தாரை

தோட்டி தோமரம் நாஞ்சில் பசழி பரிகம் பாசம் பிண்டிபாலம் மழு முசுண்டி முற்கரம் முட்கோல் வலயம் வாள் வில் விட்டேறு.

போர்க் கருவிகளைப் பற்றிக் குறித்தவாறே இசைக் கருவிகள் பற்றியும் வகைவகையாகக் குறிப்பிடுகிறார்.

இசைக்கருவி:பறை- ஆகுளி காளம் கழல் சங்கு சில்லரி தண்ணுமை நாபுரம் நூல் பறை யம்பை பாண்டில் பாத சாலகம் பீலி பேரிகை முரசம் முழவு யாழ் வயிர் வங்கியம் வீணை வேய்—

இப்பெயர்களை ஆங்காங்கு குறிப்பிட்டு, இசைபயில் முறை, அதன் நயன் விளைவுகளையும் ஒரு கலையாகத் தருகிறார் கம்பர். இனிப் "புறக்காட்சி" பற்றிக் காண்போம்.

பெருநகர்: உயர்மதில், அதில் பொறிகள், நாஞ்சில்—புறா பிற பறவைகள்—வாயில். மதிலைச்சூழ அகழி, அதில் முதலைகள் நீர்ப்பூக்கள்; சிறு ஓடைகள் மீன் அன்னம் தாமரைகள். அதற்கு வெளியில் அடர்ந்த காடு— இருள்.

நகரில் உயர்ந்த பொன்மாடங்கள், மீது வாழைத் தோட்டம்போல் கொடிகள். மாடத்துத்தூண் மேல் போதிகை, கிழ்பாடகம்—இவற்றில் சித்திரவேலை: மாடங்களில் புகை வருதல், அங்கு மேகம் படிதல்·பந்தாடு இடம், நடனமேடை படிப்பு இடம், ஓதுமிடம், சிலம்பக்கூடம், திறை மண்டபம், பட்டி மன்றம், நீச்சல்குளம், பயிற்சிக் களரிகள், மன்றுகள், குன்றுகள், முன்றில்கள், பக்தர்கள். வீதிகள், அங்கு யானை குதிரைகள் தேர்வீரர் சாரி போதல்— தோரணங்கள் விளக்குகள்—ஆடல்பாடல் விளையாட்டுகள் ஊஞ்சலாடல் வட்டாடல் சூதாடல்—சோலைகள் செடிகொடிகள் வண்ணப் பூக்கள்— "சாளரந்தோறும்" மாதர் முகங்கள்—இவற்றால் பல்வேறு கலைநயங் காட்டுகிறார் கம்பர்.

மலைக்காட்சி கொடுமுடிகள், அருவிகள், தேவதாரு சந்தனம் வேங்கை கோங்கு ஏலம் இலவங்கம் தமாலம் அசோகு சண்பகம் கமுகு குங்குமம் முதலிய பெருமரங்கள்—யானை சிங்கம் புலி கடமா குதிரை சிறுத்தை—இவற்றின் குட்டிகள்—பெருவண்டுகள்—பெரும் பாம்புகள் தேன்கூடுகள் கடந்தைகள் தினைப்புனங்கள் வேடர்கள்—அரம்பையர் தவசிகள்—நிலா வானவில் மழை ஓசை சுனை—தேன் எடுத்தல் கிழங்கு கல்லல் தினையிடித்தல்—வன்பறவைகள் பல வண்ணப்பூக்கள் மேகம்படிதல் இவற்றைக் கலை நயத்துடன் விளக்குகிறார் கம்பர்.

சோலைக்காட்சி: மா கரும்பு கமுகு அசோகு காந்தள் செருந்தி குரவம் பிடவம் தளவம் புன்னை வேய் வாழை செந்நெல்—நீரோடை நீர்மடை மதகு அன்னம் நாரை குயில் கிளி செம்போத்து கிளி மான் எருமை குரங்கு தும்பி வண்டு தாமரைக்குளம் தாமரை நீலம் வாளை மீன் துள்ளல்—மேகத்திரட்சி—இவற்றால் சோலைப் பொலிவு காட்டுகிறார் கம்பர்.

புறக்காட்சிபற்றி விரிப்பின் இச்சிறு நூல் இடந்தராது.

அதிசய கலைநுட்பங்கள் சில

திரைப்படங்களில் நாம் வியக்கத்தக்க முறையில் பல காட்சிகள் தருகிறார்கள். அவர்கட்குப் பெருவிருந்தாகக் கம்பர் தமது நாடகத்தில் பல அரிய கலைநுட்பங்கள் அமைத்திருக்கிறார். அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

1. இராமன், மிதிலையில் சீதையைக் கண்டபின்
‘‘சிந்தையும் நிறையும் மெய்நலனும் பின் செல்ல
மைந்தனும் முனியொடு மறையப் போயினான்’’
(மிதிலைக் காட்சி

''மெய் நலன் பின் செல''—இதனை உணர்ந்தவர் யாவர்? உரை நூல் பார்த்து உணர்மின். சகுந்தலையைப் பிரிந்து துச்யந்தன் புறப்பட; அவள் தன் காலில் தைத்த முள்ளை எடுப்பதுபோலும், முட்செடியில் மாட்டியசேலையை எடுப்பதுபோலும் ஒரு சாக்குக் காட்டித் திரும்பி அவனைப் பார்த்தாள். இது காளிதாசரின் நாடக நயம். கம்பர் முனி பின்னர் சென்ற இராமன் முகந்திரும்பிச் சீதையை நோக்கி னான் என்பதை நனி நாகரிகமாகத்; தலைவனுக்கு இழிவு வெளிப்படையாகக் கூறாமல் ''மெய் நலன் பின்சென்றது'' எனக் கூறினார். நடித்துப் பார்மின். மெய்நலன்—முகப் பொலிவு, பார்வை.

2. சீதை

திருமண மண்டபத்துள் சீதை இராமன் இருவரும் இருக் கிறார்கள். சீதை நாணத்தால், இராமன் அழகைக்

"கைவளை திருத்துபு கடைக்கண்ணின் நுகர்ந்தாள்"
(கோலங்காண்)

இஃது காளிதாசரின் கற்பனைச் சாயல்

3. பெண்களின் இடை

இராமன் உலாவருகிறான். பெண்கள் கூட்டம் திரண்டு நிற்கிறது. பார்க்க முடியாத ஒரு சிறுமி மாதர்களின் இடுப்பு இடையில் உற்ற வெளியூடு பார்த்துக் களித்தாள்.

''மருங்குலின் வெளிகளூடே வள்ளலை நோக்குகிறாள்"
(உலாவியல்)

4. மனத்துள் உரு

ஒருவன் பூப்பறிக்க மரத்தில் ஏறுகிறான். அவன் மனத் துள், மரத்தின் அடியில் உள்ள ஒருவள் உருவம் ஏறி நிற் கிறது.

நாறு பூங்குழல் நன்னுதல்—புன்னைமேல்
ஏறினான் மனத்து உம்பர் சென்று ஏறினாள். (பூக்கொய்)

5. நீரில் நீந்துதல்

பாளையே விரிந்ததென்னப் புனிலிடை நீந்துவாரும்''
(நீர் விளையாட்டு)

பாளை நிறத்துப் பொன்மேனி—பாளை நெட்டி நிறத்தில் பச்சை ஆடை ஓரமாக—அசையாமல் நீரில் மலர்ந்து படுத்து நீந்தும் காட்சி. Jungle Love என்னும் ஆங்கிலத் திரைப்படம் இக் காட்சியை விளக்கி நிற்கும்.

6. நீரில்அன்னம்; மாதர் சிலம்பொலி

மலையில் நீர் சலசல என இறங்கி ஓட, அதில் அன்னம் செட்டை அடித்து இறங்கி விளையாடுகிறது. இது மேடையில் சதங்கை ஒலியுடன் நாட்டிய மாதர் அலாரிப்பு ஆடுதல்போல்

அரங்கில் ஆடுவார் சிலம்பின்—
அன்னங்கள் இறங்கு வார்புனல்சரயு'' (கையடை)

7. இராமன் அழகில் மருட்சி

தோள் கண்டார் தோளே கண்டார்
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கை கண் டாரும் அஃதே:
தத்தம் சமயத்துத் தெய்வ
உருவு கண்டதனை ஒத்தார்.

8. மருட்சி நோக்கு

பெருமகன் திருமணக் கோலம் பூண்டனன்*
திருமண மண்டபம் சேர்தற் காகத்தான்
ஒருபெருந் தேரின் அமர்ந்தனன் நகர்ந்தனன்
இருந்தவர் யாவரும் இமையவர் ஆயினர்

(கடிமணம்)

9 மாதர் குழு

மலையின் மயில் கூட்டம்போல், இராவணன் பாங்கர் மாதர் குழு.

"மங்கையர் ஈட்டம், மால்வரை தழீஇய
மயில்களின் குழுவினை மயக்க" (காட்சி)

10. தேவமாதரும் உலகமாதரும்

ஐயன் வில்லை வளைத்ததும், ஆர்வத்தால்*
தெய்வ மாதர்கள் மண்ணுல குற்றனர்;
வைய மாதரைத் தழுவி நின்றவர்
இமைக்கக் மண்டதும் ஏகினர் அப்பாலாய்.
தேவர்கள்கண் இமைக்காது, பொம்மைக் கண்போன்றது
(கார்முகப் படலம்)

11. கட்டடப் பொலிவு

தூயநற் பளிங்கினிற் செய்த சுவர்களில்—
மேய தலத்தில்—தூணில்—மற்றச் சுற்றில்—எல்லாம்
சாயை நேர் தோன்ற; கண்டோர் மருள்வுற—
ஆயிரம் மைந்தர் வந்தார் என நனி விளங்கிற்று அவ்வூர்
(கிட்கிந்தை)

12. பளிங்குச் சுவர்

மழலை நன்மொழி கிளிக்கு இருந்து அளிக்கின்ற மகளிர்
சுழலும் நன்னெடுந் தடமணச் சுவர்தோறும் தோன்றும்
நிழலும் தம்மையும் வேற்றுமை தெரிகிலா நிலைய
(ஊர் தேடு)

13. மாளிகைப் பொலிவு

மெல்லென் பளிங்கினால் விளங்குகின்ற மாளிகை*
நீரினால் இயன்றதென்ன: நிழல் எழுகின்ற நீர்மை
மற்றோர் சோதி சேர்தலும் தெரிவ: இன்றேல் இன்றே
(இலங்கை காண்)

14. பளிங்குத் தளம்

மாலுறு மனத்தன் ஆயினும் அரக்கன்*
அடி எடுத் தயலுற வைக்க—
கால்களில் அணிந்த கழல்களின் மணி ஒளி
தலரயினிற் றவழ்ந்து நீள் உலாவும் (நிந்தனை)

15. கடல் அலையும் சாமரையும்

பாற்கடல் திரை எழுந்து—கருமலைமீது ஓங்கிப் பரந்தது ஒப்ப*
சீர்உற வெண்சா மரைகள்மேல் வீச திகழ்ந்தனன்
இராவண்ன் கொலுவில்
(நிந்தனை)

15. பளிங்கில் ஒளி

திருமகள் சிதை நடப்பதின், அடிகள்*
வருத்தம் உறும்என நிலமகள் வருந்தி,
இளந்தளிர் நிலத்தே பரப்பிய தொப்ப—
சிலம்பின் மணிச்சுடர் தவழ நடந்தாள் (கோலங்கண்)

17 சந்திர உதயம்

வெள்ளிக் கும்பம் மீதாகக்*
பொன்னிறப் பாளை விரித்து வைத்த
தன்மை யாகும், நிலவொளியால்
திங்கள் எழுந்த பெருங்காட்சி.

உவகைப் படைத்துப் பலகாலம்
ஆக, அழுக்குஉற்றதைப் போக்க—
சுண்ணம் திற்ற வந்தது ஒப்பத்
திங்கள் எழுந்தது தோன்றிவது*

18. ஒன்று பல ஆதல்

இராமன் தேர் ஏறி முடிசூட வருகிறான். வீதியில் மக்கள் குழுமி ஆர்வத்துடன் நோக்குகிறார்கள். அவர்கள் எங்கும் இராமனைக் காண்கிறார்கள்.

''பொருவரு தேரில் செல்ல—புறத்து, இடை
கண்டார் ஒத்தார்''
''செங்கணும் கரியகோல மேனியும் தேரும் ஆகி
எங்கணும் தோன்றுகின்றான் எனைவரோ இராமன்?
என்பார்'' (கைகேசி சூழ்வினை)

19

இராமன் சீதையைப் பிரிந்த ஏக்கத்தால் இரவில் காட்டில் இருக்கும் போது -

சீதையை மறக்ககில் சிந்தை எண்ணமோ
வேதனை அரக்கர்தம் மாயச் செய்கையோ
கானகம் முழுவதும் கண்ணின் நோக்குங்கால்
சானகி உருஎனத் தோன்றும் தன்மையே.

20. ஒன்று இரண்டுவகையாக

இராவணன் சூர்ப்பநகையை நோக்கி:—
மைநின்ற வின்கன் மயில் நின்றென வந்து
இந்நின்றவள் கொல் நீ இயம்பிய சீதை?

சூர்ப்பநகை:—

செந்தாமரைக் கண்ணொடும், செங்கனி வாயினொடும்
சந்தார் தடந்தோளொடும், தாழ்தடக் கைகளோடும்
அம்தார் அகலத்தோடும், அஞ்சனக்குன்றம் என்ன
வந்தான் இவன் ஆம்-அவ்வில் இராமன்

இத்தகைய அரிய கலைநுட்பக் காட்சிகள் 1000 கொண்டது கம்ப நாடகம். நம் திரைப்பட இயக்கர்கள் கம்ப

நாடகத்தைக் கற்பார்களாயின், பல அரிய கலைநுட்பங் களைத் தமிழுலகுக்குத் தரமுடியும். அது மட்டும் அன்று, ஆபாசங்களை ஒழிக்கவும் அது வகைகாட்டும்; அதனால் அறிவுநெறி காட்டும் பெற்றி எய்துவர். கலைவளர்ச்சிக்கு இயக்கர் யாவரும் கம்ப நாடகம் கற்கவேண்டும் என்பது எம் எண்ணம்.

முடிவுரை

திரைப்படம் நாடகம் நாட்டியம் ஆடல் பாடல் கல்வி எல்லாம் எற்றுக்கு? மக்கள் இன்புற்று-மனத்தில் அமைதி கண்டு அறிவு பெற்று, அறநெறி தழுவிய வாழ்க்கை நடத்து வதற்கே-சீலம் செழிக்கவே. இதற்கு நம் நாடகம் திரைப் படங்கள் துணை செய்கின்றவா? எனின் இல்லை, இல்லை. நாடக நடிப்பினும் திரை நடிப்பு மக்களை அறவே பாழ் படுத்துகிறது. ''கல் அடிப்பட்டாலும் கண் அடி படக்கூடாது.' என்பது தமிழ்நாட்டு முதுமொழி; முன்னர் இது ஒரு ஆசார மாகக் கருதப்பட்டு வந்தது; இற்றைநாள் நிலை என்னை?

நம் திரைப்படங்களில் காதல் காட்சி என ஒன்று அமைத்துச் சுற்றிச் சுற்றி ஓடுவதும், வளைத்துப் பிடிப்பதும், கட்டிள மங்கை ஒருத்தியைக் காளை ஒருவன் கசக்கிப் பிழிந்து தூக்கி அணைத்துத் துவைப்பதையும் காணுகிறோம். அங்கு உடை நடை துடை மடை இவற்றால் மாலுறுத்து கின்றனர். இந்நிகழ்ச்சிக்குக் காரணம் கலையா? விலையா? குறுந்தொகை 40

எந்தையும் நுந்தையும் யாவர் யாவரோ?*
எந்தாயும் நுந்தாயும் யாவர் யாவரோ?
யானும் நீயும் எவ்வாறு இணைந்தோம்!
செம்புலப் புனல் போல்
ஒன்றுடன் ஒன்று ஒன்றிஒன் றானோம்

என்ற கருத்துப்படி—இவள் தாய் தந்தையர் வேறு, அவன் தாய் தந்தையர் வேறு; இருவரும் ஓடிப் பாடிக் கூடிக் களிக்கிறார்கள்." தொட்டால் என்ன, நட்டால் என்ன'' என்று பாடி நாட்டுக்குப் புதிய அறங்கற்பிக்கிறார்கள்; கால் அரை முதுகு முகத்தில் ஒட்டி ரசிக்கிறார்கள். தெருக்களில் ஆடு மாடு கோழி குருவி குக்கல்களிடம் நாம் காணும் களியாட்டம் எல்லாம் மக்களிடம் அம்பலத்தில் காண்கிறோம். அறையில் அந்தரங்கத்தில் இருக்க வேண்டியவற்றை வெளியில் அம்பலத்தில் ஏற்றி வைத்தால், அது மக்கள் செயலன்று, மாக்கள் செயலாகும். கம்பன் நாகரிக நாடகம் நடத்துகின்றான், தலைவன் தலைவி ஓடியாடக் கற்பிக்கவில்லை; ஆனால் திறம்படக் காதல் காட்சி காட்டியுள்ளான்.

கோதாவரிக் கரையில்—வனத்துள்-சித்திரக் கூடத்துள்-கங்கை நீர்ப்படகில்-அமைந்துள்ள சிருங்காரக் காட்சிக்கு இணை உண்டோ?

நாடகம் ஆடிய பண்டைய மாதர்கள் மேடையில் ஆடவரைத் தொட்டுப் பழக மாட்டார்கள். இதனால் நாடகம் பார்க்கிறவர்கள் "இவள் பிறர் தொட இடங்கொடுக்க மாட்டாள்; நாடகத்துக்கு ஒப்பந்தம் செய்யும் போதே 'என்னைத் தொடக் கூடாது' என்று பணம் வாங்குவாளாம்'' என்று நடிகையைப் பற்றிச் சிறந்த முறையிற் பேசிக் களங்கமற்றுச் செல்வார்கள். இன்று திரைப்படம் பார்ப்பவர் என்ன எண்ணுகிறார்கள்? "நாமும் ஆடினால் நல்ல பணம் வரும், பேர் வரும்; முடியை இடையை அடியைத் தொட்டால் தொட்டு விட்டுப் போகட்டும்; என்ன கெட்டது?'' என்று "மெய்ப் பொருள்" கண்டவராக, எதற்கும் துணிகின்றார்கள்

காவியங்கள் ஓவியங்கள் சித்திரங்கள் சிறுகதைகள் ஆபாசந் தரவில்லையா? என்று படத்தொழிலாளர் வினாவுகின்றனர். காவிய-ஓவிய சித்திர- சிறுகதை தரும் இன்பம்

கணநேரத்தில் மறைந்து போகிறது: கருத்தைச் சிதையா; பணத்துக்காக நெற்பிறழச் செய்யா. திரைப்படச் செயலோ அந்நடிகருடன் தம்மை ஒப்பிடவும், அவர் போல் நடிக்கவும், வாழ்க்கைக்கு எம்முறையிலும் ஆக்கந்தேடவும் தூண்டுகிறது; ஆதலின் படங்கள் நல்ல நேர் முறையில் அறந்தழுவி நிற்க வேண்டியது அவசியமாகிறது.

பாரதநாடு பண்பாடு உடையது என்று தொன்றுதொட்டும் போற்றப்பட்டு வருகிறது. நம்நாட்டு வரலாற்றில் இராச புத்திர ராணி பத்மினியைப் பற்றிப் படித்திருக்கிறோம். அலாவுத்தீன் அவள் அழகு பற்றிக் கேள்விப்பட்டு அவள் மீது மையல் கொண்டான், அவளை அணைக்க விரும்பினான், அவள் உடன் படவில்லை; அவளைப் பார்க்க விரும்பினான், அதற்கும் அவள் ஒப்பவில்லை; அவள் உருவத்தைக் கண்ணாடியிலேனும் காட்ட வேண்டினான், அவள் மறுத்தாள்; இறுதியில் போர் நடந்தது: கோட்டையைப் பிடித்தான். இராசபுத்திர மாதர் அனைவரும் தீக் குளித்தனர். இக்கதையிற் பெருமை கொள்கிறோம்; இது வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. ஏன்? இந்திய மாதர் உயிரினும் மானத்தை ஓம்புவர் என்று கற்பித்து, நம்மைப் பண்படுத்த; "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

''செயற்கு அரிய செய்வார் பெரியர்''.

நம் கலைஞர்கள் கற்பிக்கும் நாகரிகம் எத்தகைத்து? 1980ஆம் ஆண்டு இறுதி டிசம்பர் மாதம் இங்கிலாந்திலிருந்து சார்லசு இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். அவர் படப் பிடிப்பு பார்க்க விரும்பினார். பம்பாயில் ஒரு குடியத்துள் சென்றார். நேர்ந்தது என்ன? பத்மினி என்னும் நடிகை அவரை வலிய முத்தமிட்டு இன்புற்றாள்; வரவேற்றாள். இது நமக்கு இழிவா, புகழா? என்பதை நீங்களே முடிவுகட்டுங்கள். அரசர் மோப்ப விரும்பி, இவள் மறுத்திருப்பின் அஃது

இந்தியாவுக்கு அழியாப் புகழாக நிலைத்திருக்கும். அரசர் கன்னத்தில் இவள் இதழின் செம்மை பதிந்ததாம்! அவர் அதனைப் பொருட்படுத்தாமல் ''உங்கள் படுக்கையறையில் எப்படி நடந்து கொள்வீர்கள்?'' என்று கிண்டலாகக் கேட்டாராம்: அறிவு மிக்க கேள்வி! இதற்குமேல் இதனை விரித்தால் மாசு பெருகும் ஆதலின், நிறுத்துவோம். மேடையிலும் திரையிலும் நிர்வாணமாகத் தோன்றுவதும் குட்டி வினசு எனப் படம் கொடுப்பதும் நம்மை இழிவுக்கும் அழிவுக்கும் ஆற்றுப்படுத்தும்.

தையலர் என்னும் மேலை நாட்டுப் புகழ்பெற்ற நடிகை 6 முறை மணந்ததாகவும், ஆறாம் கணவர் மிக அன்புடையவர் என்றும், தம் புகழ் பரப்புகிறார். இதுஒக்குமோ நமக்கு? ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த கொள்கையைப் பரப்புவது கலைஞரின் கடமையாதல் வேண்டும். கதைக்கொரு கணவன் வாய்ப்பதுபோல் வாழ்வில் ஆண்டுக்கு ஒரு கணவன் வாய்ப்பின் வாழ்க்கை என்னாம்? விலங்கு வாழ்க்கையே ''எத்தனைபேர் நட்ட-எத்தனை பேர் தொட்ட—எத்தனைபேர் பற்றி இழுத்த—''என்று பாடிய பட்டினத்தடிகள் இத்தகைய செய்திகளையும், நம் பத்திரிகைகளில் வரும் நடிகையர் படங்களையும் இன்றிருந்து பார்ப்பாராயின்

கட்டிப் பிடித்துக் கசக்கிப் பிழிந்தவுடல்,
விட்டிடத் தக்கதிவ் வாழ்வு

என்றே அப்பாடலை முடித்திருப்பார்.

ஒரு கணவன் அவன் மனைவி-தம் பெற்றோர், தம் மக்கள் காணத் தழுவுவதில்லை, முத்துவதில்லை, சேர்ந்து படுப்பதில்லை. மருத்தரிடம் செல்லும் மாது திரைக்குள் மறைந்தே அவரிடம் தன் உடலியலை அறிவிக்கிறாள்.

ஆனால் நடிகர் நடிகையர் தம் பெற்றோர் காண' உடன் பிறந்தார் காண, தம் மக்கள் காண, உற்றார் காண, ஊரார் காண, உலகோர் காண எல்லாம் துறந்துநின்று, அதனை எழுத்தில் நிலைக்க வைக்கிறார்கள், வேண்டாம் இந்தப் புரட்சி நடிப்பு.

''தெய்வந் தொழாள், கணவற்றொழுது
எழுவாள்'' என்றார் வள்ளுவர்.

கண்ணகி மாரனைத் தொழுவது ''மரபு அன்று'' என மறுத்ததாக இளங்கோ நாகரிகங் கற்பித்தார். வான்மீகி சீதையை இராவணன் அணைத்து எடுத்துச் சென்றான் என்று பன்முறை கூற; கம்பர் சீதையைத் தொடாத நிலை யாகக், கதையை மாற்றி எழுதினார். இந்த முறைக் கல்வி எற்றுக்கு? மக்களுக்கு ஒரு நல்வழி காட்டவே, நாட்டில் நல் வாழ்வு நிறுவவே?

தமிழ் மக்களிடம் ஒரு பெருங்குறை: தாம் உண்ணாது ''செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருத்தல்''. அவ்வாறே வாழ்வின் பிறநெறியிலும்; தமிழிலுள்ள புற நானூறு கம்பன் திருவள்ளுவர் ஆத்திசூடி ஆசாரக்கோவை சிலம்பு மேகலை கற்பிக்கும் நீதிகளை எடுத்துப்பேச மாட்டார்; பிறர் பேசின் கேட்டு இன்புறவுமாட்டார். வட மொழிச் சுலோகம் சில காதில் விழின் மருண்டு இன்புறுவர். நாடகத்துக்குச் சான்றாகச் சிலம்பு கம்பர் நயங்களைக்கூறின் உப்பு புளிபோல் இருக்கும்; காளிதாசர் சகுந்தலம் பற்றிக் கூறின் ''பாலொடு தேன்கலந்த'' பான்மையாகும்: உண்மையை உன்னி ஆய்வது கிடையாது.

சகுந்தலா நாடகம் நடிப்புக்கு ஒரு சிறந்த நாடகம்; பல நுட்பங்கள் கொண்டது. அறிவூட்டும் முறையில், ஒழுக்க முறையில் அது பிழைபட்டது: கதையின் நாயகன் துச்யந்த

மன்னன். முனிவர் ஆச்சிரமத்துள் வந்தான், கன்னியருடன் இருந்து பேசினான், ஆங்கு சகுந்தலையைக் கற்பழித்துச் சென்றான். யார்? அரசன். எங்கு? ஆச்சிரமத்துள்; யாரை? முனிவர் மகளை. இது மன்னவன் செய்யத் தக்க காரியமா? இது அரசமுறைக்கு இழுக்கு கற்பிப்பதாக உள்ளது; அரசர்கள் முறைகெட்டு அலைவார்கள் என்று பாடம் கற்பிக்கிறது. இத்தகைய இடங்களைக் கம்பர் நாகரிகம் ஆக்குவர். தசரதர் கேகயனிடம் கைகேசி மகனுக்கே அரச பட்டம் என்றுகூறி, மணந்ததைக் கம்பர் மறைத்தார்: ஏன்? அது அவனுக்கு இழுக்கு ஆதலின்: சீதையைத் தொடாது எடுத்ததாகக்கதை கட்டினார். ஏன்? நாகரிகம் கற்பிக்க.

காந்தியடிகள்

காந்தியடிகள் அரிச்சந்திர நாடகம் பார்த்தார். ''உண்மையே பேசு'' என்ற கருத்தை வற்புறுத்துவது அந் நாடகம். அக்கருத்தை வற்புறுத்த அதில் பல கற்பனைகள் உள. அவற்றையெல்லாம் பார்த்து ''உண்மையே பேச வேண்டும்'' என உறுதிகொண்டார். இம்முறையில், நமது நாடகங்களும் திரைப்படங்களும் நம்மை நன்னெறியிற் செலுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

நாம் பார்ப்பன, நாம் கேட்பன நம்மை நல்வழியில் நடத்துவனவாக இருத்தல் வேண்டும். வானொலி இசை கேட்டுப் பலர் அதேபோல் இசை பயில்கிறார்கள். திரைப்பட ஆட்டங்கண்டு, சிறுவர் சிறுமியர் அஃதேபோல் ஆடு கிறார்கல். நெறிதவறிய ஆட்டங்கள் முதலில் விளையாட் டாகத் தோன்றிப், பின்னர் வழக்கத்தில் நடைமுறையாகி விடும்: ஆதலின் நம் கதை எழுதுவோர்களும் படம் தருவோர்களும் நாட்டு நலன் கருதி நல்ல—நாகரிகமான—அறிவுக்கு ஏற்ற நலந்தரு ஆக்கவினைகள்—ஆற்றுதல் வேண்டும்

நாடகம், நடிப்பு, நடனம் ஆகிய கலைகள் எல்லாம் ஆட்டும் பாட்டும் அழகும் வளர அல்ல; அழகினால் இனிய முறையில் அறிவு, ஒழுக்கம் வளர்வதற்கே. அம்முறையிற் கம்பன் யாவரினும் சிறந்த கலைஞன்: கம்பராமாயணம் ஒரு தலைசிறந்த நாடகநூல். நம் நாட்டு நடிகர் நடிகையர் டைரக்டர்கள், மற்றும் அறிவை நாடும் யாவரும் கற்க வேண்டிய ஒரு தனிப்பெருமை கொண்டது கம்ப நாடகம். தமிழர் யாவரும் கம்பனில் திளைத்தல் வேண்டும், அவன் புகழ் பரப்பல் வேண்டும்; அவனை உலகுக்கு அறிவித்தல் வேண்டும், அவன் வழி நிற்றல் வேண்டும், அஃதே நாகரிக வாழ்வு.

வாழ்க கம்பநாடகம்!

வாழ்க கம்பன் கலை!

வாழ்க தமிழ்மொழி!

வாழ்க வையகம்!

wrapper printed by :
prabhu printing house, madras-600 017.